பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

விலை ரூபா. 7.00

VALAMPURI

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 14 | திங்கட்கிழமை | (30.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 255

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# லொறி தடம்புரண்டதில் பக்தர்கள் 16 பேர் காயம்

## செல்வச்சந்நிதியில் இருந்து திரும்பும் வழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மண்டான் பகுதியில் நேற்று மாலை லொறி ஒன்று தடம்புரண்டதில் 16 பேர் படுகாயமடைந்தனர்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும்போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது வரணி, இயற்றாலை பகுதியைச் சேர்ந்தவர்கள் பயணித்த லொறியே தடம்புரண்டுள்ளது.

காயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஏழு பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஞானராசா பிரணவன் (வயது 3), ஞானராசா செல்வராசா (வயது 42), ஞானகுலசேகரம் இரத்தினசீலன் (வயது 16), கிருஸ்ணபிள்ளை கிருஷ்ணரூபன் (வயது 29), தர்மராசா பகீர்தன் (வயது 10), மித்திரன் கஸ்தூரி (வயது 11), நடராசா பிரசாந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களாகச் செயற்பட்ட சகல தமிழ் சிங்கள அரசாங்க பாடசாலைகளும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படுகிறது.

அதேநேரம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களாகச் செயற்படாத தமிழ் சிங்கள பாடசாலைகள் யாவும் நாளை மறுதினம் புதன்கிழமை திறக்கப்படவுள்ளது.

இப் பாடசாலைகள் யாவும் இந்த ஆண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம்; பொருளாதாரம் படுகுழியில்

# சர்வதேச நிதியுதவிகள் நிறுத்தப்படும் அபாயம்!

## கூட்டமைப்பு எம்.பிகள் இன்று கிளிநொச்சிக்கு

(கிளிநொச்சி)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்திக்கவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் இடம்பெறவுள்ள இச் சந்திப்பின்போது, தமிழர் தாயகப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம)

## சர்வதேச நிதிநிறுவனங்கள் எச்சரிக்கை

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் இலங்கையின் அபிவிருத்திக்காக சர்வதேச நாணய நிதியத்தினாலும் உலக வங்கியினாலும் வழங்கப்படவிருந்த 282 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அந் நிறுவனங்கள் மீளப்பெறப் போவதாக சர்வதேச நிதிக் கண்காணிப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜெருமிகாட்டர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித நிலை அடைந்துள்ள நிலையில் இலங்கை அரசு தனது பொருளாதார கொள்கையை தெளிவான முறையில் முன்வைக்காமையினாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை தென்படாத நிலையிலேயே மேற்கண்ட அபாய அறிவிப்பை ஜெருமிகாட்டர் வெளியிட்டுள்ளார்.

அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்ட பின் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருக்கும் என்ற சர்வதேச உலகத்தின் நம்பிக்கையை அரசு இழந்துள்ளதாலேயே சர்வதேச நாணயநிதிப் பிரதிநிதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தையும் மகனும் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கதிர்காமம் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 12.45 மணியளவில் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனுமே சுட்டுக் கொல்லப்பட்டதாக கதிர்காமம் பொலிஸ் நிலைய பதில் அதிகாரி தெரிவித்தார். இக் கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. ஆயினும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார். (08)

# மோசமான நிலையை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கிறது

## டாக்டர் ஜெயலத் கவலை

(கொழும்பு)

நாட்டில் இன்று சட்டத்தை சுதந்திரமாக பிரயோகிக்க முடியாததன் காரணமாக நாட்டில் அபாயகரமான சூழல் தோன்றியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள இந் நிலைமைக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

குறிப்பாக கடந்த நாலு மாத காலத்தில் நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்திருக்கின்றது. இவற்றில் பாரிய குற்றச் செயல்களான மனிதப் படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், கொள்ளைகள், என்பன அதிகரித்து, நாடு மோசமான கட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசுவதற்கு தரகர்கள் அவசியமில்லை

## ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளுடன் நாம் நடாத்துவதற்கு இடைத்தரகர்களின் சேவை அவசியமில்லை.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் ஜே.வி.பியினர் பேச விரும்பினால், அதற்கான ஏற்பாடுகளைத் தான் செய்யத் தயார் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான பெ. சந்திரசேகரன் கூறியிருப்பது குறித்து ஊடகம் ஒன்றிற்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாம் புலிகளுடன் பேசுவதனால் நேரடியாகவே அவர்களை அழைத்துப் பேசுவோம். அதற்கு எவரும் தரகர் வேலை செய்யத் தேவையில்லை என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (ற-க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள்
சைவசமயம் - I

# மருத்துவபீட மாணவி விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவின் சகோதரன், துணைவேந்தரின் அலுவலகத்திற்குள் இருந்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

புஸ்பமாலாவின் விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் அளித்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை எனக் கூறியே அவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

தனது சகோதரியின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையும் தான் துணைவேந்தரின் அலுவலகத்தைவிட்டு வெளியேறப் போவதில்லை என அவர் கூறினார்.

இதேவேளை, நேற்று நடைபெற்ற பல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாகிஸ்தான் 17 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி

அவுஸ்திரேலிய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஆம்ஸ்ரெல்வினில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 17ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது.



அதன்படி 50ஓவர்கள் முடிவில் 7 விக்கெற்றுக்களை இழந்து 192ஓடடங்களை அவுஸ்திரேலிய அணி பெற்றது.

துடுப்பாட்டத்தில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மத்தியூஹெய்டன் 59ஓட்டங்களையும் டெரல் லீமன் 40ஓட்டங்களையும், அன்ரூ சைமன்ஸ் 36ஓட்டங்களையும் அவுஸ்திரேலிய அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சொய்ப் அக்தர் 40 ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுகளை வீழ்த்தினார். அத்துடன், முஹமட் சபி, சபீர் அஹமட்,அப்துல் ரஸாக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினை வீழ்த்தினர்.

193 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 47.1 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் யூசுப் யுகானா 43ஓட்டங்களையும், சொய்ப் மாலிக் 36 ஓட்டங்களையும், அப்துல் ரஸாக் 26 ஓட்டங்களையும் பெற்று அணியினைத் திடமான நிலைக்கு இட்டுச்சென்ற போதும் அணியினால் வெற்றிபெற முடியாமல்போனது.

பந்துவீச்சில் அன்ரூ சைமன்ஸ், டெரல்லீமன் ஆகியோர் தலா இரு விக்கெற்றுக்களையும், கிளைன் மக்ராத், ஜேசன் கிலெஸ்பி, பிரெட்லீ மற்றும் பிரட் ஹொக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர். (ற-121)




எதென்ஸ் ஒலிம்பிக்கில் மகளிருக்கான 400மீற்றர் தொடர் ஓட்டத்தில், இறுதிச் சுற்றுக்கான தகுதியை எட்ட விரைகிறார் இந்தியாவின் மஞ்சித் கவுர் (இடது) கடந்தவெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற தகுதிச் சுற்றுப்போட்டியில் கே.எம்.பீனாமோள், சித்ரா கே.ஸோமன்,ராஜ்விந்தர் கவுர் ஆகியோரையும் உள்ளடக்கிய இந்தியக் குழு 3நிமிடம் 26.89வினாடிகளில் இலக்கை எட்டி மூன்றாவது இடத்தைப் பிடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.



எதென்ஸ் ஒலிம்பிக்கில் நடந்த கலைத் திறனை வெளிப்படுத்தும் ஒருங்கிணைந்த நீச்சல் போட்டியில், தங்கம்வென்ற ரஷ்ய மங்கைகள், அலங்காரமாகக் காட்சியளிக்கின்றனர்.

# அணுகு முறையை மாற்றினால் கிரிக்கெற்றில் வெற்றிபெறலாம்

## இந்திய அணிக்கு ரிச்சர்ட்ஸ் அறிவுரை

இந்தியக் கிரிக்கெற் அணி தனது அணுகுமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென கிரிக்கெற் ஜாம்பவானான முன்னாள் தென் ஆபிரிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பேரி ரிச்சாட்ஸ அறிவுரை கூறியிருக்கிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக உலகின் தலைசிறந்த இரண்டாவது அணியாக விளங்கிய இந்திய கிரிக்கெற் அணி, அண்மைக்காலங்களில் அதிகம் தோல்விகளையே சந்தித்திருக்கிறது.

ஏழு துடுப்பாட்ட வீரர்களுடன் களமிறங்கும் இந்தியாவின் தவறான அணுகுமுறையே இத்தகைய் மோஷமான தோல்விகளுக்குக காரணமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒரு காலத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகச் சிறப்பாக விளையாடிய இந்திய அணி, தற்போது தனது ரசிகர்களை ஏமாற்றி வருகிறது. வீரர்கள் களத்தில் நிலைத்து நின்று விளையாடததுடன், ஏழு துடுப்பாட்ட வீரர்கள் என்பது வெற்றிக்கான திட்டமென இந்திய கிரிக்கெற் நிர்வாகம் தீர்மானமாக இருப்பதுமே இத் தோல்விகளுக்குக் காரணம்.

ஏழு துடுப்பாட்ட வீரர்களுடன் தான் கடந்த காலங்களில் தாம் வெற்றி பெற்றிருப்பதாக அவர்கள் கூறினாலும், 2002ஆம் ஆண்டு "நோர்த்-வெஸ்ட்" கோப்பைப் போட்டியில் மாத்திரமே யுவராஜ்சிங்-முகமது கைவ் ஜோடி வெற்றியைத் தேடித்தந்தது.

அதன் பின்னர் எத்தனை போட்டிகளில் இந்த ஜோடியால் வெற்றியைப் பெறமுடிந்தது? புள்ளி விபரங்களைப் பார்த்தால் புரியும். ஏழு துடுப்பாட்ட வீரர்கள் என்ற அணுகுமுறை எவ்வளவு தவறானது என்பது அதற்குப் பதிலாக விக்கெற் காப்பாளர் மற்றும் அதிக பந்து வீச்சாளர்களுடன் அணியைப் பலப்படுத் துவதே சிறந்தது எனவும் ரிச்சர்ட்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# 12 ஆவது ஆசிய கனிஷ்ட மகளிர் கரபந்தாட்டம் இம்முறை இலங்கையில்

பன்னிரண்டாவது ஆசிய கனிஷ்ட மகளிர் கரபந்தாட்டச் சுற்றுத் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளது.

9 தசாப்தங்களின் பின்னர் இலங்கையில் சர்வதேச மட்டத்திலான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இச் சுற்றுத் தொடரில் சீனா, ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றவுள்ளதாக இலங்கைக் கரபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் மேவின் ஜே கூறே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளருக்கு இப்போட்டிகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கூறே, இசுற்றுத் தொடருக்காக ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (ற-7)

# சுசந்திக்கா முன்பு பதக்கம் வென்றமை திறமையினால் அல்ல; அதிஷ்டத்தினாலேயே!

விளையாட்டு

## ATHENS 2004 MEDALS

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 34 | 38 | 28 | 100 |
| சீனா | 31 | 17 | 14 | 62 |
| ரஷ்யா | 25 | 26 | 36 | 87 |
| அவுஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| ஜப்பான் | 15 | 10 | 12 | 37 |
| ஜேர்மனி | 14 | 15 | 18 | 47 |
| பிரான்ஸ் | 11 | 08 | 12 | 31 |
| இத்தாலி | 09 | 10 | 11 | 30 |
| பிரிட்டன் | 09 | 09 | 12 | 30 |
| கியூபா | 09 | 07 | 11 | 27 |
| உக்ரெய்ன் | 09 | 05 | 08 | 22 |
| கொரியா | 08 | 12 | 09 | 29 |
| ஹங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| றோமானியா | 08 | 05 | 06 | 19 |
| கிரீஸ் | 06 | 05 | 04 | 15 |

# ஒலிம்பிக் கமிட்டித் தலைவர்

சுசந்திக்கா ஜெயசிங்க கடந்த கால ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற்றது அதிஷ்டத்தின் காரணமாகவே அன்றி திறமையினால் அல்ல என இலங்கை ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் ஹேமசிறி பெர்ணான்டோ கூறியுள்ளார்.

தற்போது எதென்ஸில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை வீரர்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

18ஆவது கேம்பிறிஜ் போட்டிகளிலும் இன்னும் பல போட்டிகளிலும் சுசந்திக்கா பதக்கங்களைப் பெற்றபோதும், அவர் பங்குபற்றும் அநேக போட்டிகளில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வார்.

இதன் காரணமாகவும், போட்டிகளுக்கான கட்டுப்பாடுகள், விதி முறைகளை மீறி நடப்பதாலுமே அவர் இவ்வாறு கருத்துக் கூறியிருக்கிறார்.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை வீரர்களுக்கு தலைமைதாங்கிச் சென்றிருக்கும் சுசந்திக்கா ,தனக்குரிய 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவில்லை. தனது பாதத்தில் ஏற்பட்ட உபாதையை அவர் காரணமாகக் கூறியிருந்தார்.

ஆனால் சுசந்திக்கா இம்முறை பெற்ற 100 மீற்றர் ஓட்டநேரத்தகுதியைவிட கூடுதலான தகுதியை கடந்த ஒலிம்பிக் போட்டியில் பெற்றிருந்த போதும்,அவரால் அப்போட்டியில் பதக்கத்தைப்பெற முடியவில்லை.200 மீற்றர் போட்டியிலேயே அவர் பதக்கத்தைப் பெற்றிருந்தார்.

இம்முறை 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் தகுதிபெறுவதற்று அவரது ஓட்டவேகம் போதாமையே அவர் ஒலிம்பிக்கில் பங்கு பற்றாததற்கான காரணமாகும்.

இதேவேளை, இலங்கை சார்பில் போட்டிகளில் பங்குபற்றிய வீரர்களில் சுசந்திக்காவதைத் தவிர தமயந்தி தர்சா பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 38ஆவது இடத்தையும் றுவான் பிரதீப்குமார ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் 34ஆவது இடத்தையும், உயரம் பாய்தலில் மஞ்சுள குமார விஜயதேவ் 10ஆவது இடத்தையும்,ஆண்கள் 50 மீற்றர் நீச்சல் போட்டியில் சொன்றெக்ஸ் பிரான்சிஸ் 52ஆவது இடத்தையும் பெற்றிருக்கின்றனர்.

பெண்களுக்கான 50 மீற்றர் நீச்சலில் மேனகா டி சில்வாவும் 52ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறார். மகளிா 50 மீற்றர் துப்பாக்கி சுடும் போட்டியில் புஷ்பமாலி இராமநாயக்க 25ஆவது இடத்தையும் பெற் றுக் கின்றார்.

அத்துடன், நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறற மரதன் ஓட்டப்போட்டியில் அநுரத்த இந்திரஜித் பங்குபற்றியுள்ளார்.

இதுவே இலங்கை வீரர் இம்முறை ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய கடைசி நிகழ்வாகும்.

இதேவேளை, நாட்டில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய இலங்கை வீரர்களுக்கு எச்.எஸ்.சந்தைப்படுத்தல் நிறுவனம் விஷேட அன்பளிப்புக்களை வழங்கியுள்ளது.

(ந-7)

# நாட்டில் மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டால்

# அரசு மீளமுடியாத சிக்கலுக்குள்ளாக நேரிடும்

## நோர்வே தமிழ்ச்சங்க வெள்ளிவிழாவில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் உரை

(நோர்வே)

**அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது மேற்கொண்ட கடந்த காலப் போரியலிற்கு பல நாடுகள் உதவி புரிந்தன. ஆனால் எங்களுக்கோ இலங்கை என்ற நாடே உதவி செய்தது. அது தனக்குக் கிடைத்த பல நாடுகளின் உதவியுடன் தன்னிடமிருந்த மிச்ச சொச்சங்களையும் சேர்த்து எமக்கு உதவி செய்தது என நேற்று முன்தினம் நோர்வே தமிழ்ச்சங்கத்தின் வெள்ளி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.**

எங்களிற்கு கிடைத்தற்கரிய வகையில் காலத்தின் வரவாகக் கிடைத்திருக்கும் ஒப்பரிய ஒரு



தலைவனின் காலத்தில் நாம் எமது விடுதலையை அடைந்தே தீருவோம். அற்புதமான மனிதனின் மதிப்பிடுதற்கரிய ஆற்றலை தெரிவிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு. உலகத்தின் ஒவ்வொரு வல்லரசுகளின் அடுத்த கட்ட நகர்வுகளை புன்சிரிப்போடும், தற்துணிவோடும், தயரான நிலையிலும் இருந்து கொண்டே அவர் இந்த நகர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'ஜெயசிக்குறு' என்பது உண்மையிலேயே உலகத்தினுடைய யுத்தம். விடுதலைப் போராட்ட அமைப்புகளிற்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் பலநாடுகள் அரசாங்கத்துக்கு தம்மாலியன்ற உதவிகளைச் செய்ததோடு மாத்திரமல்லாமல் யுத்தக் களத்திற்கே நேரடியாகச் சென்று ஆலோசனை வழங்கின. அவற்றின் எதிர்பார்ப்பையெல்லாம் மீறி அந்தக் களம் அவர்களிற்கெதிரானதாக மாற்றியமைக்கப்பட்டது. ஜெயசிக்குறு உலகத்தின் யுத்தம் என்பது வெகுவிரைவில் வெளிச்சத்திற்குவரும்.

ஆயிரக்கணக்கான உயிர்களை விலையாக எடுத்த இப்போராட்டம் எங்களது போராட்டம். இப்போராட்டததில் எந்த ஒரு தலையீடும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இந்தச சமாதான காலத்தின் பெருவெற்றியாக தமிழரின் விடுதலை சம்பந்தமாக ஒரு கோடு தெளிவாக வரையப்பட்டு விட்டது. எனவே இந்தக் கோட்டின் ஒரு பக்கத்திற்குள் மக்கள தங்களை அடையாளப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

சமாதான காலகட்டத்தில் இலங்கை அரசியல், இராணுவப் போக்குகளை தாங்களாகவே அம்பலப்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டு இலங்கைத் தேசம் மிகுந்த சிக்கலிற்குள் தவிக்கிறது. ஆனாலும், முதிர்ச்சியின் வெளிப்பாடாக நாங்கள் இவற்றை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கம் போரை ஆரம்பித்தால் அதனை மீளமுடியாத சிக்கலிற்குள் தள்ளுமளவிற்கு நாம் வளர்ச்சி கண்டுள்ளோம்.

எந்தவொரு கணத்திலும் தமிழர்களிற்கு வெற்றி வரும் என்பதனையே இன்று சந்திரிகா, ஜே.வி.பி மற்றும் இதர கட்சிகளின் நிலைப்பாடுகள் எடுத்தியம்பி நிற்கின்றன. சர்வதேசத்தின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப எமக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முனைப்பில் வெற்றிகண்டு சர்வதேச உறவுகளின் நம்பகத்தன்மையை வலுபடுத்தியுள்ளோம்.

தமிழரின் உரிமைகளிற்கான கோரிக்கையானது 1920ல் அருணாச்சலத்தால் முன்னெடுக்கப்பட்டு 1975ஆம் ஆண்டு தந்தை செல்வாவால் இனி இதைவிட்டால் வேறுவழியில்லை என்று தமிழ் மக்களுக்கு தமிழீழமே இறுதி முடிவு என அறிவிக்கப்பட்டதையே நாம் இப்போது வடிவத்தை மாற்றி முன்னெடுத்துச் செல்கிறோமே தவிர இந்தப் போராட்டம் நாம் ஆரம்பித்த ஒன்றல்ல.

இன்றைய சமாதானக் காலத்திலும் எங்களை நோக்கி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால் சமாதான முன்னெடுப்புகளினூடே பயணித்த எம்மிடையே கருணா என்ற ஒரு குழப்பக்காரனைக் கண்டுபிடித்து போரைத் திணித்தது, கொலைகளை ஆரம்பித்தது யார் என்பதை நோக்க வேண்டும். நாம் போர் விரும்பிகளல்ல வாழ்வதற்காகவே போராடுபவர்கள்.

தமிழர்கள் மீதான நிழல் யுத்தத்தை அரசாங்கமே இந்தச் சமாதான காலத்தில் வலிந்து திணித்துவிட்டு தம்மைக் கொலையாளிகள் எனறு குறிப்பிடுவது ஏற்கப்பட முடியாதது.

இனறைய திகதியில் தமிழர்கள் எவராலும் வெல்லப்படமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இழப்பில்லாமல் வெல்லமுடியுமா என்பதையே நாம் இன்று எதிர்பார்க்கிறோம. எதேச்சையாக யுத்தம் தொடங்கினால் கூட அந்தப் போரை வழிநடத்த நாங்கள் கடமைப்பட்டவர்களே. ஏனெனில் நாங்கள் போராடுவது எமது இழந்த வாழ்வை மீட்பதற்காகவே தான். தமிழர்களின் உரிமைப்போரானது களம் - புலம் என இரண்டு தளங்களிலிந்தும் உறுதியுடன் வளர்ந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-121)

### ஐக்கியத்தைப் பாதுகாக்க சத்தியாக்கிரக இயக்கம்

கதிர்காமம் பிரிவிகாரைக்கு முன்பாக சத்தியாக்கிரக இயக்கம் எனும் அமைப்பு ஒன்றை மக்கள் ஐக்கிய முன்னணி நிறுவியுள்ளது.

நாட்டின் நல்லாதிக்கத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பதை நோக்காகக கொண்டே இவ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும, நாட்டின் அபிவிருத்தி பற்றி இவ் இயக்கம் கவனம் செலுத்தும் எனவும் அமைச்சர் தினேஸ்குணவர்த்தன தெரிவித்தார். (ந-ப)

### நாணயத் தாள்களை கடத்த முயன்றவர் கைது

இலங்கையிலிருந்து வெளிநாடொன்றுக்கு பெருமளவு வெளிநாட்டுப் பண நோட்டுக்களைக் கடத்திச்செல்ல முயன்ற பிரபல வாத்தகர் ஒருவர் சுங்கத்திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட குறிப்பிட்ட வர்த்தகர் சுவீடனிலிருந்து சிற்றூர்திகளை இறக்குமதி செய்யும் பிரபல்யமான நபராவார்.

சுமார் 3.5மில்லியன் ரூபாவினை இவ்வாறு கடத்திச்செல்ல முற்பட்ட இந்நபர் தன்னை உடனடியாக விடுவிக்குமாறு சுங்கஅதிகாரிகளைக் கோரியதாகவும், ஆனால் அதற்கு அதிகாரிகள் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் இடம்பெற்றுள்ளது.(ந-ப)

## இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநித்துவம் போதாது

### தெற்காசிய அமைப்பின் பணிப்பாளர் கவலை

(கொழும்பு)

இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லையென இலங்கையின் தெற்காசிய ஒத்துழைப்பிற்கான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பத்மா ரட்ண நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேசிய பெணகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் நிர்வாகம் குறித்த தீர்மானங்கள் எடுக்கும் நடவடிக்கைகளில் பெண்களின் பங்குபற்றல் போதுமானவையாக இல்லையென்று அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் கிராமிய பெண்களிடையே அரசியல் பற்றிய கருத்துக்கள் ஊட்டப்பட வேண்டும்.

ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையிலேயே பெண்கள் அரசியலில் ஈடுபடுவது குறைவாகவுளளது.

ஆசிய நாடுகளில் பங்களாதேஷில் 30வீத பெண்களும், இந்தியாவில் 33வீத பெண்களும், நேபாளத்தில் 20வீத பெண்களும், பாகிஸ்தானில் 33வீதபெண்களும் அரசியலில் உளள அதேவேளை, இலங்கையில் 1.97வீத பெண்களே அரசியலில் ஈடுபடுகின்றனர்.

எமது நாட்டில் பெண்கள் பல்வேறு துறைகளில் சேவைசெய்வதன் மூலம் நாட்டுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கவும், நாட்டின் ஜீவநாடியாகவும் செயற்பட முடியுமென்றால், அரசியலில் மட்டும் பெண்கள் ஏன் ஈடுபடமறுக்கிறார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-க,8)



யாழ்.வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

படம்: கு.ஐங்கரன்

### மிளகாய்ச் செடிகளில் 'குருத்துக் கருக்கல்'

(இணுவில்)

உடுவில், இணுவில் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட மிளகாய்ச் செடிகளில் குருத்துக் கருக்கல் நோய் ஏற்பட்டுள்ளது.

தொடரும் வரட்சியினாலேயே இந்த நோய்த்தாக்கம் ஏற்படுகின்றது என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(ந-122)

## வட-கிழக்கு சிங்களவர்கள் புறக்கணிப்பு

### குற்றஞ்சாட்டி க.கா.குழுவுக்கு கடிதம்

(கொழும்பு)

போாநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களுக்கான எதுவித உதவி நடவடிக்கையும மேற்கொள்ளப்படவில்லை என வடக்குகிழக்கு சிங்கள அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

கணகணிப்புக் குழுவைக் குற்றஞ்சாட்டி இவ் அமைப்பு அதற்கு கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில்,

வடக்கு-கிழக்கு பிரதேச சிங்களவாகள் கடத்தப்படுவது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் மொறவேவா, கிண்ணியா, மட்டக்களப்பு மற்றும் கல்லடி போன்ற பிரதேசங்களில் இருந்து 7 பேர் கடத்தப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினர் தொடர்ந்து பாராமுகமாக இருந்து வருகின்றனர். இவர்களை விடுவிகக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

புலிகளே போர்நிறுத்த உடன்படிக்கையை மீறிப் படுகொலைகளையும், கடத்தல்களையும் மேற்கொண்டுவருகின்றனர் எனவும் இவ் அமைப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வமைப்பின் செயலாளர் ஆர்.எம்.அனுர பண்டார இக்கடிதத்தை கணகாணிப்புக்குழுவின் திருகோணமலைப பிரதேசத்தலைவர் டிஅட்னஸிடம் கையளித்துள்ளார். (ந-6)

## "இல்மனைட்" தொழிற்சாலையை மீள இயக்க நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலை புல்மோட்டைப் பகுதியில் அமைந்திருக்கும் 'இல்மனைட்' தொழிற்சாலையை மீள இயங்கவைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்படுகின்றது.

16வருடங்களுக்கு முன் இந்தத் தொழிற்சாலைக்கான பிரதான நீர் வழங்கல் குழாய் தகர்க்கப்பட்டதை அடுதது இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது.

புல்மோட்டைக் கடற்பரப்பில் இருந்து மண்ணை அள்ளி அதில் உள்ள இல்மனைட்டைப் பிரித்து ஏற்றுமதி செய்யும் இந்தத் தொழிற்சாலை, இயற்கை வளங்களை அழிப்பதுடன் கடல்நீர் உட்புகுவதற்கும் காரணமாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதற்கிடையில ஜப்பானும் இவ் இல்மனைட் தொழிற்சாலயை மீள இயங்க வைக்கும் அரசின் முயற்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இலஙகையில் இருந்து பெருமளவு இல்மனைட்டை தான் இறக்குமதி செய்யும் நோக்கிலேயே அரசின் இந்த முயற்சிக்கு ஜப்பான் ஆதரவு வழங்குவதாகவும் கூறப்படுகின்றது.

(ந-க)

# புலிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு மல்வத்தைபீட மகாநாயக்கர் விருப்பம்

## இதற்கான ஏற்பாடுகளில் ம.ம.மு. தலைவர்

(கொழும்பு)

இனப் பிரச்சினை தொடர்பாக கண்டி மல்வத்தைபீட மகாநாயக்க தேரரைச் சந்தித்துப் பேசத் தயாரென விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரிடமிருந்து உத்தியோகபூர்வ அழைப்பு கிடைத்தவுடன் தேரரை அழைத்துச் செல்வேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை மகாநாயக்க தேரர் சந்திப்பதற்கு முன்னர். இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக் கூறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருடைய உத்தியோகபூர்வ அழைப்பிற்காகவும், தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு இங்கிலாந்து சென்றுள்ள ஜனாதிபதியின் வருகைக்காகவும் தான் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இனப் பிரச்சினை விடயம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச தான் எப்பொழுதும் தயாராக இருப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தூதுக் குழுவினரிடம் மல்வத்தை மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய திப்பட்டுவாவே சுமங்கல தேரர் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மீளக்குடியமர்வை வலியுறுத்தி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

## வலி.வடக்கு மக்கள் தயாராகின்றனர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கின் அதி உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் தம்மை மீளக் குடியமரச் செய்ய வேண்டுமெனக்கோரி அப்பகுதி மக்கள் மேலும் பல மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை சட்டத்தரணி சி.கணேசலிங்கம் மேற்கொண்டு வருகின்றார்.

பன்னாலைப் பகுதியில் தம்மை மீளக்குடியமரச் செய்ய வேண்டுமெனக்கோரி ஏற்கனவே பொது மகன ஒருவர் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் அவருக்கு மீளக்குடியமர எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தீர்ப்பளித்திருந்தது.

எனினும் அவருக்கு வழங்கபபட்ட தீர்ப்பில் அந்தப்பகுதியில் மீளக் குடியமரக் கோரிநிற்கும் ஏனையவர்களுக்குப் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வலிகாமம் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்துள்ள சுமார் 20ஆயிரம் குடும்பங்களும தனித்தனியாகத் தமது மனுக்களைத் தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளன.

இதனடிப்படையில் முதற் கட்ட மனுக்கள் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளன. (ற-க,121)

# இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த

## ஐ.ம.சு. முன்னணி நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் மீண்டும் ஏற்படும் விதத்தில் சகல இனங்களையும் சேர்ந்த மக்களிடம் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் வளர்க்கும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நிகழ்ச்சித்திட்ட மொன்றை முன்னெடுக்க விருக்கிறது.

இதனடிப்படையில், சகல மதங்களையும் சேர்ந்தவர்களை உள்ளடக்கி சமாதான மன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அதிகாரம் கொண்ட சட்ட ரீதியான அத்திபாரத்தோடு, இந்த உத்தேச மன்றத்தை அமைக்க புத்தசாசன பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது.

ஒவ்வொரு சமயப் பிரதிநிதிகளுக்கிடையேயும் நிலவிவரும் கருத்து வேறுபாடுகளை நீக்கவும், ஏனைய முழுவிடயங்களை ஆராயவும் இத்தகைய அமைப்பு சகல விதத்திலும் உதவும் என்று அமைச்சர் ரத்னசிறிவிக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

பௌத்த ஆணைக்குழுவின் விதப்புரைகளின் பிரகாரம், இந்த சமாதான மன்றம் அமைக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-121)

# அரசின் அரசியல் யாப்பினால் பௌத்த இறைமைக்கு பாதிப்பு

## சோபித தேரர் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் பௌத்த மதத்தைப் பாது காக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒபல்கே சோபித தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

காலி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் அரச மதமாக பௌத்த மதம் பேணப்பட்டு அதற்கான அரசியல் உண்மைகள், அதிகாரங்கள் என்பன அரசியல் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ளன.

இருந்த போதும், அரசாங்கம் அதற்கு மதிப்பளித்துச் செயற்படுவதில்லை. இதனால், பௌத்த மதத்தின் இறைமை பாதிக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-ப)

# போலி ஆவணம் குறித்த வழக்கில்

# கைது செய்யப்பட்ட இரு பெண்களும் 3 ஆம் திகதி வரை விளக்க மறியலில்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக போலி ஆவணங்களைப் பயன்படுத்த முயன்றதான குற்றச்சாட்டின் பேரில கைது செய்யப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த 'பெண் உட்பட' இரு பெண்களையும் எதிர் வரும் 3ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்ற பிரதம நீதிவான் குசால்வ் றோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு சமீபமாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவ்விரு பெண்களையும் பொலிஸார் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தப் பெண்கள் இருவரிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் போலியானவையென்று விசாரணைகளால் தெரியவந்துள்ளதாக பொலிஸ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனவும் அவர் கருணா தரப்பு உறுப்பினர் எனவும் தேசிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்ததாக பொலிஸார் கூறினர்.

மற்றைய நபர் கொழும்பை வதிவிடமாகக் கொண்டவரெனத் தெரியவருகின்றது. (ற-க,08)

# நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு ஊடகங்கள் செயலாற்ற வேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

சுதந்திரமானதும் நீதியானதுமான சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்ப ஊடகவியலாளர்கள் ஒன்றுபட்டுச் செயற்படல் வேண்டும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவ மாவட்டச் செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்கென நடாத்தப்பட்ட செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சமூக வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் ஊடகங்கள், மக்கள் மத்தியில் நம்பகமான ஓர் நிறுவனமாக இயங்க வேண்டும்.

ஆனால், சில ஊடக நிறுவனங்கள் இலாப நோக்கம் கருதி ஜனநாயகத்திற்கும் நாட்டின் இறைமைக்கும் பங்கம் விளைவிக்கும் விதமாகச் செயற்பட்டு வருகின்றன. இது அதிருப்திற்குரிய ஓர் விடயமாகும்.

எனவே, ஊடகங்கள் குறுகிய மனப்பான்மையை விட்டு நாட்டின் எதிர் காலத்தை மனதில் கொண்டு செயற்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-ப)

# செய்தித் துளிகள்

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கு இன்னமும் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் நிதி வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் யாழ். செயலகத்தாலும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையாலும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், யாழ்.செயலகத்தினால் வவுச்சரில் கையெப்பம் வாங்கிச் சென்று சுமார் 3 மாதங்களுக்குமேலாகியும் இதுவரை 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனப் பாதிப்புற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (ற-35)

## வாழ்வியல் தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் ஏற்பட்டில் நடாத்தப்படவுள்ள பெண்களுக்கான வாழ்வியல் தொழிற்பயிற்சி எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இப் பயிற்சியில் பங்குபற்றுவதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 60 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இப் பெண்களுக்குப் பயிற்சியை வழங்குவதற்கு கண்டியில் உள்ள **Woman in Action** எனும் அமைப்பில் இருந்து 25 பேர் கொண்ட குழு ஒன்று எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இவர்கள் காகித உற்பத்தி மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ற-19,5)

## வினைத்திறன் காண் எழுத்துப் பரீட்சை

(சுதுமலை)

சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் கீழ் உள்ள வைத்திய சாலைகள் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழுள்ள பணிமனைகளில் தரம் II 'ஆ' பிரிவின் கீழ் கடமை புரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கான, கடந்த வருடத்திற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையிலுள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக சுகாதார போசாக்கு அமைச்சின் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

மேறபடி பரீட்சைகுரிய அனுமதி அட்டைகள யாவும் விண்ணப்பித்த உத்தியோகத்தர்களிற்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், செய்முறை, வாய்மூலமான பரீட்சைக்கான திகதி மற்றும் நேரசூசிகள் பின்னர் அனுப்பி வைக்கப்படும் எனவும் அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ற-252)

## கசிப்பு உற்பத்தியாளருக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 10 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரீ.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக 80 ராம்ஸ் கசிப்பினை வைத்திருந்தமை மற்றும் ஆயிரத்து 800 ராம்ஸ் கோடா உட்பட கசிப்புத்தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் கடந்த 25 ஆம் திகதி வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே. (ற-க, 19,5)

## ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் கற்பிக்கும் மேலதிக ஆசிரியர்களுக்கு விரைவில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.கல்வி வலயத்தில் சுமார் 20 ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதால், இவர்களை வேறு வலயங்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதென கடந்த வார இறுதியில் யாழ். வலயக்கல்வி ஆலவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இவர்கள், தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (ற-5)

## பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை

(திருநெல்வேலி)

தென்மராட்சி கெருடாவில் பகுதியிலுள்ள யுத்த அனர்த்தங்களால் அழிவடைந்த அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்வின் பின்னர் இது வரை காலமும் மீளத் திருத்[illegible] படாமல் உள்ள இப்பாடசாலை[illegible] அதே இடத்தில் இயக்குமாறு அ[illegible] பகுதி மக்கள் தென்மராட்சி கல்வி[illegible] திணைக்களத்திடம் கோரிக்கை[illegible] விடுத்துள்ளனர். (ற-க,08,43)

## பொலிஸார் சோதனை

(இணுவில்)

காங்கேசன்துறை வீதியூடாக[illegible] போக்கு வரத்தில் ஈடுபடுகின்ற மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கான காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வரிப் பத்திரம் போன்றவற்றை சோதிப்பதிலும் மற்றும் தலைக்கவசம் அணியாதவர்களுக்கான குற்றப்பணம் அறவிடுவதிலும் தற்போது சுன்னாகம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ற-122)

## தென்மாகாண அபிவிருத்திக்கு ஜனாதிபதி நிதியுதவி

(கொழும்பு)

தென்மாகாண அபிவிருத்திக்கென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 5 கோடியே 40 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையிடம் ஜனாதிபதி இந்நிதியைக் கையளித்துள்ளார்.

இந்நிதியானது 2005 ஆம் ஆண்டின் அபி விருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ப)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்திற்கு **'A'** அல்லது **'B'** சித்தியுடன், இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த.( சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தலும் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் தமது விபரங்களை வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார். (ற)

## சங்காபிஷேகம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் சங்காபிஷேகப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ற)

## அமெரிக்க விமானங்கள்
# ஈராக்கில் நடத்திய குண்டு வீச்சில் 5 பேர் பலி; 32 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கின் ஃபலுஜா நகரில் அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 5 பேர் பலியாகியுள்ளதுடன், 32 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்கப் படையினரின் விமானங்களை தாக்குவற்கு தீவிரவாதிகள் பயன்படுத்தி வரும் விமான எதிர்ப்புக் கருவிகளை அழிக்கும் நோக்கிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் பல கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான வீடுகள், வாகனங்கள், தொழிற்சாலைகள் என்பன சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஈராக் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் மிகப்பெரிய நகரமாக ஃபலுஜா நகர் விளங்குகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)



குழந்தைகள் மத்தியில் எயிட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் பொலிவூட் நடிகை ஷில்பா ஷெட்டியைப் படத்தில் காணலாம்.

## ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட
# துருக்கியர்கள் இருவர் சுட்டுக் கொலை

(பைஜி)

ஈராக்கில் வைத்து தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட துருக்கியர்கள் இருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

துருக்கி எல்கைகளூடாக அமெரிக்கப் படைகளுக்கான ஆயுத பரிமாற்றம் இடம் பெறக் கூடாது என்றும் அமெரிக்கப் படைகளுக்கு உதவுவோர் மீது தாக்குதல் நடத்தப்படும் எனவும் இஸ்லாமிய ஒருங்கிணைப்புக் குழு என்ற தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்து வருகின்ற போதும், இது குறித்து துருக்கிய அரசு எதுவித கவனமும் செலுத்தவில்லை.

இதனையடுத்து, ஈராக்கில் உள்ள வெளிநாட்டு கம்பனி ஒன்றில் பொறியியலாளர்களாகக் கடமையாற்றிவந்த இரு துருக்கியர்களை அண்மையில் கடத்திச் சென்ற தீவரவாதிகள், இவர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு,இவர்களது சடலங்களை வடக்கு ஈராக்கில் உள்ள பைஜி நகரில் வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை, ஈராக்கில் தீவிரவாதிகளால் இத்தாலியப் பத்திரிகையாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு 24 மணி நேரங்களுள் இவ்விரு துருக்கியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் 4 துருக்கியர்களை ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

## ஜைக்கு 93 உனக்கு 80!

(காத்மாண்டு)

காதலுக்கு கண் இல்லை என்பார்கள்; வயதும் இல்லை என்பது நேபாளத்தில் நிருபிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு நேபாளத்தில் நாவல்பராசி மாவட்டத்தைச் சேர்ந்தவர் மணாலால் லாமா என்ற 93 வயதானவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவரது மனைவியும் இரு மகன்களும் இறந்து விட்டனர். தற்போது மருமகள்கள், பேரக் குழந்தைகளுடன் வசித்து வருகிறார்.

இவருக்கும் அதே கிராமத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும் இடையே ஓராண்டுக்கு முன்பு காதல் மலர்ந்ததாம். இதில் விசேஷம் என்னவென்றால், அந்த பெண்மணிக்கு வயது 83. இதைத் தொடர்ந்து தற்போது இவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனராம். (ப)

## பிரான்ஸ் பர்தா மீதான தடையை 48 மணி நேரத்துள் நீக்க வேண்டும்
# முஸ்லிம் தீவிரவாதிகள் மிரட்டல்

(பரிஸ்)

பிரான்ஸ் பாடசாலைகளில் கற்கும் மாணவியர்களுக்கு பர்தா அணிந்து செல்ல விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் 48 மணி நேரத்தில் நீக்கப்படாவிட்டால் தம்மால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இரு பிரான்ஸ் நாட்டு பத்திரிகையாளர்களும் கொல்லப்படுவர் என ஈராக் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐரோப்பாக் கண்டத்திலேயே அதிக எண்ணிக்கையான முஸ்லிம்கள் வாழும் நாடான பிரான்ஸில்,பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவியர்கள் பர்தாவை அணிந்து செல்ல அந்நாட்டு அரசாங்கம் கடந்த மார்ச் முதல் தடை விதித்துள்ளது.

இந்தத் தடைச் சட்டமானது முஸ்லிம்களின் கொள்கைகளைப் பாதிப்பதாகவே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியே ஈராக்கின் முஸ்லிம் தீவிரவாதிகள் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இதேவேளை, ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட இரு பிரான்ஸ் பத்திரிகையாளர்களினது தற்போதைய நிலைமை குறித்து தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ப)

WORLD NEWS
# உலக தரிசனம்

## தீவிரவாதிகள் கடத்திய விமானத்தை
# சூடானியப் படையினர் பத்திரமாக மீட்டனர்

(லிபியா)

லிபியா நாட்டில் இருந்து எரித்தியா நாட்டிற்கு 70 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த லிபிய விமானமொன்றை நடுவானில் வைத்து தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்தியுள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட விமானம் சூடான் நாட்டுத் தலை நகரான கார்டூமில் தரை இறங்கியது. அப்போது பாதுகாப்பு படையினர் அந்த விமானத்தைச் சுற்றிவளைத்ததை அடுத்து, விமானத்தைக் கடத்திய தீவீரவாதிகள் பொலிஸாரிடம் சரண் அடைந் தனர். இதனால் 70 பயணிகளும் எந்தவித காயமும் இல்லாமல் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தீவிரவாதிகள் விமானத்தை கடத்த முயற்சித்தமை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுவருகிறது. (ப-ற)

# அறிவுரை கூறும் கழிப்பறை!

(ஆம்ஸ்டர்டாம்)


நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாமில் பேசும் கழிப்பறை சாதானம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கழிப்பறை சாதனம் சில சமயம் சிகரெட் குடிப்பதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடும்; போர் தேவையற்றது என்பதை விளக்கும்; சுத்தமாக இருங்கள் என திட்டும்.

இவ்வாறான "சகலகலா" கழிப்பறையை வடிவமைத்திருப்பவர் லியோனார்ட் வான் முன்ஸ்டர்.

இம்மாதிரியாக நவீன கழிப்பறை ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டிருப்பது இதுவே முதல் மறையாகும்.இதில் சென்சார்கள் எனும் உணர்வுகாட்டி அமைக்கப்பட்டிருக்கும். அதன் மூலம் கழிப்பறையைப் பயன்படுத்துபவர்கள் எப்படிப்பட்டவர்கள்,என்ன செய்கிறார்கள் என்பதை எல்லாம் உணர்ந்து கொள்ளுமாம். அதற்குப் பொருத்தமான விழிப்புணர்வுகளையும் கருத்துகளையும் இந்த கழிப்பறை சாதனம் கூறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைகளைச் சுத்தம் செய்வதன் அவசியம் பற்றியும் சீற்றை விட்டு எழுந்திருங்கள் என்றும் கூறும். இந்த நவீன கழிப்பறை திருட்டுத்தனமாக கழிவறையில் புகைப்பிடித்தால், சிகரெட் பிடிப்பதால் ஏற்படும் தீமைகள், சினிமா நட்சத்திரங்களில் புகைப் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் பெயர்களையும் கூறும் என்கிறார் இதனை வடிவமைத்த வான்முன்ஸ்டர். (ப)



அதிபயங்கர ஏவுகணைகளைத் தடுக்கும் வல்லமை கொண்ட "ஏரோ" என்ற ஏவுகணை ஒன்றை அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து வடிவமைத்துள்ளது. இது அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள முகுமுனை என்ற இடத்தில் உள்ள நடமாடும் ஏவுதளத்தில் வைத்து ஏவப்படுவதைப் படத்தில் காணலாம்.

## 36 வருடங்களாக மகனின் சடலத்தை பாதுகாத்துவரும் பெற்றோர்
# வியட்நாமில் வினோதம்

(ஹனாய்)

மகனது உடலை கண்ணாடி சவப்பெட்டிக்குள் வைத்து, வீட்டிலேயே 36ஆண்டுகளாகப் பாதுகாத்து வைத்துள்ளனர் பெற்றோர்.

வியட்நாமின் தெற்கு மாகாணத்தில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் பற்றித் தெரியவருவது;

1968இல் 17 வயதாக இருக்கும் பொது மேற்படி பெற்றோருடய மகன். உடல்நலக குறைவு காரணமாக இறந்து விட்டார். வழக்கமான முறைப்படி அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

ஆனால் அவர் உயிருடன் இருப்பதாக உள்ளூர் மருத்துவர் ஒருவர் கூறினாராம். இதை பெற்றோர் நம்பவில்லையென்றாலும் கூட,3 நாள்களுக்குப் பிறகு மகனின் உடலைத் தோண்டி எடுத்தனர். பின்னர் வீட்டிலேயே கண்ணாடி சவப்பெட்டியில் உடலை வைத்துள்ளனர்.

இறந்த உடலைப் பாதுகாப்பதற்காக எந்தவித வேதிப் பொருளும் பயன்படுத்தப்படவில்லையென்றாலும் கூட,தோண்டி எடுக்கப்பட்ட போது இருந்ததைப் போலவே உடல் அழுகாமல் இருக்கிறது என்று தெரிவிக்கபபடுகிறது. (ப)

# வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தை பாதிக்கின்றதா பாதுகாக்கின்றதா

**விவாத அரங்கு - 5**

**வீடியோ படப்பிடிப்பு தமிழர்கலாசாரத்தை பாதிக்கின்றதா பாதுகாக்கின்றதாஎன்ற விவாத அரங்கிற்கு பாதிக்கின்றது என தனதுவாதத்தை முன்வைக்கிறார் குப்பிளான் தெற்கு சு.சிவராஜன்**

தமிழ் மக்களுக்கு என்றொரு கலாசாரம் பண்டைய காலம் தொட்டே இருக்கின்றது. அவர்களுடைய வாழ்வியல், திருமண வைபவங்கள், திருவிழாக்கள் பண்டிகைகள், ஆரவாரமான கொண்டாட்டங்கள் போன்றவற்றில் முன்னைய காலத்தில் இருந்தே கலாசாரம் பேணப்பட்டு வந்தது. அது தமிழ்மக்களின் 'தொன்மைத்துவம்' ஆகும்.

இன்று எம் மக்களிடையே 'வீடியோப் படப்பிடிப்பு' என்பது கலாசாரத்தைப் பாதிக்க வைத்துள்ளது. இதை வீடியோப் படப்பிடிப்பு என்று கூறவியலாது. இது ஒரு படப்பிடிப்பு , அதாவது சினிமாவிலே 'சூட்டிங்' என்று நடத்துவார்கள். அதில் கவர்ச்சி, ஆடம்பரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்து வார்கள். அதைப் போன்று தான் இந்த வீடியோப் படப்பிடிப்பும் காணப்படுகிறது. இதை வீடியோப் படப்பிடிப்பு என்று கூறவியலாது.

முதலாவதாக பூப்புனித நீராட்டு விழாவை எடுத்துப் பார்த்தால், இங்கு பெண் பருவம் அடைந்து விட்டாள் என்றால் 'ஊரிலே கூறுவார்கள் சாமத்தியப் பட்டிட்டாள்' என்று. இந்த சாமத்திய வீட்டிலே வீடியோப் படம் எடுக்கிறார்கள். இங்கு பருவம் அடைந்த அப் பெண்ணை நீர்த் தொட்டியிலே' இருத்தி நீராட்டுகின்றார்கள். இதை ஐந்தாறு இளைஞர்கள் படம் பிடிக்கின்றார்கள். பலவாறாக வீடியோப் படம் எடுக்கப்படுகின்றது. இவ்வாறு பருவமடைந்த பெண்ணை நீர்த் தொட்டியிலே இருத்தி நீராட்டும் பொழுது எடுக்கும் 'வீடியோப் படம்' அவளது வாழ்க்கைக்கு நல்லதென்று சமூகம் எண்ணும். ஆனால் உண்மையிலேயே எமது கலாச்சாரத்தை யோசித்துப் பார்க்கவேண்டும் பெண்ணின் மனதிலே தான் 'பேரழகி' என்பதனால்தான் தன்னைப் பலவாறாகப் படம் எடுக்கின்றார்கள் என்ற எண்ணம் தோன்றும். அதுவும் ஆடவர்கள் எடுக்கின்றார்கள் என்று அப் பெண்ணின் மனதிலே 'விவரிக்க முடியாத உணர்வு' விதைக்கப்படுகினறது. எனவே எமது கலாசாரத்தை வீடியோப் படப்பிடிப்பு பாதிக்கின்றது. மேலும் பெண்ணை விதம் விதமாக ஆடைகளை அணிவித்து, ஊர் உலகத்துக்கு காட்டுறோம் என்று கூறி அரைகுறை ஆடைகளை அணிவித்து அவளை வீடியோப்படம் பிடிக்கின்றார்கள்.

அடுத்து, திருமண வீட்டை எடுத்தப் பார்த்தால் இருமனம் இணைவதுதான் திருமணம் என்பார்கள். இங்கு ஏனய்யா வீடியோப்படம்? பெண்ணை நீராட்டும் பொழுதும் வீடியோப்படம், மாப்பிள்ளை நீராடும் பொழுதும் வீடியோபபடம், மணவறையிலே வீடியோப்படம் இவ்வாறு; குளிக்கும் போதும், உண்ணும் போதும் எடுக்கப்படும் வீடியோப்படத்தை பார்த்துவிட்டு அடுத்த வீட்டுப் பெண் கூறுவாள் 'மாப்பிள்ளை நல்ல வடிவாய் இருக்கிறார்' என்று. காலப்போக்கில் பக்கத்து வீட்டுப் பிரச்சினைகளுக்கும் இவ் வீடியோப்படமே காரணமாகின்றது.

மேலும், ஆலயங்களிலே திருவிழாக்களின் போது இறைவனை வீடியோப் படம் எடுக்கின்றார்கள் 'கண்களை' மனிதனுக்கு இரண்டாகச் கொடுத்தான் இறைவன். ஏன் தெரியுமா? இன்பத்தையும், துன்பத்தையும் ஒரே கண்ணாலே பார்க்கக் கூடாது என்று தான். உள்ளக் கமலத்தைத்தான் இறைவன் எம்மிடம் இருந்து எதிர்பார்ப்பது. இதை விட்டு வீடியோப்படம் எதற்காக? இறைவன் என்ன கவர்ச்சிப் பொருளா? எதற்கு வீடியோப்படம் எடுப்பது என்று ஒரு விவஸ்தையே இல்லை. இறைவனை ஒரு பக்கம் வீடியோப்படம் எடுப்பது, இளம் பெண்களை ஒரு பக்கம் வீடியோ எடுப்பது.இது தான் இன்று எமது ஆலயங்களிலே நடக்கின்றது. இதனாலும் வீடியோப் படப்பிடிப்பு எமது கலாசாரத்தைப் பாதிக்கின்றது.

**வாதம் 1**

தொடர்ந்து, பாடசாலைகளிலே ஒன்று கூடல்கள் நிறுவனங்களிலே ஒன்று கூடல்கள் இதன் போதும் வீடியோப்படப்பிடிப்பு. இவ் ஒன்று கூடல்களின் போது ஆணையும் பெண்ணையும் வீடியோப் படம் எடுப்பதால் ஒன்று கூடல்கள் அடுத்த நாள் 'இரண்டு கூட்டலை' ஏற்படுத்தி விடும். இதன் காரணத்தாலும் தமிழர் கலாசாரத்தை வீடியோப்படப்பிடிப்பு பாதிக்கின்றது.

மேலும், மரணச் சடங்கின் போதும் வீடியோப்படம் எடுக்கின்றார்கள். 'அந்தாளின்ரை பொடியள் எல்லாம் வெளிநாட்டிலை அது தான் வீடியோப்படம் எடுக்கிறோம்' என்பார்கள் ஒரு சாரார். துக்கம் அனுஷடிக்கும் போது இது தேவை தானா? இது தானா நாம் எமது முன்னோர்களுக்கு கொடுக்கும் மரியாதை. அவர்கள் இருக்கும் பொழுது வீடியோப்படம் எடுத்திருந்தால் பரவாயில்லை. இறந்தவருக்கு எமது சமுதாயம் கொடுக்கும் நன்கொடையா இந்த வீடியோப்படப்பிடிப்பு?

இவ்வாறாக எமது வாழ்க்கையிலே நிகழும் நன்மையான, தீமையான அனைத்து நிகழ்வுகளிலும் வீடியோப்படப்பிடிப்பு' எடுக்கப் படுவது தமிழ்த் கலாசாரத்தை பாதிக்கின்றது என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ✻

# ஜெயலலிதா மீதான வழக்கு ஆவணங்களை சரி பார்க்கும் பணியில் தாமதம்

(சென்னை)


வருமானத்துக்கு அதிகமாக 66 கோடியே 65 லட்சம் ரூபா மதிபபுள்ள சொத்துக்களைச் சேர்த்தாக முதலமைச்சர் ஜெயலலிதா, மற்றும சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது ல்ஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் தொடர்ந்த வழக்கு சென்னை தனி நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையை பெங்களூருக்கு மாற்ற சுப்ரீம் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து பெங்ளூரில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பான ஆவணங்கள் அனைததையும் ஒரு வாரத்திற்குள் பெங்களூர் தனி நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும் என்று கடந்த செவ்வாய்க்கிழமை சுப்ரீம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆவணங்களை எடுத்துச் செல்வதற்காக கர்நாடக உயர் நீதி மன்ற பதிவாளர் வெங்கடேஸ், சட்டத் துறை கூடுதல் செயலாளர் பாலகிருஷ்ணா, சார்பு செயலாளர் வேதமூர்த்தி, கர்நாடக நீதிமன்ற ஊழியர்கள் நாகசாமி, குல சப்பா ஆகியோர் இதற்காக பெங்களூரில் இருந்து சென்னை வந்தனர்.

நீதிமன்ற நீதிபதி மதிவாணனை வெங்கடேஷ், பாலகிருஷ் ணா, வேதமூர்த்தி ஆகிய 3 பேரும் நீதிபதியின்



ஓணம் பண்டிகையையொட்டி திருவனந்தபுரம் சங்குமுகம் கடற் கரையில் இந்திய விமானப்படையின் விமானங்கள் சாகஸம் நிகழ்ந்தும் காட்சி.


# இந்தியச் செய்திகள்

# பிற மாநிலத்தவரை மணக்கும் காஷ்மீர் பெண்களின் குடியுரிமை

நடைபெற்றது.

என்று கடந்த செவ்வாய்க்கிழமை

# இந்தியச் செய்திகள்




புதுடில்லியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய மத்திய புலனாய்வுக்கழகம் மற்றும் மாநில இலஞ்ச ஒழிப்புத்துறை உயரதிகாரிகளின் 15 வது மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் தொடக்க உரையாற்றுகிறார்.

## அரபிக்கடலில் மூழ்கிய கப்பலிலிருந்து சிப்பந்திகள் இருபது பேர் காவல்படையினரால் மீட்பு

(புதுடில்லி)

குஜராத்தில் மூழ்கிப் போன சரக்குக் கப்பல் ஸ்ரலே அலினில் பயணம செய்த 20 சிப்பநதிகளையும இந்தியக் கரையோரக் காவல் படையினர் மீட்டனர்.

டாக்கா துறை முகத்துக்கு அருகே அரபிக் கடலில் மூழ்கிய அந்தக் கப்பலிலிருந்த 20 பணியாளர்களும் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது. கரையோரக் காவற்படை படகு மூலம் டாக்காதுறை முகத்துக்கு மூழ்கிய கப்பலிலிருந்த 19 பணியாளர்கள் கொண்டு செல்லப்படடன ரென்றும் மேலும் ஒருவர் மற்றொரு இடத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சச்சின்துறை முகத்திலிருந்து அரிசியை ஏற்றி கொண்டு சோமாலியாவிற்கு சென்ற அந்த சரக்குக் கப்பல் டாக்காதுறை முகத திலிருந்து 20 கடல் மைல் தூரத்தில் மூழ்கியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (து)

இருந்து சென்னை வந்தனர்.

நீதிமன்ற நீதிபதி மதிவாணனை வெங்கடேஷ், பாலகிருஷ் ணா, வேதமூர்த்தி ஆகிய 3 பேரும் நீதிபதியின் அறையில் சென்று சந்தித்துபேசினர்.

அவர்களிடம் சொத்து குவிப்பு வழக்கு தொடர்பாக 2,451 ஆவணங்கள் மற்றும் 1,606 வழக்கு பொருட்கள் ஆகியவற்றின் விவரம் அடங்கிய பட்டியல் கொடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களை தமிழிழ் இருந்தது. அவற்றை மொழி பெயர்த்துச் தருமாறு அவர்கள் தனி நீதிமன்ற நீதிபதியிடம் கேட்டனர். மொழி பெயர்த்துக் கொடுக்குமாறு சுப்ரீம் நீதிமன்றம் உத்தரவு ஏதும் பிறப்பிக்காததால் மொழி பெயர்ந்துக் கொடுக்கப்பட வில்லை.

மொழி பெயர்ப்புப் பிரச்சினையால் ஆவணங்களை சரிபாாகும் பணியில் மந்தம் ஏற்பட்டுள்ளது தொடர்பாக நீதிபதியிடம் ஆலோசனை நடத்தி வருகிறார்கள். (து)

## கூட்ட நெரிசலில் 5 பேர் கொல்லப்பட்டனர்

இந்திய ஆந்திர மாநிலத்தில் விஜயவாடா நகரில் இடம்பெற்ற இந்து மதக் கூட்ட நெரிசலில் சிக்கி குறைந்த பட்சம் 5 அடியார்கள கொல்லப்பட்டு 14 பேர் காய மடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கிருஷ்ணாநதியில் புனித நீராடுவதற்காக 10 இலட்சத்துக்கு மேற்பட்டோர் கூடியிருந்தார்களொன்றும் இந்த கூட்ட நெரிசலிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தொியவருகிறது. (து)

## பிற மாநிலத்தவரை மணக்கும் காஷ்மீர் பெண்களின் குடியுரிமை பறிக்கும் சட்டம் தோல்வி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநில பெண்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களை மணம் முடித்தால் அவர்களின் நிரந்தர குடியுரிமை மறுப்பதற்கான சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியான தேசிய மகா நாட்டுக் கட்சி இச் சட்ட மூலத்துக் கு ஆதரவு அளித்துள்ளது.

காஷ்மீர் மாநில சட்டசபையில் சட்டமூலம் வாக்களிப்புக்கு விடப்பட்ட போது தோல்வியில் முடிவுற்றது. வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களை மணம் முடிக்கும் காஷ்மீர் பெண்களின் நிரந்தர குடியுரிமை மற்றும் சொத்துரிமைகளை ரத்துச் செய்ய இச்சட்ட மூலம் கொண்டு வரபபட்டது குறிப்பிடத்தக்கது. (து)



'ரக்ஷா பந்தனையொட்டி பிரபல இந்தி நடிகரும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சருமான சுனில் தத்துக்கு (வலது) மும்பையைச் சேர்ந்த பாலியல் தொழிலாளர்கள் ராக்கிக்கயிறு கட்டுகின்றனர்.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**சைவ சமயம் I** **மணி - 1**

❖ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

1) வன்றொண்டன் என அழைக்கப்பட்டவர்
1. பூசலார்
2. சுந்தரர்
3. அப்பர்
4. சம்பந்தர்

(2) சங்கார ருத்திரமூர்த்தி எனப்படுபவர்
1. வைரவர்
2. வீரபத்திரர்
3. சண்டேஸ்வரர்
4. சிவன்

(3) ரஜோகுணத்தின் சின்னமாக விளங்குபவள்
1. சரஸ்வதி
2. இலட்சுமி
3. துர்க்கை
4. உமை

(4) வேதங்களை நான்காக வகுத்தவர்
1. விஸ்வாமித்திரர்
2. வியாசர்
3. சிவபெருமான்
4. உமாபதிசிவம்

(5) மூன்று கண்ணும் நான்கு தோள்களும் உடைய சிவமூர்த்தம்
1. லிங்கோற்பவர்
2. நடராஜர்
3. தெட்சணாமூர்த்தி
4. அர்த்தநாரீஸ்வரர்

(6) சமய சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களைத் தொடர் உருவகக் கருத்துக்காகக் கூறுவன?
1. சங்கிதைகள்
2. பிராமணங்கள்
3. ஆரணியங்கள்
4. உபநிடதம்

(7) பஞ்சலக்கணம் என்று கூறப்படுவது?
1. வேதம்
2. புராணம்
3. ஆகமம்
4. உபநிடதம்

(8) "ஒளிவளர் திங்கள்" என்ற தேவாரத்தைப் பாடியருளியவர்?
1. சம்பந்தர்
2. அப்பர்
3. சுந்தரர்
4. மாணிக்கவாசகர்

(9) பன்னிரு ராசிகளும் சிறப்பாகச் செதுக்கப்பட்ட தலம்?
1. வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்
2. பொன்னம்பலவானேஸ்வரம்
3. திருக்கேதீஸ்வரம்
4. செல்வச்சந்நிதி

(10) திருக்களிற்றுப்படியார் என்னும் நூலை இயற்றியவர்
1. உமாபதிசிவாசாரியார்
2. மெய்கண்டார்
1. விபூதி 2. உருத்திராக்கம்
3. பஞ்சாட்சரம் 4. காவியாடை

(17) முதியோர் கல்வியையும், சமய பக்தியையும் ஆலயங்களில் ஏற்படுத்துவது?
1. புராணபடனம் 2. பிரசங்கம்
3. பஜனை 4. அன்னதானம்

(18) திரி மலத்தார் யாவர்?
1. பிரளயாகலர் 2. விஞ்ஞானகலர்
3. சகலர் 4. அசுரர்

(19) இறந்த தந்தையின் நினைவாக அநுட்டிக்கப்படும் விரதம்
1. பௌர்ணமி 2. அமாவாசை 3. அட்டமி நவமி 4. ஏகாதசி

(20) சிவபெருமானின் அருவுருவத் திருமேனி
1. சிவலிங்கம் 2. உமாமகேசுவரர் 3. மகேசுவரன் 4. உருத்திரன்

(21) பிள்ளையார் கதையை எழுதியவர்?
1. கச்சியப்பசிவாச்சாரியார் 2. அகத்தியர்
3. வரதபண்டிதர் 4. ஔவையார்

(22) இராமபிரானது பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய தலம்
1. நகுலேஸ்வரம் 2. திருக்கேதீஸ்வரம்
3. திருக்கோணேஸ்வரம் 4. முன்னேச்சரம்

(23) பஞ்சபுராணத்தில் மூன்றாவதாகப் பாடப்படுவது
1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருப்பல்லாண்டு 4. திருவிசைப்பா

(24) தைத்திரியோப நிடதம் அமைந்துள்ள வேதம்
1. யசுர் வேதம் 2. இருக்கு வேதம்
3. சாம வேதம் 4. அதர்வன வேதம்

(25) 9ஆம் திருமுறை பாடியவருள் ஒருவர்
1. சேதிராஜர் 2. திருமூலர்
3. வியாசர் 4. காரைக்கால் அம்மையார்

(26) சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் எதன் சாரமாய் அமைந்துள்ளன
1. ஆகமங்களின் சாரம்
2. புராணங்களின் சாரம்
3. இதிகாசங்களின் சாரம்
4. வேதங்களின் சாரம்

(27) அகத்தியர் பூசித்த சிவலிங்கத்தின் பெயர்?
1. மானிட லிங்கம் 2. காண லிங்கம்
3. தேவி லிங்கம் 4. சுயம்பு லிங்கம்

(28) அருணந்தி சிவாச்சாரியாரின் குரு
1. மறைஞான சம்பந்தர்
2. மெய்கண்ட தேவர்
3. உமாபதி சிவாச்சாரியார்
4. பரஞ்சோதி முனிவர்

(29) இலங்கையில் பத்தினித்தெய்வ வழிபாட்டை அறிமுகம் செய்த மன்னன்?
1. விஜயன் 2. விக்கிரமராஜசிங்கன் 3. கஜபாகு 4. எல்லாளன்

(30) சூரசங்காரம் நடைபெறும் விரதகாலம்
1. திருக்கார்த்திகை
2. கந்தசஷ்டி
3. விநாயகர் சதுர்த்தி
4. ஐப்பசி வெள்ளி

(31) கந்தபுராணக் காப்புச் செய்யுளின் முதல் வரி
1. "உலககெலாம்"
2. "திகடசக்கர செம்முகம்"
3. "தாவறு முலகெலாம்"
4. "தொல்லையிலும் பிறவி"

(32) சிவயோக சுவாமிகளின் குரு
1. செல்லப்பா சுவாமி
2. கடையிற் சுவாமி
3. நவநாத சித்தர்
4. வடிவேற் சுவாமிகள்

(33) திருவருட் பயனுக்கு சிறந்த உரை எழுதிய ஈழத்துச் சைவப் பெரியார்
1. திரு.சு.சிவபாதசுந்தரம்
2. பண்டிதர் மயில்வாகனம்
3. திரு.க.சி.குலரத்தினம்
4. பண்டிதர் நமசிவாயம்

3. திருக்கேதீஸ்வரம்
4. செல்வச்சந்நிதி

(10) திருக்களிற்றுப்படியார் என்னும் நூலை இயற்றியவர்
1. உமாபதிசிவாசாரியார்
2. மெய்கண்டார்
3. அருணந்தி
4. திருக்கடவூர் உய்யவந்ததேவர்

(11) அகச்சந்தான குரவருள் ஒருவர்
1. உமாபதி
2. திருநந்திதேவர்
3. அருணந்தி சிவாசாரியர்
4. மெய்கண்டதேவர்

(12) உபநிடதங்களின் சாரமாக விளங்கும் நூல்
1. திருவாசகம்
2. பிரம்மசூத்திரம்
3. வேதாந்தம்
4. புராணம்

(13) தொண்டர் தம்பெருமை கூறும் நூல்
1. கந்தபுராணம்
2. திருவிளையாடற் புராணம்
3. பெரிய புராணம்
4. விஷ்ணு புராணம்

(14) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடியவர்
1. மங்கையர்க்கரசியார்
2. அருணகிரிநாதர்
3. குமரகுருபரர்
4. உமாபதி சிவாச்சாரியார்

(15) சைவ சமயப் பண்பாட்டின் அழகியல் உணர்வை ஏற்படுத்துவது
1. சிற்பம்
2. தூய்மை
3. கோலம்
4. மாலை

(16) மேலான செல்வத்தைத் தருவது

(33) திருவருட் பயனுக்கு சிறந்த உரை எழுதிய ஈழத்துச் சைவப் பெரியார்
1. திரு.சு.சிவபாதசுந்தரம்
2. பண்டிதர் மயில்வாகனம்
3. திரு.க.சி.குலரத்தினம்
4. பண்டிதர் நமசிவாயம்

(34) இறைவனின் ஐந்தொழில்களில் திரோபவம் குறித்து நிற்பது
1. படைத்தல் 2. காத்தல் 3. அருளல் 4. மறைத்தல்

(35) அன்பால் நிறைந்த களஞ்சியம் எனப்போற்றப்படுவது
1. திருவிளையாடற் புராணம்
2. கந்தபுராணம்
3. விநாயக புராணம்
4. பெரிய புராணம்

(36) இறைவனுக்கு 1008 பெயர் சொல்லி வழிபடும் வழக்கத்திற்கு வழி வகுத்த வேதம்
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வணம்


(37) சைவ சித்தாந்த நூல்களுள் முதல் நூலாக விளங்குவது
1. சிவஞான போதம்
2. சிவஞான சித்தியார்
3. திருவருட் பயன்
4. உண்மைநெறி விளக்கம்

(38) தமிழ் ஆகமம் எனப்படுவது
1. வேதம் 2. திருமந்திரம் 3. திருவாசகம் 4. இதிகாசம்

(39) ஆளுடைநம்பி எனப்படுபவர்
1. பால நாவாயர் 2. மருணீக்கியார்
3. நம்பியாரூரர் 4. திருவாதவூரர்

(40) "தேவன் எனையாள்வான் திருக்கேதீச்சரத் தானே" எனும் தேவாரத்தைப் பாடியவர்
1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. வாதவூரர்

**நாளை, சைவ சமயம் பகுதி - I இன் விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**



# வியாழ மாற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

## தனுசு



**19.08.2004 முதல் 28.09.2004 வரை**

அரசியல் அரசாங்க மனிதர்கள் சந்திப்பு அவசர பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக இருக்கும். சிலர் நாகரிக வாகனம் வாங்குவதும் குறிப்பிடத்தக்கது. இது கார் ஆட்டோ லொறி போன்ற வாகனங்களாக இருக்கலாம். உங்கள் இலாகாவில் சில மாற்றங்களைச் செய்யக் கூடியதும் தாமதப்பட்ட எழுத்து வேலைகள் இப்போது தான் முடிந்து விடும். சுபவிஷயம் குறித்த பேச்சுக்கள் சுமுகமாக முடிந்து வரும். புத்திரர் புத்திரியர்கள் வகையில் செலவுகளும் தவிர்க்க முடியாததாக இருக்கும். வடக்கு, வட மேற்கு பிரயாணமும் எதிர்பாராமல் உண்டிற்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் நல்ல மனிதர்கள், அரசியல் அரசாங்க மனிதர்கள் நட்பும் உண்டாகும்.

**அதிர்ஷ்ட எண்கள்: 3, 6, 8,**

**அனுகூல திக்கு: வடக்கு**

**28.09.2004 முதல் 11.11.2004 வரை**

இந்த ராசி பெண்களுக்கு சுப விஷயத்தை முடிப்பவன். புது உடைகள் சேர்க்கை, பழைய பொருளை மாற்றுவது உண்டாகும். உறவினர் சந்திப்பு நல்ல தகவலை உண்டாக்கும். இந்த, குருவால் வழக்கு கடன் விஷயங்கள் பாதிக்காது. முக்கிய கடிதம் எதிர்பார்ப்பது வந்து சேரும், அயல்நாட்டு தொடர்பு உள்ளவர்களுக்கு அவசரப் பிரச்சினைகள் சில முடிவாகும் உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாறுதல் இருக்குமே தவிர உயர்வு இல்லை. நண்பர்களுக்கு உபகாரம் புரியும் காலமிது. கல்யாணம் காதல் கடிதம் வெற்றி இருக்கிறது. எல்லாம் நல்லவையே. எடுத்தமுயற்சியில் சிரத்தை குறையாமல் இருக்க வேண்டும். குரு தற்காலிகமானவனே. செவ்வாய் நன்மை இல்லை என்றாலும் கொடுமையைக் குறைக்க குரு இருப்பதால் விபத்திலிருந்தும் தப்பிவிடுவீர்கள். குடும்பப் பிரச்சனைகள் சிறிது முன இருந்தும் குறித்தபடி முடிக்க பணம் வந்து சேர்ந்துவிடும். குடும்பத்து உறவினர், நண்பர்களும் இணைந்திருந்து செயல்படுவதால் உங்கள் செயல் முறையும் மற்றவர்களால் பாராட்டப்படும். கட்டிட வகையில் இருந்து வந்த கடன் பளுவும் குறைந்துவிடும். வழக்கு நிலை இப்போது சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. கல்வியைப் பற்றி கவலை இல்லை. அவை வளர்ச்சி இருக்கும். கடைசியில் பெண்கள் மூலம் பெண்களுக்கு பதவிமாற்றம் இலாகா மாற்றம் இருக்கும். பழைய கணக்கு எழுத்து மூலம் ஏற்பட்ட சிக்கல்கள் சிலருக்கு இப்போது பாதிப்பு கொடுப்பதாக இருந்து கடைசிநேரம் நன்மையாக முடியும். இப்போது நீங்கள் விழிப்புடன இருத்தல் அவசியம். பதவி உயர்வு இடமாற்றம் இப்போதுதான் இருக்கிறது. பழைய பாதிப்புக்கள் சில இருந்தது குறைந்துவிடும். வழக்கு இருப்பவர்கள் தைரியமாக இருக்கலாம். அவை பலம் குறைய அங்காரகன் உதவியாக நிற்கிறான். கணவன், மனைவி உறவு தெளிவாக இருக்கும். சிலருக்கு புதுமணம் ஏற்கும் வாய்ப்பும் தவிர்க்க முடியாது. கடனும், வழக்கும் வெகுதூரத்தில் நிற்கின்றன. காணாமல் போன பொருட்களும் இப்போது கைக்கு வந்துசேரும். குடும்ப வாழ்க்கையில் சில பிரச்சினைகளை எதிர்நோக்க இருக்கிறீர் என்பதைக் குறிக்கிறது என்றாலும் குருவின் செயலை நன்மையாக்கும் என்பதையே குறிக்கிறது. ஆகவே நண்பர்களே அதைரியம் வேண்டாம். குரு உடன் சனியும் சேர்ந்திருப்பது, சிலருக்கு முறை தவறிய அல்லது இனமாற்றம் செய்த திருமணம் போன்ற குடும்பத்தை உண்டாக்கும் என்பதாகும். உங்களுக்கு நற்காலம் பிறந்துவிட்டதால் நேரத்தை வீணடிக்க வேண்டாம். சிறு பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியும் இருக்கும். போட்டி, பந்த யம், விளையாட்டு போன்ற வகைகள சிறு ஆதாயத்தைக் கொடுக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பாதிப்பு ஏதுமில்லை. பணப் புழக்கம் தான் எதிர்பார்த்தபடி இல்லை. பழைய நண்பர்கள் மேல்மட்ட மனிதர்கள் சந்திப்பு உங்கள் முயற்சிக்கு பலன் அளிக்கும். வாகனம் வாங்குவது, மாற்றி அமைப்பது உண்டாகும். கடன் திருப்திகரமாக இருக்கும். வழக்கு பாதிப்பு வாக்கலாம். விளையாட்டு, தேர்வு, பந்தயம் போன்ற வகையில் அனுகூலமான சூழ்நிலை இருக்கிறது. அரசியல் அரசாங்க வகையினர் கடந்த மாதம் போல் இல்லை. தொடர்ந்து நன்மை செய்வர். நடுப்பகுதிக்கு மேல் சுபவிஷயப் பேச்சு, சுபச்செலவுகள் பிரயாணம் விருந்து போன்றவைகளும் உண்டாகும். சகோதரன் வகையில் மன திருப்தியான சூழ்நிலை இல்லை. குடும்பப் பொருள் சம்பந்தமாக சிலருக்கு வழக்கு தொடர்ந்து இருந்து வரும். சத்ரு கடன் வகைகள் கட்டுப்பட்டதாக இருக்கும். கலைப் பிரிவினருக்கு அலைச்சல் அகால உறக்கம், அகால உணவு கொளவது, ஒப்பந்தம் முடியாமை இருக்கும். தன நிறைவு உடையதாக இருக்குமென்பது சந்தேகமில்லை. சகோதர அல்லது சகோதரி வகையில் புதைந்து கொண்டிருந்த விஷயம் சில இப்போது வெடித்துவிடும். இதனால் குடும்பத்தில் குழப்பமான நிலை உருவாகி பின் மறைந்துவிடும். சிலருக்கு அவசியமற்ற வழியில் பணம் செலவாகும் என்பதுதான். மேலும் உங்கள் வளர்ச்சியில் பொறாமை உடையவர்களும் இணைந்து செயல்படுவர். கலைத்துறை மனிதர்களின் ஒத்துழைப்பு உங்களை புதியபாதையில் இழுத்துச் செல்வதாக இருககும். கணவன், மனைவி உறவு கண்ணியம் மிக்கதாக இருக்கும். ஆணோ, பெணணோ உங்கள் ராசிக்கு பின் தொடர்ந்தவர்களாகத் தான் மற்றவர் இருப்பர். கடன் வழக்கு பாதிப்பு இல்லை. சிலருக்கு பதவி உயர்வு, இலாகா மாற்றம் போன்றவை இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள்: 2, 5, 11**

**அனுகூல திக்கு: கிழக்கு**

**11.02.2005 முதல் 24.03.2005 வரை**

கடிதம் வரவு கவர்ச்சிமிக்கதாக இருக்கின்றது. வாகன சித்தி வளமான பூமிப் பொருள் வாங்குவது அல்லது

# உங்களுக்கு எப்படி?

டாகும். கணவன் மனைவி உறவு கனிவுடன் இருக்கும். உறவினரும் இணக்கமானவர்களே. உடைகள் வாங்குவது போன்ற நன்மைகளும் இருக்கும். உங்கள் வேலைகளில் சுமை இருக்கலாம். ஆனால் தொழில் முன்னேற்றம்இருக்கும் போது இப்படிப்பட்ட சுமை சாதாரணமே. தேக ஆரோக்கிய விருத்தி இவைகள் குறிப்பிடத்தக்கது. சிலர் விருந்துக்குப் போவதும் வேடிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதும் இருக்கும். கணவன மனைவி உறவு கனியாக இருக்கும். கடன் வழக்கு போன்றவைகள் கட்டுப்பட்டு இருக்கின்றன.

கௌரவச் செலவுகளையும் கொடுக்கும் காலம். உங்கள் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள காலம கோட்கள் அனுகூலமாக இருக்கிறன. கடன் வரவு எதிர்பார்த்தது. உடனே வந்து சேரும். செய்தொழில் வகையில் கவனம் இல்லை. மேம்பட்ட மனிதர்களின் தொடர்பு மேன்மைமிக்கது. சோர்வு கொள்ளும் நேரத்தில் உங்களுக்கு அனுகூல சூழ்நிலை உருவாகி வந்துவிட்டது. குடும்ப உறவிலும் எதிர்பார்த்ததை விட இணக்கமாக எல்லாம இருப்ப தால் நீங்கள் உங்கள் பாதையில் நம்பிக்கையோடு செல்லலாம். நடந்து போக வேண்டிய இடத்திற்கு இப்போது வாகனத்தில் செல்வீர்கள். தொழில் சம்பந்தமாக சில நன் முடிவு எடுத்தலும் உண்டாகும். குடும்பத்திற்கு நாகரிகப் பொருள் சேர்க்கை, குழந்தைகளுக்கு அணிகலன் சேர்க்கையும் உண்டாகும். நாகரிகப் பொருள் சேர்க்கை உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் ஆதாயமே இருக்கும். பூமி வீடு வாகன நன்மையும் உணடாகும். பூமி வாங்குவதும் ஏற்படும். கணவன் அல்லது மனைவி வகைக்கு மருத்துவச் செலவு இடம்பெறுவது தவிர்க்க முடியாதது. சகோதர, சகோதரி வகையில் சுப செலவுகளும் இடம்பெறும். உத்தியோகப் பிரிவு ஆ ண், பெண்களுக்கு நல்ல இலாகா மாற்றத்தை இப்போது எதிர்நோக்கலாம். குடும்பத்தில் சில பாதிப்புகள் இருப்பது நீங்கிவிடும். உடல் நலத்தைக் கவனிப்பது இப்போது மிக மிக அவசியம். செலவுகள் இருக்கின்றன. இவ்வழி உங்கள் ராசிக்கு வருவாய் குறைவுதான்.இதுவரையில் பொதுவாக நட்டத்தில் தான் இருக்கும். அவனையும் கவனித்து நடக்கவும். குடும்பத்தில் இருந்து வந்த வேற்றுமைகள் படிப்படியே குறைந்துவிடும். தூரத்துக் கடிதம் தொழில் சம்பந்தமாக முழு மனத் திருப்தியளிக்காது.

தொழில் வழியில் நீசத் தொழில் சினிமா சம்பந்தமான தொழில் உள்ளவர்களுக்கு மட்டுமே மனத்திருப்தியான தனவருவாயைக் கொடுக்கும். சிலருக்கு இது படம் ஒப்பந்தம் செய்வது போன்றவையை செய்யும். இரும்பு இயந்திர சம்பந்தமான தொழில் செய்பவர்களுக்கு இப்போது தொழில் மந்தம் இருக்கும். அனால் பணப் பிரச்சனை இல்லை. பழைய பொருட்கள் விற்பனை வியாபாரிகளுக்கு கணிசமாக தன ஆதாயம் இருக்கும். சுக இல்லத்து ராகு தேக சுகத்தை வெளி இடத்திலும் அனுபவிக்கச் செய்யும். சுப விஷயம் சம்பந்தமான கடிதத் தொடர்பு இப்போது. இனிப்பாக இருக்கும். சிறு தொழில் நடுத்தரப் பிரிவினருக்கு இது உங்களுக்கு பலம்மிக்க காலம் என்பதில் சந்தேகமில்லை. குருவே நிறைந்திருந்தாலும் (உச்சமாக) சனி உங்களுக்கு திரிகோணத்தில் நிற்பதால் நினைத்தவை நடக்கும். குறித்த காரியங்கள் சாதிக்கப்படும் என்பது முன்னேற்றப் பாதையையே காட்டுகிறது. சிலர் வட்டு மனை வாங்குவது அல்லது ஒப்பந்தம் செய்வதும் இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள்: 1, 2, 5**

**அனுகூல திக்குகள்: மேற்கு, தெற்கு**

**11.112004 முதல் 26.12.2004**

கூட்டுமுயற்சி குறித்தபடி நிறைவேற்ற பயன்படும் சில வழியில் தள்ளிப் போய்விடும். இது உங்கள் திறமை நேர்மையைச் சோதிக்கும்.எழுத்து ஒப்பநதம் இந்த வழிகள் பிரகாசமாக இருக்கின்றன. உத்தியோகப் பிரிவு, ஆண், தராது. இப்போது போட்டி, பந்தயம், லாட்டரி போன்ற வழி தன ஆதாயமும் கிட்டும் காலம். கடல் க்டந்து சென்றிருந்த உறவின்ர் வரவு, சுப காரியங்களை நிறைவேற்ற சாதகமாக அமைந்திருக்கின்றன. அரசாங்க மனிதர்கள் அனுகூலமாக இருப்பர். மற்றவர் ஒத்துழைப்பு மறைமுகச் செயலையும் காட்டாது. நன்மை தருவதாக இருக்கின்றன. கணவன், மனைவி உறவு கவர்ச்சி மிக்கதே. நண்பர்கள் சிலரைச் சந்திப்பது, நல்ல ஆலோசனைக்கு வழிவகுக்கும். குடும்ப வகைக்கு நாகாகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். புத்திரியர், வகை கல்வி உயர்வு மனத்திருப்தியளிப்பதாக இருக்கின்றன. மறைந்திருந்த விஷயங்கள் சில வெளியாவதால் தொழில் குடும்ப வகையில் புதிய நிர்ப்பந்தம் உருவாகி இருப்பதை உணருவீர்கள். அடிக்கடி பிரயாணம் உண்டாவது தவிர்க்க முடியாது.

**அதிர்ஷட எண்கள்: 6, 7, 3**

**அனுகூல திக்குகள்: மேற்கு, வடமேற்கு**

**26.12.2004 முதல் 11.02.2005 வரை**

திடீர் பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கிறது. காதல் கல்யாண சம்பந்தமாக செய்து வந்த கடிதத் தொடர்பு இப்போது இனிக்கும். குடும்பத்தில் உறவினர் போக்குவரவு சுப காரியங்கள் நன் முடிவை உண்டாக்கும். நாகரிகப் பொருட்கள் வாங்குவது நல்ல நண்பர்களைப் பெறுவதையும் செய்யும். வேடிக்கை விருந்து அனுபவித்தலும் உண்டாகும். நடுப்பகுதி முதல் உங்கள் தொழில் வகை எப்போதும் போல் இயல்பாக இருக்கும். பெரிய மனிதர்களால் நன்மைகள் மறைந்தாலும் திரிகோணம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவனே. சில வேலைகளுக்கு குறித்த நபரைத் தேடிப் போனாலும் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கும். செவ்வாயும் சாரம் இதர இனத்தவர்களால் அனுகூலத்தை செய்யத்தக்கவர்கள். பெரிய குடும்ப வகையில் போதிய மனதிருப்தியும் இருக்காது. உறவினர் வகை கூடிப் பேசுவதால் திருப்தியான சூழ்நிலையை உருஇல்லம் அமைந்த இந்த ராசி விவசாயிகளுக்கு உண்டாகும். கணவன், மனைவி உறவு கடைசியில் மனதிருப்தியைக் கொடுக்கும். சூரியன் பலமிழந்து எல்லையில் செல்லுவதால் உத்தியோகப் பிரிவினர்களுக்கு ஆரோக்கியம் பாதிப்பு எதிர்பாராமலே ஏற்பட்டு மருத்துவச் செலவைக் கொடுக்கும். இதனால் சிலர் கட்டாய விடுமுறையை நோக்குவர். இப்போது மூன்றாவது மனிதரது தொடர்பு அவசியமாகும். பெண்கள் இந்த வகையில் மிகவும் கவனமுடன் இருத்தல் அவசியமாகும். சகோதரன், சகோதரி வகைக்கு சுப நலன்களும் புது உடை ஆபரண சேர்க்கையும் உண்டாகும். குடும்பத்தில் சில சமயம் சில சலசலப்புக் காணப்பட்டாலும் அவை அடங்கிவிடும். வியாபாரிகள் கணக்கு அரசாங்க வகையில் மட்டும் சற்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எழுத்துவகை பாதிப்புக்கு இக்காலம் கடைசியில் இடம் உண்டு. கணவன், மனைவி உறவு சுகமானதே. உத்தியோகப் பிரிவு கலைப்பிரிவினருக்கு தொழில் வழியில் பெரியதொரு முன்னேற்றம் எதிரே இருக்கின்றன. பதவி உயர்வு, பாராட்டு முயற்சி ஒப்பந்தம் தன ஆதாயமும் உண்டாகும். எதிர்பாராத பிரயாணம் மேல்மட்ட உத்தரவும் அனுகூலமானது. தேக சுகத்தை கவனிக்கவும். உங்களுக்கு மட்டுமல்ல குடும்பத்திலும் மருத்துவச் செலவு இடம்பெறும். மறைந்திருந்த உண்மை சில வெளியாகும். நிதானமாகப் போகவும். விருந்துண்ணும் காலம். இக்காலம் சிலர் அயல்நாட்டுப் பிரயாணத்தை ஏற்பதும் அவசியமாகும். புத்திரர், புத்திரியர்கள் ஆரோக்கிய வகை செலவு முக்கிய இடம்பெறும். சிலருக்கு பல், காது வலியும் உண்டாகி நீங்கும். என்றாலும் உத்தியோகப் பிரிவினர்களுக்கும் இப்பலன்கள் உரியதுதான். அலுவலகப் போக்கு திருப்தியாகவே இருக்கும். **அதிர்ஷ்ட எண்கள்: 5, 3, 9 அனுகூல திக்கு: தென் கிழக்கு**

(தொடரும்)

# நல்லூரான் திருவடிக்கு



## பத்தாம் திருவிழா
## மஞ்சமதைத் தொட்டிழுக்கும் தொண்டு

விண்ணவொளி வீசுகின்ற மஞ்சமதன் மேலே
எண்ணமெல்லாம் கொள்ளைகொள்ளும் வேலவனைக் கண்டே
பண்ணுடனே திருமுறையைப் பாடியேபின் வருவார்
கண்ணிறைந்த காட்சிகண்டு அகங்குழைந்து நிற்போம்

தஞ்சமென நாடிவந்து திருநல்லூரில் கூடி
விஞ்சுபுகழ் வேலவரைக் கைகூப்பியே தொழுவார்
மஞ்சமதைத் தொட்டிழுக்கும் தொண்டுசெய்து தேவ
குஞ்சரியின் நாயகனை ஏத்திப்போற்றித் தொழுவோம்

கவிமணி கந்தமுருகேச தாசனார்.

## கோலம் எமைப் பிணிக்கும்!

விஞ்சு மடி யார்கள்
வீதி களை நிறைத்து
தஞ்சம் தனைக் கோரி
தாழ்ந்து வணங்கு கையில்
மஞ்சம் தனி லேறி
மாதவத்தைக் காக் கின்ற
கொஞ்சும் எழிற் குமரன்
கோலம் எமைப் பிணிக்கும்!

கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## என்ன தவம் செய்தோம்

முத்தமிழைக் காத்து நிற்கும் முருகையா!
மூவுலகும் போற்றுகின்ற நல்லைக் குமரையா!
தத்துவத்தின் பொருளான உமைபாலா!
தமிழர்குத் துணையான வடிவேலா!
முத்தொளிரும் மஞ்சந்தனில் ஏறி
கந்தா! நீ வருகின்ற காட்சி காண
இப்பிறப்பில் என்னதவம் செய்தோம்
சரவணனே! இன்னருளைத் தந்தெம்மை காருமையா

மு.முத்துக்குமார்.

## மஞ்ச விழா

ஐயிரண்டாம் திருவிழா வேலனுக்கு
ஐங்கரனின் இளையோனுக்கு அவ்விழா
மஞ்சமேறி வீதியிலே வரும் விழா
மருதநில மக்களிங்கு வணங்கினரே!

கு.கண்ணன்
த.பெ. இல-1603 கொழும்பு.

## வளைக்கை குவிப்பர் வணங்கி

கொஞ்சுமின் சொற்குழலார் இயல்கண்டு மஞ்ஞை
இனம்நாணிக் கொம்பர் மறைய

# மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்து யாழ்.நகரில் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

ஜாதிகஹெல உறுமய வினால் முன்வைக்கப்பட்ட உத்தேச மத மாற்றத் தடைச் சாட்டத்திற்கு எதிாப்புத் தெரிவிக்குமுகமாக யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் கண்டனப் பேரணியொன்று நடாத்தப்பட்டது.

யாழ.மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவத் திருச்சபைகளின் ஏற்பாட்டில் இவ் உத்தேச மத மாற்றத் தடைச் சாட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். றிமபர் மண்டபத்தில தமிழ் மிஷன் தலைவர் போதகர் இ



டதைத் தொடர்ந்து யாழ்.நகர் வீதிகளூடாக இந்தக் கணடனப் பேரணி நடைபெற்றது.

இன்ரஷனல் கிறிஸ்ரியன் மிஷனைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜானக்க எதிர் சிங்க, இயேசு நிலையத்தைச் சேர்நத 'ஜார்ச அரியநாயகம், பரிசுத்த ஆலயப் போதகர் ரமேஷ ஆகியோர் உட்பட ஏனைய கிறிஸ்தவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் திருச்சபை களைச் சோந்தோர் எனப் பல நூற்றுக் கணக்கானோர் இக் கண்டனப் பேரணியில் கலந்து கொண்டனர்.

கண்டனப் பேரணியின் இறுதியில் யாழ்.மனித உரிமைகள் ஆணைக குழு அலுவலகத்தில் அதன் இணைப்பாளர் றுவான் சந்திரசேகரவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இது தவிர, இம் மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், நோர்வே சமாதானக்குழு அனைத துலக மனித உரிமை பிரகடனம், சகல வெளிநாட்டுத் தூதுவர்கள மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



கையளிக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரில், ஜாதிக ஹெல உறுமய வினால் கொண்டுவரப் பட்டுள்ள கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத் திற்கு உயர் நீதிமன் றத்தில் 22 வழக்குகள் தொடுக்கப் பட்டு அவைகள் பாீசிலிக்கப் பட்டுள்ளன.

உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை சபாநாயகர் மூலம் கடந்த 17ஆம் திகதி பாராளு மன்றத்தில் சமர்ப பித்தது. இந்தச் சட்டமானது மனித அடிப்படைக்கு விரோத மாக உள் ளது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இந் நிலையில் ஹெலஉறுமய இந்தச் சட்டத்தைப் பாராளுமன றத்தில் எப்படியாயினும் கொண்டு வருவதாக நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளது.

இச்சட்டம் கொண்டு வரப் படும் நோக்கமானது, "கட்டாய மதமாற்றம்" இலங்கையில் இல்லாதபோது, அதனைக் கொண்டு வருவதன் மூலம், மேலதிக பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றவும் அரசியல் லாபம் தேடுவதற்காகவுமே.

இதன்படி கட்டாய மதமாற்றச் சட்ட மூலத்தை தற்போது உள்ளது போன்று கொண்டு வந்தாலோ அல்லது அதற்கு மாற்று யோசனைகளை முன் வைத்தலோ நடக்கப்போவது நாட்டிலுள்ள சிறுபான்மை மதங்களாகிய இந்து, முஸ்லிம், கத்தோலிக்கர் மற்றும் கிறிஸ்துவை பின் பற்றுகிறவர்களுக்கு விரோதமாக பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களை ஏவி விடுவதென்பதாகும்.

இப்போதைய இலங்கையில ஆட்சியைக்கைப்பற்றும் படியாக சிறுபான்மையினருக்கு விரோதமாக பெரும்பான்மையினரை ஏவி விட்டதன் நிமித்தம், தற்போது இலங்கையில் மாபெரும் யுத்தம் நடைபெறுகிறது.

அக்காரியமானது 1957 ஆம் ஆண்டு சிங்கள மொழியை அரச மொழியாக அரசு அமுல் படுத்தியதால், தமிழ் மொழிக்கு அநீதி நேர்ந்தது. அதற்குக் கிடைத்த பதில் தான் இப்போதைய யுத்தம்.

தற்போது கொண்டு வரப் படவுள்ள "கட்டாய மத மாற்றத் தடைச்சட்டத்தை" எந்த விதத்தில் கொண்டுவந்தாலும் நடக்கப் போவது பெரும் பான்மையின பௌத்தத்திற்கும் சிறுபான்மையின மதத்திற்கும் இடையிலானபெரும் சிவில் யுத்தமே.

மேலும், அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிபபடை உரிமைகள் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனப்படி காணப்படும் உரிமைகள் என்பன இலங்கை முழுவதையும் எதிர்காலத்தில் நாசமாக்கிவிடும்.

இதனால், இலங்கை அரசாங்கத்திற்கும் சகல அரசியல் கட்சிகளுக்கும் இதுபோல் சமுதாயத்தை பேதைப்படுத்தும் யோசனைகளுக்கும் பாராளுமன்றத்தில் ஒத்துப்போகாது இருக்கும் படி இந்த விண்ணப்பத்தின் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

" அதேபோல், குறித்து நல்ல தீர்மானம் எடுக்கும்படி அரசாங்கத்திறகோ அல்லது கட்சிகளுக்கோ வற்புறுத்தும் படி சர்வதேசத்தைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இதே வேளை, இலங்கையில் சிறு மதங்களுக்கான பாதுகாப்பை உடன் உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுளளது.

(ரு-5)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப் படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 18வது தொடர், எதிர்வரும் 1ஆம் திகதி புதன் கிழமை பி.ப 3.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்

கு.கண்ணன்
த.பெ. இல-1603 கொழும்பு.

## வளைக்கை குவிப்பர் வணங்கி

கொஞ்சுமின் சொற்குழலார் இயல்கண்டு மஞ்ஞை
இனம்நாணிக் கொம்பர் மறைய
அஞ்சன மைவிழிக்கூர் கொலைநாட்டர் அஞ்சும்
அயிலார்ந்த வேற்கை அழகன்
மஞ்சுறை வானிடை மின் வெளிப்போந்த தென்ன
மலர்க்கூந்தல் மாதர் மகிழ
மஞ்சம தில்நலூரான் வரும்வாழ்வைப் போற்றி
வளைக்கை குவிப்பார் வணங்கி
தஞ்சம தின்றியெங்கும் தடுமாறு மாந்தர்
தமைத்தாங்கு பாதம் பரவ
நெஞ்சம தில்நடுக்க மிலாமல்நேர் நின்று
வரம் கேட்டு நீடு துதிப்பர்
வஞ்சமில் நெஞ்சுநீங்கா வடிவேலன் நல்லூர்
மஞ்சத்தில் வருகை அறிந்து
அஞ்சிலோ திருஅரமக ளிருமாக அன்பால்
வளைக்கை குவிப்பர் வணங்கி

சிவ.சண்முகவடிவேல

## தமிழர்களின் தெய்வம் மஞ்சமேறி வருகிறான்

அஞ்சேலென அபயந் தந்து நல்லூரான்
அழகான திருமஞ்சத்தில் வருகிறான்
பஞ்சம் பிணியை பாரினில் போக்கிட
பாவையர்கள் சகிதமாக மஞ்சத்தில் வருகிறான்
வெஞ்சமரை நிறுத்தி விடிவொன்று தந்திட
வேலேந்தி மயிலேறி திருமஞ்சத்தில் வருகிறான்
தஞ்சமென புகுந்த அடியவரைக் காக்க
தமிழர்களின் தெய்வம் மஞ்சமேறிவருகிறான்

மதுரகவி காரை
எம்.பி. அருளானந்தன்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 18வது தொடர், எதிர்வரும் 1ஆம் திகதி புதன் கிழமை பி.ப 3.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'தொடரும் திட்டமிட்ட தமிழ் இனத்துவ அழிப்புக்கள்' எனும் தலைப்பில் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் கருத்துரை வழங்கவுள்ளார். (ந)

## சமாதான கிராமமாக அரசினால் 'கப்புதூ' தெரிவு

(கொழும்பு)

அரசின் சமாதானத்தை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் சமாதானக் கிராமமாக யாழ். மாவட்டத்தில் இருந்து "கப்புதூ" கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனின் கோரிக்கையின் பேரில் நீதி அரசியலமைப்பு நல்லிணக்க, அமைச்சு வடமராட்சி, தெற்கு-மேற்கு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கபபூதூக் கிராமத்தைத் தெரிவு செய்துள்ளது.

இதற்கமைய அரசின் சமாதானத்தை கட்டியெழுப்பும் திட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் லக்சறோ பொ்னாண்டோவின் பணிப்பின் பேரில் உயர் அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட கிராமத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளது. (ந-க)


க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.



விவாத அரங்கு -5

விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர்
கலாசாரத்தைப் பாதிக்கின்றது,
பாதுகாக்கின்றது.

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி
அனுப்பிவையுங்கள
அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# பித்து!

புதிதாகத் திருமணம் முடித்த ஒருவன் அலுவலகம் முடிந்து வீட்டிற்கு வந்தான். "ஜான்! ஜான்" என்று கூப்பிட்டான். உடனே அவனது மனைவி ஓடிவந்து கதவைத்திறந்தாள். "எப்படி இருக்கிறாய் ஜான்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்றான் இவன். இந்த இடத்தில் நமக்கு ஒரு சந்தேகம் வரலாம். இவன் ஜான் ஜான் என்று கூப்பிடுகிறான் இவனது மனைவி வந்து கதவைத் திறக்கிறாளே அப்படியென்றால் ஜான் என்பது யார்? அது ஆணின் பெயரல்லவா? என்ற சந்தேகம்! உண்மைதான்.

அவன் மனைவியின் பெயரைச் சுருக்கி செல்லமாக அப்படிக் கூப்பிடுகிறான். அது வந்து வேறுஒன்றுமில்லை. மனைவியின் பெயர் ஜானகி. அதைச் சுருக்கி ஜான் என்று கூப்பிடுகிறான். கி.யை விட்டுவிட்டான்.

இதை வாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவில் சொன்னார். ' இவன் ஜானகியிலிருந்த கியை மட்டுமா விட்டான். வீட்டுக் கீயையே இப்போது அவளிடம் தானே விட்டு வைத்திருக்கிறான்' என்றார். அதாவது வீட்டுச் சாவியே இப்போது அவளிடம் தான்.

வந்தவன் அவள் முகத்தைக் கவனித்திருக்கிறான். அவள் கண்கள் கலங்கியிருந்தன. தேம்பித்தேம்பி அழுவது போலிருந்தது. உடனே இவன் பதறிப்போய்விட்டான். "ஏன் என்னாயிற்று உனக்கு? ஏன் இப்படி அழுகிறாய்? என்று கேட்டான். அதற்கு அவனது மனைவி சொன்னாள். "உங்கள் அம்மா என்னை உற்று உற்றுப் பார்க்கிறார்" என்றாள்.

உடனே இந்த மகன் கொல்லைப் பக்கம் ஓடினான். அம்மாவைப் பார்த்தான். "ஏனம்மா ஜானை உற்று உற்றுப் பார்க்கிறாய்?" என்று கேட்டான். " நான் ஒன்றும் தவறாகப் பார்க்கவில்லையே உனது மனைவியல்லவா? அதனால் ஆசையாகப் பார்த்தேன்" என்றார் அவர். இவன் மனைவியின் முகத்தைப் பார்த்தான். மறுபடியும் அம்மாவின் பக்கம் திரும்பினான் "இருந்தாலும் ஏன் அவளைப் பார்த்தாய்? " என்று கேட்டுப் பெற்ற தாயையே அடிக்க ஆரம்பித்து விட்டான்.

அதறகுள் அந்த மருமகள் ஓடிவந்து "ஐயோ... அத்தையை அடிக்காதீர்கள்?" என்று கத்திக் கொண்டே அத்தையின் இரண்டுகைகளையும் சேர்த்து இறுக்கிப் பிடித்துக்கொண்டாள். இப்போது அவனுக்கு இன்னும் வசதியாகப் போய்விட்டது.

மகனிடம் அடிவாங்கிய அம்மா அன்று மாலை ஆலயத்திற்குச் சென்றார். கடவுளிடம் வேண்டிக் கொண்டார். "கடவுளே! அவன் என் மகன். அவனது மனனவையும் எனக்கு இன்னுமொரு

# இலங்கையின் இனப் பிரச்சினையை உள்விவகாரம் எனக் கூறமுடியாது

## ஜப்பான் தூதுவர் அகியோ சூடா

(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான படுகொலைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்துள்ள ஜபபான் அரசாங்கம் இன்னமும் இதனை உள்விவகாரம் எனக் கூறமுடியாது என்று தெரிவித்துள்ளது.

ஜப்பான் தூதுவர் அகியோ சூடா கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநரட்டிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

தொடர்ந்து வரும் படுகொலைச் சம்பவங்கள் ஜப்பான் மட்டுமன்றி சர்வதேச சமூகத்தினால் கவனிககப்பட்டு வருகின்றன. இவை ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானவை. டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் ஒரு அங்கத்துவர் என்ற முறையில்,இக்கொலைகளை உடனடியாக நிறுத்தும்படி ஜப்பான் அரசாங்கம் கோருவதாகத் தெரிவிததார். குறிப்பாக படுகொலைச் சம்பவங்கள் பொது மக்களை இலக்கு வைத்ததாகவும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறுவதாகவும் இருப்பதானது சர்வதேசத்தின கவனத்தை ஈர்த்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-6)

# எத்தகைய நெருக்கடிகளையும் அரசு சமாளிக்கத் தயார்!

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் அபிவிருத்திகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கும் அரசாங்கம் நடவடிககைகளை எடுத்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபகஷ தெரிவித்துள்ளார்.



குருனாகல் மாவட்டத்திற்கு விஜயம் செய்த பிரதமர், அங்கு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தது. இந்த நெருககடிகள் எதிர்காலத்தில் அதிகரிக்காமலிருப்பதற்காக அரசு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிபபாகப் பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்ற போதும் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கபபட்டு வருகின்றது என்றார். (ற-க,61)

## இராசி பலன்

30.08.2004 *(ஆவணி 17,திங்கட்கிழமை)*

பூரணை முற்பகல் 08.59 மணிவரை

சதயம் சித்தம் முன்னிரவு 9.38 மணிவரை

இராகுகாலம் 7.35 - 9.05 மணிவரை

சுபநேரம் 12.05 - 01.35 மணிவரை

**மேடம்**

தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழிலில் முன்னேற்றம், கலந்துரையாடல், கர்த்தி.

**இடபம்**

லட்சுமிகரம், செய்தொழில் நன்மை, புதிய முயற்சி, எதிர்பாராத நன்மை.

**மிதுனம்**

பிறருக்கு உதவுதல், அபகர்த்தி, புதிய திருப்பம், இடமாற்றம்.

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளசுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை கால்ல 10.00மணியளவில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தாவை அவரது கொழும்பு வாசஸ்தலத்தில் சநதித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி வூட்டர் வில்டன், தற்போதைய ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத்துவ நாடான நெதர்லாந்தின் தூதுவர் திருமதி சுசன் பிரின் கார்ட் ஆகியோரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பாக செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி கே.விக்கினேஸ்வரன், எஸ்.தவராசா மற்றும் சட்டத்தரணியும் மனித கௌரவத்திற்கான அமைப்பின் பிரதிநிதியுமான செல்வி.மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் கலந்து கொணடனர்.

இச்சந்திப்பின் போது வடக்கு- கிழக்கில் ஜனநாயக ரீதியாக செயற்பட்டு வரும் மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகள், வடக்கு-கிழக்கில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் தொடர்பாகவும், வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்புப் பகுதிகளில் அதிகரித்துவரும் அரசியல் படுகொலைச் சம்பவங்கள் குறித்தும், சமாதான முயற்சிகளில் தோன்றியுள்ள நெருக்கடி நிலை மற்றும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான ஈ.பி.டி.பியின் நிலைப்பாடுகள் என்பன ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் எடுத்தியம்பப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் வரையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை ஐரோப்

ஆலயத்திற்குச் சென்றார். கடவுளிடம் வேண்டிக் கொண்டார். "கடவுளே! அவன் என் மகன். அவனது மனவைியும் எனக்கு இன்னுமொரு மகள் மாதிரித்தான். அவர்கள் தெரியாமல் நடந்து கொண்டார்கள். அதை நீ பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுக்கு ஒரு குறையும் வரக்கூடாது'' என்று மனமுருகி வேண்டினார்.

இதைத்தான் பெற்ற மனம் பித்து என்று கூறுவர்கள் என்கிறார் கிருபானந்தவாரியார். இங்கே பித்து என்று கூறுவது. பைத்தியம் என்ற அர்த்தத்தில் அல்ல. பித்து என்பது மெய்யன்பு. தனக்குச் செய்யும் துன்பத்தை மறந்து பிள்ளைகள் மீது ஒரு தாய் வைக்கும் மெய்யன்பு இருக்கிறது பாருங்கள் அதுதான் பித்து என்றார் அவர். பித்துப் பிடித்து அலைவது வேறு பைத்தியம் பிடித்து அலைவது வேறு.

ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து அவசரமாக ஒருவர் வெளியே ஓடிவந்தார். சட்டை கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. வெளியே எதிரில் வந்த ஒருவர் அவரை மடக்கிப் பிடித்தார். "எங்கே ஓடுகிறீர்கள்? உள்ளே வாருங்கள் டாக்டரைப் பார்க்கலாம்'' என்றார்.

இவர் மெதுவாக "நான் தான் சார் டாக்டர். புதிதாக வந்த ஒருவன் என்னை இப்படிச் செய்துவிட்டான். பின்னால் அவன் என்னைத் துரத்திக் கொண்டு வருகிறான். நீங்கள் முதலில் போய் அவனைப் பிடியுங்கள் நான் பின்னால் வருகிறேன்'' என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

எதிர்பாராத நன்மை.

**மிதுனம்**

பிறருக்கு உதவுதல், அபகர்த்தி, புதிய திருப்பம், இடமாற்றம்.

**கடகம்**

உறவினர் வெறுப்பு, தொழில் சிறப்பு, வாகன பயம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**

தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தனஇலாபம், நண்பர்கள் சந்திப்பு.

**கன்னி**

தொழில் நன்மை, உடல் நலம், எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை.

**துலாம்**

போசன சுகம், சகோதரர் உதவி, காரிய தாமதம், குடும்ப கவலை.

**விருச்சிகம்**

மனச்சோர்வு, பொருட் சேர்க்கை, புதிய விடயம், காரிய தாமதம்.

**தனுசு**

கௌரவ நிலை, அந்நியர் சந்திப்பு, போசன சுகம், பணவரவு.

**மகரம்**

சொத்து நன்மை, விவாதம், போசன சுகம், மனச் சஞ்சலம்.

**கும்பம்**

தொழில் முயற்சி, எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, பிறருக்கு உதவுதல்.

**மீனம்**

தொழில் நன்மை, சிந்தனை மிகுதி, கோபப்படுதல், எதிர்பாராத நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான ஈ.பி.டி.பி யின் நிலைப்பாடுகள் என்பன ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் எடுத்தியம்பப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் வரையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை ஐரோப்பியப் பிரதிநிதிகள் ஆர்வமுடன் செவிமடுத்ததுடன், இவை தொடர்பாகத் தாம் கவனத்தில் கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். (ற)

# புலிகளுக்கு நோர்வே பயிற்சியா? மறுக்கிறது அந்நாட்டுத் தூதரகம்

(கொழும்பு)

நோர்வே அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி அளித்ததாகக் கூறப்படும் செய்திகளை இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் மறுத்துள்ளதுடன், அது தொடர்பாக அறிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், நோர்வேக்கு அழைத்துச் சென்று இராணுவப் பயிறசிகளை வழங்கியதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டி பிரதமருக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தது.

உண்மையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நோர்வேயின் "ரேனா'' இராணுவ முகாமுக்கு வருகை தந்தது.

அங்கு அமைதி காக்கும் நடைமுறையில் நோர்வே நாட்டுப் படையினர் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பது குறித்து மட்டுமே இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அததுடன், விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், "ஜனநாயகத்தில் இராணுவத்தின் பங்கு'', " பாராளுமன்ற அரசாங்கம", "ஜனநாயம்", "உள்ளூராட்சி சபைகளில் கட்சிகளின் போக்கு" என்பன தொடர்பான ஆய்வுகளுக்காக மேற்கொண்ட ஐரோப்பிய விஜயத்தின ஒரு பகுதியாகவே "ரேனா"இராணுவ முகாமைப் பார்வையிட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-க,61)

> ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி. - குறள்

வலம்புரி

## தனது நேர்மையை இராணுவம் நிரூபிக்க வேண்டும்

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசும், விடுதலைப் புலிகளும் கடைப்பிடிப்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசும், விடுதலைப் புலிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது. ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கையை கடைப்பிடிப்பதில் அரசு கூடிய கவனம் எடுப்பது என்பது, படையினர் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்பதே பொருளாகும்.

எனினும், இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேராவின் கருத்து படையினர் என்ற பதம் முன்மொழியப்படாமல் அரசு என மொட்டையாகக் கூறியமை அவரின் நேர்மையற்ற தன்மையை காட்டி நிற்கின்றது.

அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையை கடைப்பிடிப்பதில் கூடிய அக்கறை எடுக்கவேண்டும் என கூறிய இராணுவப் பேச்சாளர், ஓர் வித்தியாசமான கோரிக்கையையும் முன்வைத்துள்ளார். அதாவது இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர்களை கொலை செய்வதில்லை என்ற முடிவை விடுதலைப் புலிகள் எடுக்க வேண்டும் என்பதே அவரின் கோரிக்கையாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட இராணுவப் பேச்சாளர் அந்தக் கோரிக்கைக்கு அடுத்தபடியாக இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர்களை கொலை செய்வதை விடுதலைப் புலிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டமையானது, இராணுவத்தின் கபட நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர்களை பாதுகாப்பதற்காகவே யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது போன்றும் அவ்வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பதாயின் இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற கருத்திலும் இராணுவப் பேச்சாளரின் கூற்று அமைந்துள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்த பின்னர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து தடுக்கப்பட்டமை, யாழ். பஸ் நிலையப் பகுதியில் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்ட பொதுமகன் ஒருவர் சுடப்பட்டமை, இவற்றிற்கு மேலாக விடுதலைப் புலிகள் அமைப்பை பிளவுபடுத்தி, கிழக்கு மாகாணத்தில் குழப்பத்தை ஏற்படுத்த இராணுவம் எடுத்த முயற்சிகள், இவையாவற்றின் போதெல்லாம் யுத்தநிறுத்த உடன்படிக்கை பற்றி எதுவுமே வாய்திறக்காத இராணுவப் பேச்சாளர், இராணுவத்திற்கு தகவல் கொடுக்கும் உளவாளிகள் கொலை செய்யப்படும் போதுமட்டும் அவசரப்பட்டு இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர்களை கொலை செய்யக்கூடாதென ஒரு பக்கம் சார்ந்து கூறுவது விசித்திரமானதாகும். இது ஒருபுறம் இருக்க, அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்து கொண்டதன் பின்னர் கடந்த ஏழு மாதங்களில் 738 கொலைகள் நாட்டில் நடந்திருப்பதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா கூறியுள்ளார்.

இவ்வாறு நாட்டில் கடந்த 7 மாதங்களில் இடம்பெற்ற 738 கொலைகளுக்கும் காரணம் விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்ட உட்பூசலும், பாதாள உலகக் கும்பலுமே என கூறியுள்ளார்.

சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டுவது பொறுப்பு வாய்ந்தவராக இருக்கும் பொலிஸ்மா அதிபர் யுத்தநிறுத்த காலத்தில் மேற்போந்த அறிக்கைகளை விடுவது மிகவும் பாராதூரமான தவறாகும். விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் ஏற்பட்ட உட்பூசல், அதிகரித்த கொலைகளுக்கு காரணம் என கூறுவது விடுதலைப் புலிகளைச் சீண்டும் நடவடிக்கையாகும்.

நாட்டில் சட்டத்தையும், நீதியையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் இலஞ்ச ஊழல்களுக்குள் சிக்குண்டு தமது கடமையை செய்யமுடியாமல் இருப்பதன் காரணமாகவே நாட்டில் கொலைகள் நடைபெறுகின்றதென்பதை கூறலாம். காரணம் இல்லாதவற்றை காரணமாகப் பொலிஸ்மா அதிபர் கூறுவது பொருத்தமற்றதாகும்.

ஆக, நாட்டில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஆயுட் காலம் நீடிக்கவேண்டுமாயின் முதலில் இராணுவமும் பொலிஸாரும் தமது நேர்மைத் தன்மையை வெளிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### மதமாற்றத் தடைச் சட்டம் குறித்து

# சகல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் ஜாதிக ஹெல உறுமய விளக்கம்

(கொழும்பு)

கட்டாய மதமாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்த ஜாதிக ஹெல உறுமய இலங்கையில் உள்ள சகல வெளிநாடுத் தூதுவராலயங்களுக்கும் விளக்கமளித்து வருகின்றது.

ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தர்கள் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, பங்களதோஷ் மற்றும் பாகிஸ்தான் அகிய நாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

தொடர்ந்து இவர்கள் அடுத்த வாரம் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து கட்டாய மதமாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கவுள்ளனர்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத்தலைவர் சங்கைக்குரிய அத்துரலிய ரத்தின தேரர். கனடா தலைநகர் ஒட்டாவாவில் நடைபெறவுள்ள பொது நலவாயப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு பயணமாகியுள்ளார்.

உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் இவர் கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாகளுக்கு விஜயம் செய்து மதமாற்றத்தடை சட்டமசோதா குறித்து அந்நாடுகளில் வாழும் இலங்கையர்களின் ஆதரவையும் திரட்டவுள்ளார். (ற-க)

# தென்பகுதி லயன்ஸ் கழகங்கள் குடாநாட்டு அபிவிருத்தியில் பங்கெடுக்கும்

## 306-பி மாவட்ட ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணக்குடா நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம் படுத்துவதற்கு தென் பகுதியிலுள்ள பல லயன்ஸ் கழகங்கள் முன்வருவதற்குத் தயாராகி வருகின்றன.

இவ்வாறு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306-பி மாவட்ட ஆளுநர் லயன் எஸ். சிவானந்தன் கடந்த சனியன்று சாவகச்சேரி லயனஸ் கழகத்துக்கு மேற் கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது கழக உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரி வித்தார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் எஸ்.கே. நவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் தென் பகுதியைச் சேர்ந்த பல லயன்ஸ் கழகங்களின் உயர் நிர்வாகிகளும் பங்கு கொண்டிருந்தனர்.

மாவட்ட ஆளுநர் லயன் எஸ். சிவானந்தன் மேலும் தெரிவிக்கையில், இன்றைய சூழ்நிலையில் எமது நாட்டில் இன ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பேணி நடக்க வேண்டிய அவசியமுள்ளது. தேசிய ஒற்றுமை மூலம் நாட்டில் மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்கு அனைத்து லயன்ஸ் கழகங்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முன்வரவேண்டும். ஒற்றுமை என்பது மிகவும் ஆழமான கருத்துக்களைக் கொண்டதாகும். இனங்களுக்கிடையே, ஒற்றுமை கழகங்களுக்கடையே ஒற்றுமை, உறுப்பினர்களுக்கடையே ஒற்றுமை, சேவைகளில் ஒற்றுமை இவையாவும் இணையும் போது நாட்டில் மேம்பாடும் செழிப்பும் ஏற்படும்.

கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக பாதிப்படைந்த சாவகச்சேரி நகரை மீள வும் கட்டியெழுப்பும் வகையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கியுள் ளது. யுத்தத்தினால் இடம் பெயர்ந்த நிலையில் இருந்த கால கட்டத்தில் கூட லயன்ஸ்கழகம் அர்த்தமிக்க பல சேவைத்திட்டங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற் றியுள்ளது.

வடபகுதியில் நிரந்தரமான சமாதானமும் அமைதி யும் நிலவும் போது மேலும் பல ஆக்கபூர்வமான சேவை களை வழங்குவதற்கு 306-பி மாவட்டம் ஏற்பாடுகளைச் செய்யும் என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வின் போது, இருதயததில் துவாரம் உள்ள பெண்பிள்ளையின் சந்திர சிகிசசைக்கென கழகம் 42 ஆயிரம் ரூபா நிதியையும் அண் மையில் இளம்தாயாரை இழந்த நான்கு பிள்ளைகளுக்கு கல்விக்கான ஆதார நிதியையும் வழங்கியது. (ற-16)

## சமாதான பின்னடைவுகள் குறித்த தமிழ் மக்களின் கருத்தென்ன?

### அறிவதில் சர்வதேச சமூகம் மும்முரம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டுவருகின்ற பின்னடைவுகள் தொடர்பாக தமிழ் மக்களது கருத்துக்களை அறிந்து கொள்வதில் சர் வதேச சமூகம் அண்மைக் காலமாகக் கூடுதல் அக்கறை காட்டிவருகின்றது.

குறிப்பாக யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யும் சர்வதேச இராஜதந்திரிகள் பலரும் புத்தி ஜீவிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்களுடன் பேச்சுக்களை நடாத்தி கருத்தறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, அண்மையில் யாழ்.குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த நோர்வே தூதுவராலயத்தின் இரண்டாவது சிரேஷ்ட செயலாளர் கிஜேர்ஸசி ட்ரொம்ஸ் ரால் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிவதில் ஈடுபட்டிருந்தார்.

யாழ. பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்திருந்த அவர், பின்னா யாழ். மாவட்ட அரச சாரபற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

அங்கு கருத்துத் தொிவித்த சிஜோஸசி ட்ரொம்ஸ்ரால இலங்கையில் தற்போது காணப்படும் போா நிறுத்த நிலைப்பாடு மற்றும் புனாநிர்மாண நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டே முன்னுாிமை அடிப்படையில் இலங்கைக்கான நிதி உதவி தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இந் நிலை மாறுமாக இருந்தால் சூடான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போன்று இலங்கையை விடப் பிரச்சினைகள் பலவற்றை எதிா நோக்குகின்ற நாடுகளுக்கு அந்நிதியுதவி வழங்கப்படும். இதனாலேயே தற்போது சமாதான முயற்சிகளுக்குப் பாதகமான சூழல் நிலவுகின்ற போதும், நாம் பொறுமையுடன் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றோம் எனத்தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ருக,121)

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமனங்களை ஜனாதிபதியே தாமதப்படுத்தி வருகின்றார்

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமனங்களை ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க தாமதப்படுத்தி வருவதாக பாராளுமன்ற சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துளளார்.

அரசியல் அமைப்புச் சபையானது சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமனத்தைத் தாமதப்படுத்திவருவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முன்வைத்த குற்றச்சாட்டு சம்பந்தமாக விளக்கமளிக்கும் போதே சபாநாயகர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அனுமதியின்றி சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கான நியமனங்கள் ஆங்கீகரிக்கப் படாதென்பதை தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொணடு வந்துள்ள சபாநாயகர் ஜனாதிபதியின் தாமதமே இதற்குக் காரணம் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனால் அடுத்துவரும் பாராளுமன்ற அமர்வில் இந்த விடயம் சம்பந்தமாக பேசி உரிய நடவடிக்கைகளை தான் மேறகொள்ளவிருப்பதாகவும் சபாநாயகர் மேலும் கூறியுள்ளார். (ற-க)

## 'அம்மா எனக்கு 21' விழிப்புணர்வு நிகழ்ச்சி

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாத இறுதியில் 'அம்மா எனகது 21' என்ற விழிப்பு ணர்வு நிகழ்ச்சியைக் கொழும்பில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

1983 ஜூலைக் கலவரங்கள் நடைபெற்று முடிவுற்ற நிலையில் இன்னும் இந்த நாட்டில் சமாதானம் என்பது இழுபறி நிலையிலேயே உள்ளது. இந்த நாட்டில் நிரந்தர சமாதானததை உருவாக்கி, நாட்டையும் மக்களையும் அமைதிப்படுத்த எவராலும் முடியாத நிலையில், பொது மக்களே இதனை உணர்ந்து-பொது மக்கள் மத்தியிலிருந்தே சகல தரப்பு மக்களிடையேயும் சகஜ நிலையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் உலக சமாதான அமைப்பு இதற்கான ஏற்பாட்டைச் செய்து வருகின்றது.

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிக் கண்காட்சி இரு தினங்களுக்கும், பொதுக் கூட்டத்துடனான கலைநிகழ்ச்சிகள் இறுதிநாளும் என இந்நிகழ்வு 3 நாட்கள் நடைபெறவுள்ளது. இந் நிகழச்சியில் சமாதானத்தைப் பற்றிய ஆர்வமுள்ள மாணவர்கள் ,பொது மக்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்று முத்தரப்பினராக சுரொட்டிகளை பிறிஸ்டல்போட் அளவில் வரைந்து எதிர்வரும் செபரெம்பர்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் W.P.O. இல: 46 டாகடர்.ஈ.ஏ.குரேமாவத்தை,வெள்ளவத்தை கொழும்பு-6 என்ற விலாசத்திற்கு தபாலிலே அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

சிறந்த மூன்று சுவரொட்டிகளுக்கு முதன்மைப் பரிசுகளும் தெரிவு செய்யப்பட்ட 10 சுவரெட்டிகளுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**கோயில்கள் தீபாராதனைகள் போன்ற சடங்குகள் எல்லாமே மனத்தை ஒரு குறிப் பிட்ட நிலைக்குக் கொண்டு வருகின்றன. ஆனால் அந்த நிலை எப்போதும் ஆன்மாவிலேயே உள்ளது. வேறு எங்கும் இலலை. எல்லோரும் இதைச் செய்து கொண்டிருககிறார்கள். ஆனால் தெரியாமல் செய்கிறார்கள். நீங்கள் தெரிந்து செய்யுங்கள் இது தான தியானத்தின் சக்தி.**

**சுவாமி விவேகானந்தர்**

# நோர்வே அனுசரணையுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது காலத்தின் தேவை!

## யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள சிக்கலானநிலை பரஸ்பரம் திருப்திகரமான நிலையில் தீர்க்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை மீளவும் இருதரப்பினரும் விட்டுக்கொடுத்து ஆரம்பிக்கவேண்டுமென யாழ். மாவட்ட மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை நோர்வேயின் ஏற்பாட்டுடன் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்படுத்தப்படல்வேண்டியது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும்.**

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட ஜூலை மாதத்திற்கான நிலைபர அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையத்தின் தலைவர் வீ.ஸ்ரீசக்திவேலின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அவ்வறிக்கையில்,

சமாதானத்தை ஆதரிப்பது என்ற சாட்டில் அரசாங்கம் இன்னுமொரு யுத்தத்திற்குத் தயாராகிக்கொண்டிருப்பது குறித்து மக்கள் மத்தியில் பரவலான பய உணர்வுகள் கிளம்பியுள்ளன.

இதனால் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிக்கவேண்டுமென புதிய ஜனநாயகக்கட்சி கேட்டுள்ளது.

### பொலிஸாருக்கு தமிழ்மொழிப் பயிற்சி

யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனம் மானிப்பாய், ஊர்காவற்துறை, வட்டுக்கோட்டை, இளவாலை மற்றும் சுன்னாகம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் 240 சிங்கள மொழிப் பொலிஸாருக்கு தமிழ்மொழிப் பயிற்சியினை வழங்கியுள்ளது. இதன்மூலம் சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமிழர்களுடன் தமிழ்மொழியில் உரையாடவும், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை இலகுவாகப் பதிவதற்கு வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ரத்தனஜீவன்கூலின் வரவை ஆட்சேபித்து சுலோக அட்டைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழ்த் தேசியத்தின் உணர்வுகளுக்கு எதிரான முறையில் இவர் தொடர்ந்தும் செயற்பட்டுவருவதினாலேயே இத்தகைய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### வீதி விபத்துக்கள்

மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் யாழ். மாவட்டத்தில் இப்போது ஒரு பொதுவான நிகழ்வாகிவிட்டது. மேலதிக வேகத்துடன் வீதிகளில் பயணிக்கின்ற மோட்டார் வாகனங்களின் சாரதிகள்மீது கடும் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

வீதி விபத்துச் சம்பவங்களில் முச்சக்கர வாகனங்களும் ஒரு காரணியாகவுள்ளது. பெரும்பாலான வாகன சாரதிகள் வீதி ஒழுங்குமுறைகளைக் கவனிப்பதில்லை. இந்தநிலையில், வாகனங்கள் யாவும் சோதனையிடப்படல் வேண்டும். சமாந்தரமாகச் செல்லுகின்ற சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு அதே இடத்தில் வைத்து தண்டப்பணம் விதிக்கப்படல் வேண்டும்.

### சிப்பாய் சரண்

ஆரியகுளம் இராணுவ முகாமைச் சேர்ந்த 22 வயது நிரம்பிய சிங்க றெஜிமென்றின் லான்ஸ் கோப்ரல் உப்புள் குமார, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார். தான் 1996 இல் இராணுவத்தில் இணைந்ததாகக் கூறியுள்ளார். இதன்மூலம் அரசாங்கமும் வயதில் குறைந்தவர்களை இராணுவ சேவையில் இணைத்துக்கொள்கின்றது என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

### சுகாதாரம்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நாய்க்கடி சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமை காரணமாக கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு மாநகரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

### நிதியுதவிகள்

அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் எக்ஸ்-றே கதிரியியக்க அலகையும், கோபல்ற் அலகையும் அமைப்பதற்கு 120 மில்லியன் ரூபா நிதியை உலக வங்கி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தச் சிகிச்சை நிலையம 2004 நவம்பரில் மீளவும் அதன் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

2000 ஆம் ஆண்டில் சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட வைத்திசாலையின் புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

### பாதுகாப்பு நிலைபரம்

களவுகள், கொள்ளைகள் மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் குறித்துப் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த இரவு நேரத்தில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது அத்தியாவசியமானதாகும். அத்துடன், சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்குகொண்டிருந்த இணைப்பு அதிகாரி எஸ்.சிறிவர்த்தனா - இராணுவத்தால் பயன்படுத்தப்படும் வீடுகள் கட்டடங்களுக்கு வாடகை வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

விஞ்ஞான கள ஆய்வுப் பணிகளுக்கென மண்டைதீவு சென்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவிகளை அங்கு செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றும் இவ்வறிக்கையில், போக்குவரத்து கல்வி, விவசாயம், மீன்பிடி, சட்டமும் ஒழுங்கும் மின்சாரம் போன்ற விடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ற-16)

---

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

# வெளிவாரி முதல் கலைத்தேர்வு பரீட்சைகள் இன்றும் நாளையும்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படுகின்ற வெளிவாரி முதல் கலைத் தேர்வுப் பரீட்சைக்கான திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் முதலாம் இரண்டாம் திகதிகளில் நடைபெறவிருந்த பாடங்களுக்கான பரீட்சைகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

பேராதனை பரீட்சை நிலையத்தில் மாத்திரமே இந்தப் பரீட்சை நடத்தப்படவிருப்பதால், இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், குறித்த பரீட்சை நிலையத்தில் அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-க,61)

---

## லொறி தடம்புரண்டதில்...

(வயது 07), குகன் வசீகரன் (வயது 11), வல்லிபுரம் சிவகாமி (வயது 54), பொன்னம்பலம் நாகம்மா (வயது 64), குஞ்சித்தம்பி சுதர்மன் (வயது 20), ஞானகுலசேகரம் சொர்ணா (வயது 05), குகனேஸ்வரன் இந்திராதேவி (வயது 33), செல்வராசா தங்கலட்சுமி (வயது 47), இராமநாதன் அன்னலட்சுமி (வயது 52) விபத்துக்குள்ளான லொறியில் 30 பேர் வரை பயணம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை செல்வச்சந்நதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழாவில் நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

என்றுமில்லாதவாறு இம்முறை யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் திரண்டிருந்தனர்.

இதேவேளை, சந்நிதிமுருகன் ஆலய தேர்த்திருவிழாவுக்கு கலந்துகொள்வதற்குச் சென்ற மக்கள் வெள்ளத்தினால் வல்லை வீதியூடான போக்குவரத்துக்கள் பல மணிநேரம் தாமதமாகின.

வல்லை பாலத்தில் ஒரே நேரத்தில் இரண்டு வாகனங்கள் கடக்க முடியாமையினாலேயே இந்நிலை ஏற்பட்டது. ஆலயத்திற்குச் செல்வதற்கென வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன. நண்பகலில் இருந்து மாலைவரை போக்குவரத்துக்கள் தாமதமாகின. பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள் என்பன பெருமளவு வல்லைப் பாலத்தின் ஊடாக சந்நிதி ஆலயத்திற்கு சென்றன.

போக்குவரத்து நெருக்கடி காரணமாக பறவைக் காவடி மற்றும் தூக்குக் காவடி எடுத்தோரில் சிலர் மயக்கமடைந்த நிலையில் நேர்த்திக் கடனை நிறைவுசெய்தனர்.

(ச-121-08-52)

---

### சர்வதேச...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்று ஏழு மாதங்கள் கடந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் இழுத்தடித்து வருவதனால் அரசின் சமாதான செயற்பாடுகளில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகள் நிதியுதவிகளை வழங்குவதில் தயக்கம் காட்டி வருகின்றன.

இந் நிலையில் இலங்கை அரசின் பொருளாதார கொள்கை பற்றிய விளக்கங்களை சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதிகளுக்கு நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம விளக்கம் அளித்து வருவதாகவும் சர்வதேச நாணய நிதிய உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி முடக்கப்பட்டுள்ள நிதியைப் பெறுவதற்கு நிதியமைச்சர் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-06-121)

---

# தமிழீழக் கட்டுமானத்தில் முக்கிய பங்குவகிப்பது தேசிய எழுச்சிப் பேரவை

## கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் அமைதியையும் சமாதானத்தையுமே விரும்புகிறார். ஆனால் நாட்டில் யுத்தம் ஒன்று வருமானால் அதை எதிர்கொள்ளவும் தயாராகவே உள்ளார் என கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் நிகழ்வில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எந்த நேரத்திலும் எதுவந்தாலும் நமது மக்கள் எதனையும் எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். தமிழீழக் கட்டுமானத்தில் முக்கிய பங்கு வகிப்பது தேசிய எழுச்சிப் பேரவையாகும். இதன் தலைவர் தேசியத் தலைவர் அவர்களே. அரசியல் பணி[illegible] சமுதாயப் பணிகளையும் அபிவி[illegible] பணிகளையும் இப் பேரவையினர் மு[illegible]டுக்க வேண்டும்.

யுத்தத்தை நாம் ஒருபோதும் விரும்பவில்லை யுத்தம் வந்தால் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளோமென அவர் மேலும் தெரிவித்தார். (121)

---

### மருத்துவபீட...

கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தின் பின் பிரஸ்தாப மாணவியின் பிரச்சினைக்குரிய தீர்வு வழங்கப்படும் என துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் உறுதியளித்தார்.

துணைவேந்தரால் வழங்கப்பட்ட உறுதிமொழியை விரைவாகச் செயற்படுத்துமாறு கோரி பல்கலைக்கழக் நிர்வாகப் பகுதி அலுவலகத்திற்கு முன்பாக அவர் போராட்டத்தில் ஈடுபட்டார். மாணவியின் பிரச்சினைக்குரிய தீர்வு நேற்று மாலைவரை வழங்கப்படாததையடுத்து அவர் மீண்டும் துணைவேந்தரின் அலுவலகத்திற்குள் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

முன்னதாக மாணவி புஸ்பமாலாவின் உறவினர்கள் நேற்று மதியம் துணைவேந்தரை அவரது அலுவலகத்திலிருந்து வெளியேறாத வகையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் சரியான தீர்வு தரப்படாவிட்டால் தமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மருத்துவபீட மாணவி புஸ்பமாலா- தான் பழிவாங்கப்படுவதாகவும், தனது பரீட்சை வினாத்தாள்களை மீள் பரிசீலினை செய்ய வேண்டுமெனவும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

---

### மோசமான...

டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இந் நிலைமையினால் நாட்டில் இன்று பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசாங்கத்தில் சில அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தாங்கள் பேசும் விடயங்கள் தொடர்பாக முரண்பாடான நிலைப்பாடுகளை கொண்டுள்ளனர.

ஒரு அமைச்சர் ஒருவிதமாகவும் மற்றொரு அமைச்சர் வேறு விதமாகவும் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தப்போவதாக நிதியமைச்சர் கூறுகின்றார். எனினும், தனியார் மயப்படுத்தப் போவதில்லை என மின்சக்தி அமைச்சர் கூறுகின்றார். இவர்களில் யாருடைய நிலைப்பாட்டை நாமும், மக்களும் ஏற்றுக்கொள்வது. இது அரசாங்கத்தின் உறுதியற்ற கொள்கையை எடுத்துக்காட்டுகிறது என்று ஜயலத் தெரிவித்தார். (த-08,121)

---

### பாடசாலைகள்...

டின் மூன்றாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மூடப்பட்டவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை மூன்றாம் தவணைக்காக ஏற்கனவே திறக்கப்பட்டுள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ம் திகதிமுதல் நவம்பர் மாதம் 17 ஆம் திகதிவரை விசேட ரம்ழான் நோன்பு விடுமுறைக்காக மூடப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க-61)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

விலை :-16.00

# சங்கு நாதம்

Sankunatham

30ஆகஸ்ட்-05 செப் 2004


பக்கங்கள் - 20

சங்கு :-04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :- 25




அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

# இலங்கை பக்கம் திரும்பியிருக்கும் அமெரிக்கப் பார்வை



**"சகல ஆட்சி அதிகாரங்களும் ஆளப்படும் மக்களின் விருப்பத்துக்கு அமைவாகவே இருக்கவேண்டும்"**

இவ்வாறு 1690ஆம் ஆண்டு எழுதிய 'அரசியல் பற்றிய இரண்டு மனப்பாங்குகள்' என்ற நூலில் வலியுறுத்தினார் ஜோன் லொக்.

இந்தக் கருத்து நவீன ஜனநாயகத்தின் நாதமாக இன்றுவரை ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

இந்தக் கூற்றுக்கும் இலங்கையில் நடைபெறுவது அரசியல் ஜனநாயகமான ஆட்சி என்ற கூற்றுக்குமிடையே எவ்வளவு பெரிய வேறுபாடு காணப்படுகின்றது.

மக்களின் விருப்பத்துக்கு அமைவாக இலங்கையில் ஆட்சி அரசியல் இடம்பெறுகின்றது என்றால் விடை ஆம் என்றா அமையும். நிச்சயமாக இல்லை.

மக்களின் விருப்பம் வேறு. இலங்கையில் ஆட்சி நடத்துபவர்களின் விருப்பம் வேறு. மக்கள் சமாதானத்தை வலியுறுத்தி அரசுக்கு ஆட்சி அதிகாரம் வழங்கியுள்ளார்கள். ஆனால் அரசாங்கமோ அதனை உதறித் தள்ளிவிட்டு, தமது சுயலாப அரசியல் நோக்கில் ஆட்சி இயந்திரத்தை நகர்த்த முற்பட்டு நிற்கிறது.

இந்நிலையில் எங்ஙனம் மக்களின் விருப்பத்துக்கு அமைவாக ஆட்சி அதிகாரம் இருக்கமுடியும். ஜோன் லொக்கின் ஜனநாயகத் தத்துவம் இலங்கையில் இன்று தோற்றுப்போய்விட்டது.

இலங்கையில் புதைந்துபோன ஜனநாயகம் என்ற போர்வையுடன் தொடரும் ஆட்சியில், சர்வதேச சமூகம் போர்வையைக் கிழிக்க முற்படாமல், வேதம் ஓதுவதுதான் வேதனையான விடயம்.

அதனைவிட மிகவும் வேதனைதரும் விடயம், ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டு, இலங்கை அரசால் நசுக்கப்பட்டு வாழும் தமிழ்மக்களை, சர்வதேச சமூகம் மாய வலைக்குள் நின்றுகொண்டு சீண்டிப் பார்ப்பதுதான்.

இலங்கையில் நிகழ்ந்ததென்ன, நிகழ்ந்துகொண்டிருப்பதென்ன என்பதை தெளிவாகப் புரிந்துள்ள சர்வதேச சமூகம், இற்றைவரை அதன் தீர்வு நாடி உரிய நடவடிக்கையை எடுக்காமல், பரிகாசம் பேசுவதுதான் தமிழ் மக்களை அதிருப்திப்படுத்தியுள்ளது.

## அமெரிக்காவின் வலியுறுத்தல்

இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்திக் கூறியுள்ளது. சமாதான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென்றும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.



இங்கு அமெரிக்காவின் வேண்டுகோள் வலியுறுத்தல், உண்மையில் இலங்கையில் அமைதி ஏற்படவேண்டும் என்பதற்காக விடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பதிலாக தென்னாசியக் கேந்திர ஸ்தானத்தில் அமெரிக்காவின் பார்வை படர்ந்திருக்கின்றது என்பதற்கான சமிக்கையாகவே இது கொள்ளப்படுகின்றது.

ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், சமாதான முன்னெடுப்புக்களுக்கும் தயார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துவிட்டு அதற்கான அரசதரப்பின் பதிலையும், முடிபையும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கமோ, அங்குமாறி இங்கென சாட்டுப்போக்குக் கூறிக்கொண்டு சமாதான முயற்சிகளை வீணே காலங்கடத்தி இழுத்தடித்து வருகிறது.

இந்நிலையில், உண்மையில் இலங்கையில் சமாதானம் மலரவேண்டும் என்பது அமெரிக்காவின் அக்கறையாக இருந்தால், இலங்கை அரசுக்கான தனது உதவிகளையும் சர்வதேச உதவிகளையும் நிறுத்தி, சமாதானத்தை தொடருமாறு வலியுறுத்தி இருக்கவேண்டும்.

இதுவே தீர்வுக்கான உரிய நடவடிக்கையாக அமைந்திருக்கும். இதனை விட்டுவிட்டு, இலங்கைக்கு இரகசியமாக ஆயுதங்களையும், நிதி உதவிகளையும், இராணுவ ஆலோசனைகளையும் அமெரிக்கா வழங்கிக்கொண்டு ஒப்புக்காக சமாதானம் என்று கூறுவது பரிகாசத்துக்குரிய விடயமே ஆகும்.

இந்நிலையில், நடைமுறைகளுக்கு அப்பால் அமெரிக்கா மேற்கொள்ளவேண்டிய உரிய நடவடிக்கையைச் செய்யாமல், இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டு, சமாதானம் பற்றிப் பேசுவது அநாகரிகமானதாகும்.

ஜோர்ச் வோசிங்டன் தலைமையில் பிரித்தானியாவுக்கு எதிராக சுதந்திரப் போராட்டம் நடாத்திய அமெரிக்கா, தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத முத்திரை குத்தித் தடைசெய்திருப்பது, இலங்கை விடயத்தில் அதன் உள்நோக்க ஆதிக்க வெளிப்பாட்டையே எடுத்துக்காட்டுகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் அராஜகப் பயங்கரவாதத்துக்கு, தமிழ்மக்களை அழித்தொழிக்கும் படலத்துக்கு பச்சைக்கொடி காட்டி ஆதரவு வழங்கும் அமெரிக்கா, தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் புலிகளை பயங்கரவாதப் பட்டியலால் பழிவாங்கியமை, தமிழ்மக்களை அழித்தொழிக்கும் சிங்களப் பேரினவாதத்தின் கைங்கரியத்துக்கு வலுச்சேர்க்கும் நடவடிக்கையாகவே உள்ளது.

தென்னாசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த இலங்கையை சிறந்த தளமாகப் பயன்படுத்தவே அமெரிக்கா இலங்கை அரசை ஆதரிக்கின்றது என்பதும், இலங்கையின் அரசியல் சக்திகளுக்கு ஒத்தூதும் வகையில் அவர்களின் எதிரியைப் பொது எதிரியாகப் பார்ப்பதுவுமே அமெரிக்காவின் நிலைப்பாடாகவுள்ளது.



இந்நிலையில் தமது வல்லாதிக்கத்தை தென்னாசியாவில் ஏற்படுத்தும் முழு இலக்கிலேயே தற்பொழுது இலங்கை மீது அமெரிக்காவின் கழுகுப்பார்வை திரும்பியுள்ளது.

## பார்வை மாறவேண்டும்

அமெரிக்காவின் இரு நகரங்கள் மீது 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலையடுத்து பயங்கரவாதம் பற்றி அமெரிக்கா அச்சங்கொள்ளத் தொடங்கியது.

உலக நாடுகளை தனது ஏகாதிபத்தியத்துக்குள் அடங்கச்செய்ய வேண்டும் என்பதற்காக உலகெங்கும் அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட ஆயுதக் குழுக்களே பின்னர் பயங்கரவாதமாக உருவெடுத்தது. அந்தவகையில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருந்தவர்தான் அல்கெய்டா தலைவர் ஒசாமா பின்லேடன். இவராலேயே அமெரிக்கா நன்கு படித்துக்கொண்டது என்பதும் உண்மை.

இந்தவகையில், உலகில் பயங்கரவாதம் எனும் விஷச்செடி பரவ அமெரிக்காவே காரணம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகவுள்ளது.

இந்நிலையில், அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய் என்பதுபோல விடுதலைப் போராட்ட அமைப்புக்களையும் அமெரிக்கா பயங்கரவாத அமைப்பாகக் கருதத் தொடங்கியது. இந்த எண்ணம் மாறவேண்டும்.

பயங்கரவாதம் பற்றிய அமெரிக்காவின் பார்வையில் நிச்சயமாக மாற்றம் ஏற்படவேண்டும்.

தமிழ்மக்களின் உரிமைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டுள்ள அமெரிக்காவின் கொள்கையில் மாற்றம் ஏற்படவேண்டும்.

அத்துடன் இலங்கையின் இனவிவகாரத்தில் பாரபட்சம் இன்றி தமிழ்மக்கள் நிம்மதியான உரிமைத் தீர்வைப் பெற்றுக்கொள்ள அமெரிக்கா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இலங்கை பக்கம் திரும்பியிருக்கும் அமெரிக்காவின் பார்வை சுயநலம் கொண்டதாக அமைந்திருப்பினும் ஒரு இனத்தின் அழிவுக்கு, துயரநிலைக்கு அது வழிசமைப்பதாக அமையக் கூடாது.

கோவையூர் ஹெயன்

தமிழ்மக்கள் இழந்த உரிமைகளைப் பெற்று அமைதி வாழ்வில் ஈடுபட அமெரிக்கா ஆக்கபூர்வமாகப் பாடுபடவேண்டும்.

சுயநலம் மறந்து பொதுநல உணர்வோடு உலகில் நீதியும் சமாதானமும் நின்று நிலைக்க வேண்டுமென்ற நோக்கில் இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் நகர்வு அமையவேண்டும் என்பதே சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

### ஜோக்

"தலைவர் ஏன்... தோட்டத்தில பதுங்கும் குழி வெட்டுறார்... யுத்தம் வரப்போகுதா?"

"நீங்க ஒண்ணு... ரெய்டு வரப் போகுதாம்... அவர் பதுங்குறத்துக்குத் தான் குழிவெட்டுறார்!"




# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்

# படைகள் நுழைந்தால்

# யுத்தநிறுத்தம் இல்லாமல் போகும்

# சு. ப. தமிழ்ச்செல்வன் அறிவிப்பு



ஸ்ரீலங்கா ஜனாதிபதி சநதிரிகா தனது படைகளை விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் அனுப்பு வதானால் அந்தக் கணத்தி லிருந்து யுத்தநிறுத்த நடை முறை இல்லாமற் போகும் என தமிழீழ அரசியல்துறைப பொறு ப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். யுத்த நிறு தத கணகாணிபபுக்குழுத தலை வர் ட்றொன்ட் புறுாவ் ஹொவ் டேயுடனான சந்திப்பின் பின் ணர் அவர் இதனைத் தெரிவத்தார்.

கடந்த புதன்கிழமை முறபகல 10 மணியளவல் கிளி நொச்சியல உளள விடுதலைப புலிகளின் சமாதான செயல கத்தில இடம்பெறற சந்திப[்பில்] விடுதலைப்புலிகள் தரப்ப[ில்] தமிழீழ அரசியல்துறை பொறு ப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்,, கடறபுலிகளின் தளபதி கேணல சூசை, கடற்புலிகளின துணைத் தளபதி செழியன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித் தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திபபு தொடர்பாக தமிழீழ அரசியலதுறைப் பொறு பபாளர் சு.ப.தமிழ்ச செலவன் அவர்கள் ஊட.கவியலாளர்க ளுக்கு வழஙகிய செவவியின விபரம் வருமாறு:

கண்காணிப்புக் குழுத் தலைவரை நாம் சந்தித்திருக் கின்றோம். தற்போது இந்த யுத்தநிறுதத நடைமுறைகளை பேணுவது சமபந்தமாகவும், தற் போது ஏற்படடிருககின்ற நெரு க்கடி நிலமைகள் சமபநத[மாக]வும விரிவாக ஆராய்ந்திருக்[கி]னறோம். எமது தரப்பு தலை மைப்பீடததின நிலைப்பாட்டை அவருக்குத் தெளிவாக விள க்கியுள்ளோம்.

**கேள்வி:** ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந் திரிகா, தமது படைகளை விடுத லைப்புலிகளின் கட்டுபபாடடுப பகு திக்குள் அனுப்புவது தொடர்பாக தெரி விதத கருத்து தொடர்பாக தங்கள் கருத்து?

பதில்: எம்மைப் பொறுத்த வரையில் யுத்தநிறுதத உடன் பாடு நடைமுறையிலுள்ளது. இநத யுததநிறுத்த உடன்பாட் டை மீறித்தான் அப்படியான நடவடிககைகளை மேற்கொள் ளலாம். ஆகவே, அந்தக்கண த்திலிருந்து யுத்தநிறுத்த நடைமுறை இல்லாமல் போகும்.

ஜனாதபதியினுடைய கருத்துக்களை வைத்துக் கொண்டு, இது அதிகாரபூர்வ மான கருத்து இது அதிகார பூர்வமற்ற கருத்து எது என்று அறியாமல் நாங்கள் கருத்துக் கள் சொல்வது பொருத்த மில்லை. ஆனால் நாளுக்கு நாள் அவர்களுடைய குழப்ப மான கருத்துக்கள் வெளிப் பட்டுக் கொணடிருக்கின்றன.

எம்மைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் என்ற வகையி லும், அனுசரணையாளர்கள என்ற வகையிலும் அவர்கள் தருகினற உத்தரவாதங்களின அடிப்படையில் தறபோது யுத்த நிறுத்த உடன்பாட்டை அவர் கள் நடைமுறைப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**கேள்வி:** முல்லைத்தீவு சம்பவம் தொடர்பாக இச் சந்திப்பில் விளக்கம் கொடுத்தீர்களா?

பதில்: முல்லைத்தீவு சம்ப வத்தைப் பொறுத்தவரையில், இச்சந்திப்பில் எமது கடற் புலிகளின் தளபதியும் கல ந்து கொண்டிருந்தார். அவர் நிலைமைகளை தெளிவாக விளக்கியிருந்தார். எமது கடற் பிரதேசத்திற்குள் கடறபுலிக ளுடைய நடமாட்டஙகள் பயிற் சிகள் தொடர்ச்சியாக நடை பெறறுககொண்டிருக்கின்றன. அவற்றை வைததுககொண்டு யுத்தநிறுத்த மீறல் அல்லது கடற்புலிகள மது தவறான குற் [றச்சா]டுக்களைச் சுமத்துவது பொருத்தமிலலாதது. அதாவது இரண்டுதரப்பும் மோதல் நிலை கககு வநது யுததநிறுதத மறல் நடைபெறுகின்ற போதுதான், கண்காணிப்புக் குழு வந்து விசாரணை செய்து உண்மை களை அறியலாம். தவறான தேவையற்ற குற்றச்சாடடுகளை சுமத்தி கண்காணிப்புக் குழு வை இககட்டுக்குள சிககவைப பதை அவர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்பதை இச்சந்திபபில் கடறபுலிகளின் தளபதி தெளிவாக விளக்கி யுள்ளார்.

**கேள்வி:** முல்லைத்தீவு சம்பவத்தில் விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கொ ணடு சென்றதாக குற்றஞ் சாட்டபபட் டிருக்கிறதே. அது தொடர்பாக என்ன தெரிவித்திருந்தீர்கள்?

பதில்: ஸ்ரீலங்கா கடற்படை [யும்] படைத்தரப்பும் ஆயுதங்க ளைக் குவிததுக்கொண்டிருக் கிறார்கள். புலிகள் ஆயுதங் களை கொணடுவருவதோ அல் லது ஆயுதங்களைப் பெற்றுப் பலபபடுத துவது எனபதோ யுததநிறுத்தமீறல் அல்லவே.

எம்மைப் பொறுத்தவரை யில் அவர்களுடைய குற்றச் சாட்டு அர்ததமிலலாததாக இரு ந்தாலும், அது குற்றச்சாட்டு மல்ல, யுத்தநிறுத்த மீறலும் அலல. விடுதலைபபுலிகள ஆயு தங்களைப் பெற்றுக்கொள்வ தோ, ஆயுத ாதியாக தங்களை பலப்படுத்திக்கொள்வதோ யுத்தநிறுத்த உடன்பாடடில் தடு ககப்படட ஒனறாக இல்லை. அது தான யதார்த்தம.அதேவேளை அவர்கள் தெரிவித்த குற்றச் சாட்டுக்கும் சம்பவத்துக்கும் சம்பந்தமில்லை.

**கேள்வி:** கிழக்கு சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு நீங்கள் எழுதிய கடிதம் தொடர்பாக எவ்வித மான பதில் அரச தரப்பிடமிருந்து தரப்பட்டது?

பதில்: அரசாங்கத்திடமிருந்து எநத உததரவாதங்களும் பதி ல்களும் கிடைக்கவில்லை. மணடும் கடிதமூலம் அனுபபப் பட்டாலும், தலைமைப்பீடத்தி னுடைய கரிசனையை நேரடி யாகவும் வலியுறுததியுளளோம்.

இந்த யுத்தநிறுத்த உடன்படி க்கையில் உள்ள கருத்துக்க ளின் அடிப்படையில்; வடக்கு - கிழககில் ஆயுதக் குழுககள் செயற்படுவது செயலிழக்கப் படவேண்டும். வடக்கு-கிழக்கி லிருந்து அவர்கள வெளியேறறப் படவேண்டும என்பது இநத யுத்த நிறுத்த உடன்பாட்டில் இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட நடை முறையாகும். தற்போது மட் டக்களப்பு மாவட்டத்திலே கருணா குழுவும் ஈ.பி.டி.பி குழு வும படைத்தரப்போடு மீணடும இணைந்து இயஙக அனுமதித் திருபபது, யுததநிறுத்த சூழலை நாங்கள் தொடர்ந்து பேணிக் கொண்டு செல்வதற்கு பாரிய அசசுறுததல் ஏறபடும எனபதை நாங்கள் தொடர்ச்சியாக வலி யுறுத்தி வந்திருக்கின்றோம். இச்சந்திப்பிலும் எமது தலை மைப் பீடத்தின் கரிசனையை நேரடியாகவும் வலியுறுத்தியு ள்ளோம்.

**கேள்வி:** கிழக்கில் இடமபெறும கொலை கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மீது அரசதரப்பல குறறம் சாட்டப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கண்காணி ப்புக் குழுவிடம் தெரிவித்தீர்களா?

பதில்: அண்மைககால நிகழவு கள் உங்களுக்குத் தெரியும். கருணா குழுவுக்கும் ஈ.பி.டி.பி. குழுவிற்கும் ஏறபட்ட ஒரு நெரு க்கம் அவர்களால் இந்த யுத்த நிறுத்த செயற்பாடுகளை சீர் குலைப்பதற்காக அவர்கள் தொட ர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக கின்ற செயற்பாடுகள் சம்பந்த மாக ஏற்கனவே எல்லோரும அறி ந்த ஒன்று. கருணா குழுவோடு தப்பச்சென்ற ஒரு சிலரும் ஈ.பி. டி.பியினரும் இணைந்து கொ ழும்பில் அவர்கள் செயற்பட் [டுக்] கொண்டிருப்பதும், அங்கு [அவ]ர்களுக்குள் உள் முரண் பாடு ஏற்பட்டு, கருதது மோதல் கள் ஏற்பட்டு தங்களுக்குள் ளேயே சண்டையிட்டு தாக்குப் பட்டு கொலைகள், படுகாயம டைந்து அங்கிருந்து தப்பி வந்து எம்மிடம் சரணடைந்த பலரும் இருககின்றார்கள். அவ ர்களுடைய தகவலினபடி, அவ ர்களுக்குள்ளேயே தற்போது பிளவுகளும் பிரச்சினைகளும் உக்கிரமடைந்திருக்கின்றது. அதனுடைய விளைவாகத்தான் அவர்களுககுள்ளே நடைபெறு கின்ற கொலைகளை நாஙகள் சந்தேகிக்கினறோம். இதில் புலி களை குற்றம் சுமததுவது எநத விதத்திலும் அர்த்தமில்லாத ஒன்று என்றே நாம் பார்க்கின் றோம்.

**கேள்வி:** அரசாங்கத்தால் மாற்று யோசனைத்திட்டம் ஒன்று முன்வைக் கப்பட்டு விடுதலைப்புலிகளால் நிரா கரிக்கப்பட்டதாக செய்திகள் தெரி விக்கின்றனவே?

பதில்: இதுவரை எந்த மாற்று யோசனைகளும முன்வைக்கப் படவிலலை. மாற்றுயோசனை களை முனவைத்தாலும் விடு தலைப்புலிகள் அதனை ஏற் றுக்கொள்ளவும் மாட்டார்கள். ஏனெனில், கடந்தகாலங்களில் ஸ்ரீலங்கா அரசுகள் பல திட்ட ஙகளை முன்வைதது, அது எந்த வகையிலும் எமது மக்களு டைய அபிலாசைகளையும் பூர் த்தி செய்வதாக இருக்காததா லும, கள யாதார்த்தத்தையும் இன்று எமது மககளுடைய அபி லாசைகளையும் எநதவிததிலும் [பூர்த்தி]செய்யாத காரணத்தி னால நாங்கள் பலதடவை நிரா கரித்திருக்கின்றோம். அந்தக் கட்டத்தில்தான் விடுதலைப் புலிகள் தஙகளுடைய நிலைப பாட்டைத தெளிவுபடுத்தவேண டும் என்று சர்வதேசத்தினுடை யதும் எல்லோருடைய அபிப் பிராயமுமாக இருந்தது. அந்த வகையில்தான் நாங்கள் எமது மக்களுடைய முழு ஆதரவோ டும், முழுப் பங்களிப்போடும் எமது தலைமைப்பீடம் ஒரு திட்டவரைபைத் தயாரிதது ஒரு இடைக்கால தன்னாட்சி அதி காரசபை எனற திட்டவரைபை தயாரித்து நோர்வே அனுசர ணையாளர்கள் ஊடாக இல ங்கை அரசாங்கத்திடம் கைய ளித்தது.

இது கடந்த தேர்தலிலும் எமது மக்கள்முன் வைத்து மக்களின் அங்கீகாரமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருக்கின்றது. அந்த அடிப் படையில் எமது மக்களின் அபி லாசைகள், உண்மையான நிலைப்பாடுகள் என்ற அடிப் படையிலிருந்துதான் நாங்கள் பேசப்போனோம். ஏனெனில், நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியிலும் உரிமை கோரி நிற்கின்ற மககள் என்ற வகை யிலும், இந்த மக்கள் தங்களு டைய நிலைப்பாட்டின் அடிப் படையில்தான் பேசப் போக லாம். அந்த மக்களுடைய பிரதி நிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் எங் களுடைய தலைமைப்பீடம் இந் தத் திட்டவரைபை வைத்திரு க்கின்றது. அந்த அடிப்படை யில்தான் தலைமைப்பீடம் திட்டவரைபை முன்வைத்திருக் கிறது. அந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கம் பேசவரு கின்ற போதுதான் பேச்சுக்களை முன்னெடுப்பது சாத்தியப்படும்.



**கேள்வி:** விடுதலைப்புலிகள் முன் வைத்துள்ள இடைக்கால தனனாட்சி நிர்வாக சபை தொடர்பான யோச னைகள் தனிநாடு உருவாக்குவதற் கான முதற்படி என ஜே.வி.பி பிரச் சாரம் செய்து சிங்கள மக்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இதனை எப்படி சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தப் போகிறீர்கள்?

பதில்: தமிழர் தரப்பு எபபோதும் தமது நியாயங்களை, தங்களு டைய நிலைப்பாடுகளை முன் வைக்கின்ற போது, சிங்கள தேசத்தில் எழுப்பப்படுகின்ற இனவாத கூச்சல்களைத்தான் இன்று நேற்றல்ல காலம் கால மாக வெளிப்படுத்தி வந்திருக் கின்றார்கள். எங்களைப் பொறு த்தவரையில் ஒரு யாதார்த்த பூர்வமான எமது மக்களுடைய அபிலாசைகளை உள்ளடக்கிய மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு திட்டவரைபை முன்வைத் துள்ளோம். இதற்கு மதிப்பளி த்து எமது மக்களுடைய அபி லாசைகளைப் புரிந்துகொண்டு பேச்சுக்கு முன்வருகின்ற போது தான் இங்கே ஒரு சமாதானம் உறுதியடையும். ஒரு நிரந்தர தீர்வை நோக்கி நாம் முன் னோக்கிச் செல்லலாம். அது தான் யாதார்த்தமானதும் கூட.

**கேளவி:** கிழக்கில் நடைபெறும் படு கொலைகள் யுத்தநிறுத்த உடன் பாட்டை நெருக்கடிக்குள் தள்ளுவ தாக கூறப்படுகிறதே?

பதில்: எப்போதும் யுத்த நிறு த்த மீறல்கள் நடக்கும்போது, அது யுத்தநிறுத்தத்துக்கு ஒரு நெருக்கடிதான். அந்தவகை யில் அங்கு இன்று ஏற்பட்டு கொண்டிருக்கின்ற படுகொலை முயற்சிகள் எல்லாமே யுத்த நிறுத்தத்தை பாரிய அச்சுறுத் தல் நிலைக்கு

(04ஆம் பக்கம் பார்க்க...)

# ஆலடி மாநாடு



"... நாடு நல்லாக் கெட்டுப் போச்சு. அந்தக்காலத்தில நாங்கள் எங்களுக்குப் படிப்பிச்ச ஆசிரியர்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்தனாங்கள். இப்பத்தப் பெடியள் அப்படியே நடக்குதுகள்...."

கங்காணி கார்த்திகேசன் தோளில் கிடந்த துண்டையெடுத்து உதறியவாறு பக்கத்தில் வந்த புறோக்கர் பொன்னையாவுக்கு கூறியபடி ஆலடிக்கு வந்தார்.

கங்காணியும் புறோக்கரும் கதைத்துக்கொண்டு வந்ததை அறியும் ஆவலில் விவசாய மன்னர் மாணிக்கத்தார் கேட்டார்,

"என்ன கங்காணி, அந்தக் காலம், இந்தக் காலமெண்டு சொல்லுறியள் என்ன சமாச்சாரம்..."

மாணிக்கத்தார் கேள்வி கேட்டு முடிக்கவும், கங்காணியும் புறோக்கரும் ஆலடியில அமரவும் சரியாக இருந்தது.

"மாணிக்கண்ணே, உங்களுக்குத் தெரியும்தானே. அந்தக்காலத்தில எங்களுக்குப் படிப்பிச்ச வாத்திமாருக்கு நாங்கள் எவ்வளவு மதிப்புக் குடுத்தனாங்களெண்டு. எங்களப் படிப்பிச்ச வாத்தியார் றோட்டால வாறார் எண்டால் மரத்துக்குப் பின்னால போய் ஒழிஞ்சு கொள்ளுறனாங்களல்லே. இப்ப என்னமாதிரி நடக்குது பாத்தியளே!"

கங்காணி சொல்லிமுடிப்பதற்குள் மீண்டும் அவசரப்பட்ட விவசாய மன்னர் மாணிக்கம்,

"அதுசரி கங்காணி, நீ சொல்லிக்கொண்டு வந்த கதையைச சொல்லன்"

## ஆசிரியரைத் தாக்கிய மாணவன்

"அண்ணே! இடம்பெயர்ந்து பலாலி றோட்டில இயங்குகிற ஒரு பிரபல்மான பாடசாலையில ஏ.எல் படிக்கிற ஒரு மாணவன் வாத்தியாருக்குக் கைவைச்சுப் போட்டானாம்"

"என்ன? வாத்தியாருக்குக் கைவைச்சுப் போட்டானாமோ? இதென்ன நாசமறுப்பு. ஒரு படிக்கிற மாணவன் ஆசிரியருக்குக் கைவைச்சுப் போட்டானெண்டால் அதைச் சும்மா விடலாமோ!" பண்டிதர் பரமநாதன் கோபாவேஷத்தோடு கேட்டார்.

பண்டிதரின் கோபாவேஷத்தைப் புரிந்துகொண்ட மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் பேசத் தொடங்கினார்.

"பண்டிதர் ஐயா, நாங்கள் வயது வந்த அனுபவசாலிகள். அவசரப்படாமல் பொறுமையைக் கடைப்பிடிக்கவேணும். இளம்பெடியள் தாறுமாறாக நடக்கிறாங்கள். தங்களுக்குப் படிப்பிச்ச வாத்திமாருக்கே கைவைக்கிறாங்களெண்டால் அதுக்கு நாங்களும் ஒருவகையில் காரணம்தான்"

"என்ன நாங்களும் காரணமோ.." பண்டிதர் பரமநாதன் வியப்போடு கேட்டார்.

"ஓம் பண்டிதர் ஐயா, அந்தக் காலத்து வாத்திமார் ரியூட்டறியளுககுப்போய் காசுக்குப் படிப்பிச்சவியளே. தங்கட கடமைகளை ஒழுங்காச் செய்தினம். மாணவர்களும் அவையள மதிச்சினம். ஆனா இண்டைக்கு அப்படியே நடக்குது. இந்தக்காலத்து வாத்திமார் பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறத்தைவிட ரியூட்டறிகளில நல்லாப் படிப்பிக்கினம். காசுக்காக வாததிமார் அலையிறத்தப் பெடியள் நல்லாப் புரிஞ்சுகொண்டிருக்கிறாங்கள். அதுமட்டுமே நடக்குது. ரியூட்டுகள் அடிச்சு அறாவிலைக்கு விக்கினம் எண்டு ஆறாம் ஆண்டுப் பிள்ளையளே கதைக்குமளவிற்கு நிலமை போயிற்று. இப்படிக் கல்வியை வர்த்தகப் பொருளாக்கினால் அதை நுகருகிற மாணவர்களும் பிஸ்னஸ் முறையைத்தானே கடைப்பிடிப்பாங்கள்" வாத்தியார் சொல்லிமுடிக்க அதுவரை மௌனமாக இருந்த விதானையார் விசுவலிங்கம் பேசத் தொடங்கினார்.

"வாத்தியார், உந்த ரியூட்டறிகளில வியாபாரம் மட்டுமே நடக்குது. அந்த வாத்தி படிப்பிக்கிறது பிழை. இந்த வாத்தி படிப்பிக்கிறது பிழை எண்டு மாணவர்களுக்கு முன்னால ஆசிரியர்களைப் பற்றிக் குறைகூறும் ஆசிரியர்கள் எத்தனையோ பேர் இருக்கினம். அதைக் கேட்கிற மாணவர்கள் ஆசிரியர்களைப் பற்றி என்ன நினைப்பினம். உதுகள்தானே மாணவர்கள் தாறுமாறாக நடக்கிறதுக்குக் காரணமாக இருக்கு"

"இஞ்சே விதானையார், நீங்கள் சொல்லுறது சரி. ஆனா வாத்தியாருக்கு ஒரு மாணவன் அடிக்கிறத்தை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது" கங்காணி சொல்ல,

"இஞ்சே! கங்காணி, நான் சொன்னதை நீர் பிழையா விளங்கிக் கொண்டிட்டீர். வாத்தியாரில மாணவன் அல்ல யாரு கைவைச்சாலும் அது பிழைதான்.

ஆனா, மாணவர்கள் இந்தளவு தூரம் பிறழ்வு அடைவதற்குக் காரணம் என்ன என்பதைத்தான் நான் சொல்லுறன்" வாத்தியார் சொல்ல மாநாட்டில் அமைதி நிலவியது.

அந்த அமைதிக்குள் பண்டிதர் பரமநாதன் தனது வேட்டித் தலைப்புக்குள் சுத்திவைத்த ஒரு கடிதத்தை எடுத்து,

"இந்தக் கடிதம் ஆலடி மாநாட்டிற்கு வந்தது. இப்படி பல கடிதங்கள் வருகுது. எண்டாலும் இந்தக் கடிதத்தை வாசிக்கிறன் ஒருக்காக் கேளுங்கோ!

## உரும்பிராய் வைத்தியசாலையில் ஒழுங்கீனமாம்

**ஐயா,**

**எங்கள் பிரதேசத்திலுள்ள அரச மருத்துவமனை சீர்கேடு பற்றி எவரும் கவனத்தில கொள்ளவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்கும் எங்களால எதையும் செய்ய முடியவில்லை.**

**உரும்பிராய் பிரதேசத்திலுள்ள மருத்துவமனையின் சீர்கேட்டினைவிட மருத்துவமனைக்கு வைத்தியர் வருவதேயில்லை. வைத்தியசாலைக்கு வர வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலைக்கு வரும்போது சுமார் 10.30 மணியளவில் வருவார். ஆனால் வந்து சிறிது நேரத்தில் தொலைபேசி அழைப்பு வரும். அதன் பிறகு சந்தைககுச் சென்று மரக்கறிவகை, தேவையான உணவு வகை அனைத்தையும் வாங்கிக்கொண்டு வீடு சென்று விடுவார். இதனை நாம் நான்கு முறை நேரில் பார்த்திருக்கிறோம்.**

**அன்றொருநாள் 20-7-2004 அன்று வேலைத்தளத்தில் வாள் வெட்டி வந்த அந்த அவசர நோயாளிக்கு சிகிச்சையளிக்க அங்கு யாருமேயில்லை. அங்குள்ள தாதிமார்களும் அப்படித்தான். பின் அவரை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றனர். அங்கேதான் நாங்களும் சென்றோம். உடனேயே அவருக்கு தையல் இட்டு மருந்து கட்ட 180ரூபா செலவாகியது. இது அவர் அன்று உழைக்கும் சம்பளப் பணம்.**

**இதெல்லாம் இப்படி நடக்கும்போது அரச மருத்துவமனை என்று இருப்பது எதற்கு எனக் கேட்கத் தோன்றுகிறது. ஆனால் எங்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. அத்தோடு மட்டுமன்றி தாதிமார்களும் நோயாளர்களை மதிப்பதேயில்லை. இவர்களுக்கெல்லாம் ஏன் அரசாங்கம சம்பளம் கொடுக்கிறதோ தெரியவில்லை.**

**நாங்கள் சொன்னது எல்லாம் உண்மை. இதை நாங்களே நேரில் பார்த்தோம். நாங்கள் இவ்வாறு செய்வது பிழையென்றால் எங்களை மன்னிக்கவும். ஆனால் இதனை எழுதிய அன்றும் நாங்கள் காலையில் வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தோம். 11மணிவரையும் அங்கு வைத்தியர் வரவில்லை. தயவுசெய்து இதை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி ஏழைகளுக்கும், வயோதிபர்களுக்கும் சீரான சிகிச்சை கிடைக்க உதவி செய்யவும்.**

**நன்றி**

கடிதத்தை பண்டிதர் வாசித்து முடித்தார். கடிதத்தை வாசித்ததும் மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் அவசரப்பட்டவாறு,

"பண்டிதர் ஐயா, உங்களுக்கேன் உந்த வேலை.

"இஞ்சே வாத்தியார், உரியவியள் உரிய விளக்கம் தந்தால் அதையும் ஆராயுறதுதானே!"

பண்டிதர் சொல்லவும் ஆலடி வைரவற்ற மணியடிக்கவும் மாநாடு கலையவும் சரியாக இருந்தது.

**ஆதித்தன்**



# புலிகளின் கட்டுப்பாட்டுப்....

*(03ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

கொண்டுசெல்லும் நிலையாகத்தான் நாம் கருதுகின்றோம். எமது மக்கள் கூட, இன்று இந்த சமாதான முன்னெடுபபுகளில் முழுமையாக நம்பிக்கை இழந்துகொண்டு போகும் கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இதனை நாம் அனுசரணையாளர்கள் ஊடாக சம்பந்தப்படடவர்களுக்குத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம்.

கேள்வி: சமாதானம் தொடர்பாக சிங்களப் பேரினவாதக் கட்சியினரும், மகாநாயக்க தேரர்களும் விடுதலைப் புலிகளை சந்தித்து கலந்துரையாட விருப்பம் தெரிவித்துள்ளனரே?

பதில்: எம்மைப் பொறுத்தவரையில் தெற்கிலிருந்து பல சமூகத் தலைவர்கள், சமாதான ஆர்வலர்கள், அங்கே உள்ள பத்திரிகையாளர்கள் சமாதானத்தை விரும்புகின்ற எவரும், விடுதலைப் புலிகளைச் சந்தித்து அவர்களுடைய கருத்துக்களை அறிந்து செல்வதற்குத் தடையேதும் இல்லை. அண்மையிலும் பல சிவில் சமூகத் தலைவர்களும், மதத் தலைவர்களும் வந்து சந்தித்து எமது நிலைப்பாடுகளைத் தெளிவாகப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். எவர் வந்தாலும் எமது நிலைப்பாடுகளை தெளிவாகவும் உறுதியாகவும் விரிவாக முன்வைக்க தயாராக இருக்கின்றோம்.

*நன்றி: தமிழ்நாதம்*



28வது ஒலிம்பிக் போட்டிகள் கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. போட்டியாளர்கள் ஊக்கத்துடனும், தாயக உணர்வோடும் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

பதக்கங்களை வெல்வதில் போட்டியாளர்கள் மத்தியில் ஆர்வம் காணப்பட்டாலும் நாட்டுக்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் மேலோங்கிக் காணப்படுகின்றது.

பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெறுவதற்கு சீனாவும், அமெரிக்காவும் போட்டா போட்டியிட்டு வருகின்றன. என்றுமில்லாதவாறு சீனாவின் வளர்ச்சியைக் கண்டு உலகநாடுகள் வாய் பிளந்து நிற்கின்றன.

இதனைவிட இவ் ஒலிம்பிக் போட்டியின் நிகழ்வுகளும், வீரர்களின் நடத்தைகளும் என்றுமே மறக்கமுடியாதவையாகக் காணப்படுகின்றது.

### முதல் நாளில் உலக சாதனையா?

28வது ஒலிம்பிக் போட்டிகளின் முதல்நாளான 14ஆம் திகதி ஐந்து உலகசாதனைகள் புதிதாகப் படைக்கப்பட்டுள்ளன. நீச்சல் போட்டிகளில் இரண்டும், பளுதூக்கும் போட்டிகளில் மூன்றுமாக மொத்தம் 5 உலகசாதனைகள் ஒரேநாளில் படைக்கப்பட்டன.



இராணுவ வீரர் மேஜர் ராஜவர்தன் ரத்ஹோர்

நீச்சல் போட்டிகளைப் பொறுத்தவரை அமெரிக்க நாட்டு வீரரான மைக்கல் பிஹெல்ப்ஸ் 400m நீச்சல் போட்டியில் சாதனை படைத்தது மட்டுமல்லாது அமெரிக்காவிற்கு 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் முதல் தங்கப்பதக்கத்தையும் ஈட்டிக் கொடுத்தார்.

*பெண்களுக்கான* ***4x100m*** ப்ரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் ஆஸ்திரேலிய அணி புதிய உலகசாதனையைப் படைத்ததோடு தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்துக்கொண்டது. இப்பிரிவில் உலகசாதனைகள் இரண்டு தடவைகளே படைக்கப்பட்டுள்ளன. சுமார் 48 வருடங்களுக்குப் பிறகு ஆஸ்திரேலிய அணி இப்பிரிவில் இரண்டாவது முறையாகத் தங்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1956 ஆம் ஆண்டு மெலபோனில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் அப்போதைய ஆஸ்திரேலிய அணி பதக்கம் வென்றிருந்தது. ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி ஒரு வினாடி கணக்கில் உலகசாதனை படைத்தது இன்னொரு முக்கிய அம்சமாகும்.

இதற்கு முன்பிருந்த உலகசாதனையாக மூன்று நிமிடங்கள் 36 வினாடிகளே இருந்தது. இது 2002ஆம் ஆண்டு ஜேர்மனியில் இடம்பெற்ற ஐரோப்பிய சம்பியன்சிப் போட்டிகளின்போது ஜேர்மன் அணியினரால் படைக்கப்பட்டதாகும். ஆஸ்திரேலிய அணியினர் இச்சாதனையை மூன்று நிமிடம் 35.94 வினாடிகள் என்ற கணக்கில் முறியடித்துள்ளனர்.

### முதல் பதக்கம் சீனாவுக்கு / பெண்ணுக்கு

2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியின் முதல் பதக்கத்தை சீனா வென்றுள்ளது என்று சொல்வதைவிட முதல் பதக்கம் ஒரு பெண்ணுக்குக் கிடைத்துள்ளதென்பது பெருமைக்குரியது. 10m துப்பாக்கி சுடும் போட்டியில் சீன நாட்டு வீராங்கனை டூலி தங்கம் வென்றார். டூலிக்கு இது முதல் ஒலிம்பிக் பதக்கமாகும். அதேநேரம் இப்பிரிவில் ஆண்களுக்கான போட்டியிலும் சீனாவே தங்கத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தந்தைக்குப் பின் தனையன்

108 வருடகால ஒலிம்பிக் வரலாற்றில் தந்தைக்குப் பின் மகன் பதக்கம் வென்ற சந்தர்ப்பம் இதுவரை ஒன்றுதான் இடம்பெற்றிருந்தது. 1976 ஆம் ஆண்டு கனடாவின் மொன்றியலில் இடம்பெற்ற 21வது ஒலிம்பிக்போட்டிகளில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த மில்க்லோஸ் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்றார். இவரது தந்தை இம்ரே 1948ஆம் ஆண்டு லண்டனில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் சுத்தியல் எறிதல் போட்டியில் தங்கம் வென்றவராவார்.

அதேபோல் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இரண்டாவது தடவையாக தந்தைக்குப் பின் மகன் பதக்கம் வென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆண்களுக்கான ஜிம்னாஸ்டிக் பிரிவில் ஜப்பானிய வீரர் நியோயா. சுக்காரா தங்கப்பதககத்தை வெனறதன் மூலம் தந்தைக்குப்பின் பதக்கம் வென்ற தனையன் என்ற பெருமையைப் பெறுகிறார். சுக்காராவின் தந்தையான மிட்சுவோ 1968,72 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் ஜப்பான் அணி சார்பில் ஜிம்னாஸ்டிக் பிரிவில் தங்கப்பதக்கங்களை வென்றிருந்தார்.

மேலும் கடந்த 11 வருடங்களாக இவரே தனது மகனுக்குப் பயிற்றுவிப்பாளராக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

### தங்கத்தை துறந்த ஈரானிய வீரர்

ஈரான் நாட்டின் முன்னணி ஜூடோ வீரரான ஆராஷ் மிரேஸ்மெய்லி, இஸ்ரேலிய வரருடன் மோத மறுத்து ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்

இவர் சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஐந்தாவது இடத்தைப் பெற்றபோதும் 2001,2003ஆம் ஆண்டுகளில் உலக சம்பியன் பட்டங்களை வென்றார். எனவே ஏதென்ஸில் இவர் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. போட்டி அட்டவணைப்படி இவர் முதல் போட்டியில் இஸ்ரேல் வீரருடன் மோதவிருந்தார். எனினும் எடைச்சோதனையில் மயிரிழையில் தகுதிபெறத் தவறினார். ஆனால் அவர் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இஸ்ரேல் வீரருடன் மோத மறுத்து, வேண்டுமென்றே எடையைக் கூட்டிக் காட்டினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆராஷ் மிரேஸ்மெய்லியின் நடவடிக்கையை ஈரான் ஜனாதிபதி, மற்றும் கிரீஸுக்கான ஈரானியத் தூதுவர் உட்பட ஈரானியர்கள் பலர் பாராட்டியுள்ளனர். 'ஏதென்ஸ்–2004 ஒலிம்பிக் போட்டியின் உண்மையான சம்பியன் மிரேஸ்மெய்லிதான்' என ஈரான் ஜனாதிபதி கூறியுள்ளார்.

# ஒலிம்பிக் 2004

### கனவு வெள்ளிப் பதக்கத்தோடு மட்டுமா?

ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவானது ஹொக்கிப் போட்டிகள் மூலம் மட்டும்தான் பதக்கங்களை வெல்ல முடியும் என்ற ரீதியில் இந்திய அணியின் நிலைப்பாட்டை மாற்றி அமைத்திருக்கிறார் இராணுவ வீரர் மேஜர் ராஜவர்தன் ரத்ஹோர்.

## நேயயல்

தனிநபர் பிரிவிற்காக இந்திய அணி ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெறும் சந்தர்ப்பம் இதுவாகும். கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற ஆண்களுக்கான துப்பாக்கி சுடுதல் போட்டியின் DOUBLE TRAB பிரிவில் ரத்ஹோர் வெள்ளி வென்றார்.

ஒலிம்பிக் வரலாற்றில் 104 வருடங்களுக்குப் பிறகு தனிநபர் பிரிவில் இந்திய அணி வெற்றிபெற்றுள்ளமை இன்னொரு முக்கிய அம்சமாகும்.

1900 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற இரண்டாவது நவீன ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணி சார்பாக பங்குகொண்ட இங்கிலாந்து இராணுவ வீரர் நோர்மன் பீரிட்சார்ட் தடகளப் போட்டிகளில் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

தனிநபர் பிரிவுகளில் இதுவரை இந்திய அணிக்கு வெண்கலப் பதக்கங்களே கிடைத்துள்ளன. 1952ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் இடம்பெற்ற மல்யுததப் போட்டியில் இந்திய வீரர் கே.டி. யாதவ், 1996இல் அட்லாண்டாவில் இடம்பெற்ற டெனிஸ் ஒற்றையர் ஆட்டத்தில் லியாண்டா பய்ஸ், 2000ஆம் ஆண்டு சிட்னியில் இடம்பெற்ற பெணகள் பிரிவிற்கான பாரம் தூக்கும் போட்டியில் மல்லேஸ்வரி ஆகியோர் வெண்கலப் பதக்கங்கள் வென்றமை குறிப்பிடத்தக்கது.



நுர்கான் தேலான்

பளுதூக்கும் போட்டிகளைப் பொறுத்தவரை துருக்கி நாட்டின் 20 வயதே ஆன நுர்கான் தேலான் ஸ்நாட்ஜ் முறையில் தனது எடைக்கு மேலாக ஒரு மடங்கு எடையைத் தூக்கி உலகசாதனை படைத்து தங்கம் வென்றது மட்டுமல்லாது துருக்கி நாட்டிற்காகத் தங்கம் வென்று கொடுத்த முதல் பெண் என்ற பெருமையையும் பெறுகின்றார்.

SNATCH பிரிவில் 97.5kg எடையையும் கிள் அன்ட் ஜேர்க் பிரிவில் 112.5kg எடையையும் தூக்கி (மொத்தமாக 210kg) இவர் உலகசாதனையைப் படைத்தார். இப்பிரிவில் தங்கம் வென்ற நுர்கான் அடுத்தடுத்து 3 புதிய உலக சாதனைகளை ஏற்படுத்தினார்.



ஜஸ்டின் கட்டின்

### மறக்க முடியுமா?

அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் பிஹெல்ப்ஸ 6 தங்கம் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்று மொத்தமாக 8 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

அதுமட்டுமல்லாது இவர் கலந்துகொண்ட அனைத்துப் பிரிவுகளிலும் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் பிஹெல்பஸ் ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டர் டிடெயனின் சாதனையைச் சமன் செய்துள்ளார். 1980 இல் அலெக்ஸ்சாண்டர் 3 தங்கம், 4வெள்ளி, 1 வெண்கலம் என மொத்தமாக 8 பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.



மைக்கல் பிஹெல்ப்ஸ்

### அதிவேக ஓட்ட வீராங்கனை

உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனை என்ற பெருமையை பெலாரஸ் வீராங்கனை யுலியா தனதாக்கிக்கொண்டுள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க...)

## My Dear vija! தமிழன் தலை நிமிர்ந்து நடக்கும் நாள் எப்போ வரும்?

*J.சுபா செம்மணிவீதி.*

வியா அங்கிள்!

இளைஞர்களைச் சீரழிக்கும் செல்போன் பற்றி என்ன கூறுகிறீர்கள்?



**அட நாசமறுப்பு! அறுந்த செல்போனால் யாழ்ப்பாணம் மனநோய் வைத்தியசாலை மாதிரியல்லோ தெரிகிறது.**

*K.சங்கர் வயாவிளான்.*

Dear Vija!

சமீபத்தில் தங்களை அசரவைத்தது...?

**சங்கர்!**

**யாழ்ப்பாணத்தில் காணி விலையேற்றம் என்னை அசர வைத்தது.**

*A.அனிஸ்ரன் குருநகர்.*

வியா!

சீறி வரும் பாம்பை நம்பினாலும், சிரித்துவரும் பெண்ணை நம்பக்கூடாது என்கிறார்களே! ஏன்?

**அது சீறுவது கொத்துவதைத் தவிர்ப்பதற்கு. இது சிரிப்பது கொத்துவதற்கு.**

*R.கஜனி நல்லூர்.*

வியா அண்ணா!

பெண்கள் தவறிழைப்பதை எப்படி எண்ணுகிறீர்கள்?

**சில ஆண்களின் பலவீனம் என்று நினைக்கிறேன்.**

*S.தாரகன் தரிப்பூர்.*

வியாசரே!

பதவியிழக்கும் தருணத்திலாவது அரசியல்வாதிகள் திருந்துவார்களா?

**உயிர் போகும் தருணத்திலும் திருந்தார்கள்.**

*R.அஜய் சுன்னாகம்.*

வியாசார்!

ஆறு விரல் இருந்தால் அதிஷ்டமாமே! உண்மையா?

**இருக்கும் இருக்கும். ஒருவிரல் போனாலும் ஐஞ்சு விரல் மிஞ்சுமல்லோ.**

*வ.கம்ஷிகா கோண்டாவில்.*

வியா அங்கிள்!

கால் போன போக்கில் நாம் போகலாமா?

**கவனம்! மிதிவெடி அபாயம்! பார்த்துக் காலை வையும்.**

### வியாசரே! பதவியிழக்கும் தருணத்திலாவது அரசியல்வாதிகள் திருந்துவார்களா?

*R.தர்ஷினி யாழ்ப்பாணம்.*

வியா!

ஆண்கள் குடுமி வைத்துக்கொள்ளலாமா?



**"குடுமி இல்லாதவன் கோபுர வாசல் த்தாண்டக்கூடாது" என்றொரு முதுமொழி நம் தமிழ்மொழியில் உண்டல்லவா?**

*V.இளங்கோ கோப்பாய்.*

My Dear vija!

தமிழன் தலை நிமிர்ந்து நடக்கும் நாள் எப்போ வரும்?

**மீண்டும் தோள் மீது துவக்கை சுமக்கும்போது.**

*து.சஞ்ஜீவன் ஆனைக்கோட்டை.*

Vija Sir!

நாள்தோறும் கலண்டர் கிழிக்கும்போது என்ன நினைப்பீர்கள்?

**ஆகா! ஓகோ! நமக்கும் காலம் நெருங்குது... என்று நினைப்பேன்.**

## வியாசர் பதில்கள்

*இ.தவசீலன் பொற்பதி.*

வியாசர் மாமா!

பெண்கள் தம் மனதில் நினைக்கும் காதலுக்ாகக் காலமெல்லாம் காத்திருக்கிறார்கள். ஆனால் ஆண்க்ள் மனம் அலைபாயந்து வேறு ஒரு பெண்ணை நாடுகிறதே.

இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**அட! என்னைப்பற்றி உமக்குமா தெரிந்துவிட்டது.**

*ரா.சுதாமதி இணுவில்.*

வியாசர்!

நினைத்தது நடக்க என்ன செய்யவேண்டும்?

**தெய்வமாக மாற வேண்டும்.**

*இ.கவிநிலா கிளிநொச்சி.*

வியா மாமா!

இளம் பெண்களைக் குறை கூறிக்கொண்டிருக்கும் கிழவிகளை என்ன செய்வது.?



**அவர்களின் அனுபவம் அவர்களைக் குறைகூற வைக்கிறது கவிநிலா.**

*ச.பிரபாகர் மல்லாவி.*

வியா அவர்களே!

இந்தக் கலியுகத்தில் 'கர்ணன்' போன்றவர்கள் இருக்கிறார்களா?

**கர்ணனைப் பெற்ற குந்தி போன்றவர்கள் இருக்கிறார்கள்**

*சி.சித்தார்த்தன் சித்தன்கேணி.*

வியாசரே!

காதலிக்கு கடிதம் எழுதச் சொல்லித் த்ருவீர்களா?

**சித்தார்த்தா!**

**நான் முன்பு எழுதிய கடிதங்களை மறந்துவிட்டேன்.**

*வ.சிவா வவுனியா.*

வியாசரே!

பிடிவாத குணத்தைத் திருத்த வழி ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்?

**உஷ்... பேசாமல் இரும். வாதம் வர திருத்தம் தானா வரும்.**

*கே.விசாகேசன் சுழிபுரம்.*

வியா!

கடைசி வரை நம் கூட வருபவர்கள் யார்?

**வ்ரமாட்டார்கள். சுடலையில் நிற்பார்கள்-எரிப்பார்கள்.**

*சொ.நித்தியா கொக்குவில்*

வியா!

உங்களுக்கு அரசியலில் நுழைய விருப்பமில்லையா?

**உஷ்... கொஞ்சக் காலம் வாழ விரும்புகிறேன்.**

*தே.புஷ்பரெட்ணம் வரணி.*

வியா ஐயா!

மனதினை ஒருமைப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

**திருமணம் செய்யாமல் இருக்கவேண்டும்.**

*த.எழிலரசி வேலணை.*

Dear Vija!

கணவன்-மனைவி உறவு அதிகம் பாதிக்கப்படுவது எதனால்?

**"உறவு" இன்மையால்.**

*க.யாழினி கொக்குவில்.*

டியர் வியாசர்!

வீடுகளில் எதற்காக மதில் சுவர் கட்டுகிறார்கள்?



**உயிர்க் கதிகால் படுத்து காணியை ஆக்கிரமித்து பிரச்சினையை ஏற்படுத்துகிறதல்லவா.**

### வியா அங்கிள்! இளைஞர்களைச் சீரழிக்கும் செல்போன் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

## வாசகர் பதில்கள் இல -23

## அடுத்த ஒலிம்பிக் போட்டியை இலங்கையில் நடத்தினால் எப்படியிருக்கும்?

இலங்கையில் மின்வெட்டு குறுகியகாலத்திற்கு இல்லாது இருக்கும். ஏனெனில் வீட்டு T.V களை மூடிவைத்துவிட்டு நேராகப் பார்ப்பதற்கு அணிதிரள்வர்.

R.கஜனி,
நல்லூர்.

**இலங்கையில் நடத்தினால் உலகத்தின் பல செய்தி ஊடகங்களில் இலங்கையின் பெயர் பிரபல்யம் அடையும். வெளிநாட்டு செலாவணி பணம் வந்துசேரும். உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் பலவித விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், நடுவர்களும் வந்து போட்டிகளில் கலந்துகொள்வார்கள். இதனை இலங்கை மக்கள் கண்டுகளித்து உவகையடைவார்கள். நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும். புரியுதா செல்வி.**

**கந்த. ஞானமுத்து,**
**கைதடி.**

ஒலிம்பிக் என்பது என்ன நம்ம ஊர் குச்சொழுங்கைகளுள் நடக்கும் ஓட்டப்போட்டியா? பல கோடி ரூபாய்கள் செலவழித்து பல ஆண்டுகள் திட்டமிட்டு 'ஒலிம்பிக் கிராமத்தை' உருவாக்கி நடத்தப்படும் விளையாட்டு.

நம்ம நாட்டில் மக்களின் குடியிருப்பு நிலங்களே பாதுகாப்பு வலையங்களாக மாறிவிட்டபோது ஒலிம்பிக் கிராமத்துக்கு ஏது இடம்?

பாதுகாப்புச் செலவிற்கே அம்மையார் அயல் நாடுகளில் கையேந்தி நிற்கும்போது ஒலிம்பிக் போட்டிகளுக்குச் செலவு செய்ய ஏது பணம்?

ஏனம்மா உமக்கு இந்த வீண் கற்பனை!

S.கலை, கொக்குவில்.

இந்தச் சாட்டிலாவது நம்ம ஊரில் மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டால் சரி. ஆனால் அம்மையார் ஒலிம்பிக்கிற்கு ஒதுக்கும் நிதியை வேறொன்றுக்கும் பயன்படுத்தாமல் இருக்கவேண்டுமே.... *V.துவாரகா, யாழ்.*

**இலங்கையைப் பொறுத்தவரையில் 3/4 பங்கு நீர். மிகுதி 1 பங்கிலும் 75% அரசாங்கத்துக்குச் சொந்தம். இந்த இலட்சணத்தில் இலங்கையில் ஒலிம்பிக் போட்டியை நடத்தினால் (சை/சூப்) பராகத்தான் இருக்கும்.**

**ம.நர்மதா,**
**உடுவில்.**

## வாசகர் பதில் இல - 25

## இளசுகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அவர்களைத் திருத்த வழி ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்?

**இக்கேள்வியை அனுப்பிய சங்குநாத வாசகர் நாகமகேந்திரலிங்கம், கோப்பாய்.**

**உங்கள் பதில்கள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 04 - 09- 2004.**

**உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-**

'வாசகர் பதில்'
சங்குநாதம்
இல- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# சிந்தை சிலிர்க்க வைக்கும் செந்தமிழ்க் காவியம்

பல்லவப் பேரரசனான மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நந்திக் கலம்பகம் என்னும் நூல் ஏனைய கலம்பக நூல்களைப் போலல்லாது வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது.

மாபெரும் வீரனாகவும், கொடை வள்ளலாகவும், செங்கோல் வேந்தனாகவும், தமிழின் பால் மட்டற்ற காதல் கொண்டவனாகவும் விளங்கிய மூன்றாம் நந்திவர்மன் மேல் பாடப்பட்ட இந்நூல், சொற்செறிவு, பொருட்செறிவு, ஓசைநயம் ஆகியன ஒருங்கே அமைந்ததாகவும், படிப்போர்க்குப் படிக்கும்தோறும் இன்பம் பயப்பதாகவும் விளங்குகின்றது.

வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா முதலிய பல்லினப் பாக்கள் கலந்துள்ளதாலேயே இந்நூல் கலம்பகம் என அழைக்கப்படுகின்றது.

மல்லிகை, முல்லை, இருவாட்சி, செங்கழுநீர் முதலிய நறுமணம் மிக்க மலர்கள் வைத்துத் தொடுத்த மாலையைப்போல பல்வகை இனப் பாக்களும் கலந்து விரவிக்கிடப்பது கலம்பகத்துக்குள்ள தனிச்சிறப்பு.

**'வண்மையால், கல்வியால் மாபலத்தால்**
**ஆள்வினையால்**
**உண்மையால் பாராள் உரிமையால் -**
**திண்மையால்**
**தேர் வேந்தர் வானேறத் தெள்ளாற்றில்**
**வென்றானொடு**
**யார் வேந்தர் நிற்பார் எதிர்'**

எனப் பாரத வெண்பா பாடிய பெருந்தேவனார் நந்தியைப் பாராட்டிக் குறிப்பிட்டிருப்பதே அவனது பெருமைக்குச் சான்றாகும்.

இந்நூலை ஆக்கியவர் யார் என்பதை உறுதிபடக் கூறமுடியாதுள்ளது. கர்ணபரம்பரைக் கதைகளின்படி நந்திவர்மனது மாற்றாந் தாய்க்கு மக்கள் நால்வர் எனவும் அவர்களில் ஒருவரே இந்நூலை ஆக்கினார் எனவும் கூறப்பட்டபோதிலும் அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

## இலக்கிய நயம்

ஆட்சியைக் கைப்பற்ற இச் சகோதரர்கள் நால்வரும் மாற்றார் துணைகொண்டு நந்திவர்மனுடன் போரிட்டு அவனால் துரத்தியடிக்கப்பட்டனர் எனவும், போர்முனையில் நந்தியை வெற்றிகொள்ள முடியாது என உணர்ந்த அவர்கள் தந்திரத்தினாலேயே அவனைக் கொல்ல வேண்டுமென எண்ணி, ஒருவன் மந்திர வித்தைகளையும், மற்றவன் தந்திர வித்தைகளையும் மூன்றாமவன் வாட்போர் உத்திகளையும் கற்றுத் தேர்ந்தனர் எனவும், கடைசியானவன் தமிழை முறைப்படி கற்று கவிபாடும் ஆற்றல் பெற்று, ஆயுதத்தால் அழிக்கமுடியாத நந்தியை அறம்பாடி அழிக்கிறேன் எனச் சூழுரைத்து, பாடல்களின் இடையிடையே அறச் சொற்களை – அவலச் சொற்களை வைத்து இக் கலம்பக நூலைப் பாடினான் எனவும், பாடி முடிந்ததும் அவன் கற்ற தமிழ் அவனுக்கு நல்லறிவு புகட்டியதால் அந்நூலை ஓரங்கட்டி வைத்துவிட்டுத் துறவை மேற்கொண்டு இரந்துண்டு வாழ ஆரம்பித்தானென்றும் எப்படியோ அவன் பாடிய சில பாடல்கள் வெளியே கசிந்ததால் ஒற்றர்மூலம் அதை அறிந்த நந்தி, அப்பாடலில் மனதைப் பறிகொடுத்து, துறவியாகத் திரிந்த கவிஞனைத் தேடியழைத்து அந்நூலைப் படித்துக் காட்டும்படி கேட்டதாகவும்,

"இக் கலம்பக நூல் உன்மீது அறம் வைத்துப் பாடப்பட்டது; கேட்டால் நீ இறந்து விடுவாய்" எனத் துறவி எடுத்துரைத்தும் கேளாமல்

# நந்திக் கலம்பகம்



தமிழுக்காக உயிரைக் கொடுக்கவும் நந்தி தயாரானான் என்றும், விதி வலிது என்றுணர்ந்த கவிஞன் பச்சைத் தென்னோலையால் நூறு பந்தர் அமைத்து ஒவ்வொரு பந்தரிலும் நீ அரச கோலத்துடன் வீற்றிருந்து எனது பாடலைக் கேட்பாயானால் ஒவ்வொரு பாடல் முடிவிலும் பந்தர்கள் ஒவ்வொன்றாகத் தீப்பற்றி எரியும் என்றும், நூறாவது பந்தரில் ஈமச் சிதை அமைத்து அதில் அமர்ந்து கடைசிப் பாடலைக் கேட்டால் உடலும் விறகும் தீப்பற்றி நீ நீறாகி விடுவாய் என்று கூறியபோதும் தமிழுக்காக உயிர்கொடுக்கத் துணிந்த மன்னன் அதற்கு ஒப்புக்கொண்டு, அவ்வாறே செய்து கடைசிப் பாடலைக் கேட்டதும் அப்பந்தர் தீப்பற்றி மன்னனும் நீறானான் என்பது கர்ணபரம்பரைக் கதை.

'வரையாது வழங்கும் வள்ளலான நந்திவர்மனே! நீ இறந்துவிட்டாய்! நீ உயிரோடு இருந்த காலமெல்லாம் உன் முகத்திலே குடிகொண்டிருந்த ஒளி – தேஜஸ் – இனி யாரிடம் போவேன் எனத் தேடித்தேடி அலைந்து கடைசியில் விண்ணிலே பிரகாசிக்கும் தண்ணிலவை அடைந்துவிட்டது. உனது புகழ் பாரெங்கும் பரவிவிட்டது. உனது வீரம் தகுந்தவரைத் தேடி எவரும் அகப்படாததால் கானில் வாழும் புலியிடம் தஞ்சமடைந்துவிட்டது.

மாரியைப் போல வாரி வழங்கிய உனது கரங்கள் (வள்ளல் தன்மை) தேவருலகில் உள்ளதும் கேட்டதையெல்லாம் கொடுக்கும் சக்தி வாய்ந்ததுமான கற்பக விருட்சத்தைச் சென்றடைந்துவிட்டது. உன்னிடம் குடிகொண்டிருந்த செல்வத்தின் அரசியாகிய திருமகள், பழையபடி தன் கணவராகிய மகாவிஷ்ணுவிடம் சென்றுவிட்டாள். உனது திருமேனி செந்தழலிலே சங்கமமாகிவிட்டது. நந்தி நாயகமே, நானும் என் கவியும் இனி யாரிடம் செல்வோம்' எனக் கண்ணீர் ஆறாகப் பெருகக் கடைசிக் கவிதையைப் படிக்கிறான் கவிஞன்.

**'வானுறு மதியை அடைந்ததுன் வதனம்**
**வையகமடைந்ததுன் கீர்த்தி**
**கானுறு புலியை அடைந்ததுன் வீரம்**
**கற்பகம் அடைந்ததுன் கரங்கள்**
**தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்**
**செந்தழல் அடைந்ததுன் மேனி**
**யானும் என் கவியும் எவ்விடம் புகுவோம்**
**எந்தையே. நந்தி நாயகமே'**

என்ற பாடலைப் பாடி முடிக்கின்றான் கவிஞன். நந்தியின் கதையும் அத்துடன் முடிகிறது.

**'இருந்தமிழே உன்னோடு இருந்தேன் வானோர்**
**அந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'**

என்றும்,

**'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**காலமெல்லாம் உன் நாமம் மறந்தறியேன்'**

என்றும்,

**'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே**
**கிடந்து சங்கத்து**
**இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே**
**தவழ்ந்த பாவை**
**நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே**
**நடந்தோர் என**
**மருப்பிலே பயின்ற பாவை.....'**

என்றும் விதந்தேத்தப்படும் தமிழுக்கு வாழவைக்கும் தன்மைதான் உண்டேயன்றி வீழவைக்கும் தன்மையில்லை என வாதிடுவோரும் உளர்.

**'கல்லாடம் என்ற ஒரு கவிதை நன்நூல்**
**கற்றவர் முன் அரங்கேற்றம் ஆனபோது**
**சொல்லாயும் மாமதுரை ஈசன் கேட்டு**
**சுவைத்தபடி நூறுதரம் தலையசைத்து**
**வெல்லமிது வெல்லமிது என்றிட்டாராம்**
**விடத்தன்மை தமிழுக்கு இருக்குமாயின்**
**எல்லோரும் செத்திருக்க வேண்டும்; அந்த**
**ஈசன் என்பவரும் செத்திருக்க வேண்டும்**
**அன்றே'**

எனக் கவிஞர் சுரதா கூறுகின்றார்.

எது எவ்வாறிருப்பினும், பயில்தொறும் இன்பம் பயக்கும் கவிதைக் குவியலான நந்திக் கலம்பகம் ஈடிணையற்ற ஒரு நூலாகும்.

இக் கலம்பக நூலில் பெரும்பாலும் நந்திவர்மன் அழகிலும், வீரத்திலும், கீர்த்தியிலும் மனதைப் பறிகொடுத்த இளம் பெண்கள் அவன்மேல் கொண்ட தீராத காதலால் அவன் பெருமை பற்றிப் பாடும் பாக்களே அனேகமாக இடம் பெற்றுள்ளது.

இளம் மங்கையர்கள் ஊசலாடி விளையாடுகிறார்கள். அப்படி விளையாடும் நேரத்தில் கூட நந்திவர்மன் புகழை அவர்கள் மறக்கவில்லை.

'செவ்வரி படர்ந்த கண்களையுடைய இளம் மங்கையர்களே! ஊசல் ஆடுவோம் வாருங்கள்! மார்பை மறைத்திருக்கும் மேலாடை ஆட, வீக்குகள் மிளிர்கின்ற பொன்னாபரணங்கள் அசைந்தாட, ஊஞ்சலாடும் வேகத்தால் மலர்கொண்டு புனைந்த கூந்தல் அவிழ்ந்து காற்றின் வேகத்துக்கேற்ப அசைந்தாட,

தெள்ளாறு என்னுமிடத்தில் பகைவர்களை விண்ணுலகுக்கனுப்பியவனும், எண்திசையும் புகழ் மணக்க வீர முழக்கமிட்டுத் திரியும் படைகளையுடையவனும், மண்ணுலகில் செங்கதிரோன் போல் புகழ் வீசுபவனும், காடவன் என்ற கவிய

பொன். இராசதுரை

ரசனுக்கு முன் பிறந்தானும் ஆகிய நந்திவர்மனுடைய கையிலே உள்ள பகையரசர்களது உயிர் குடித்த வேலையும், அவனது தலைநகரான காஞ்சிமாநகரின் அழகையும் பெருமையையும் பற்றிப் புகழ்ந்து பாடுவோம்' எனப் பாடுகிறார்கள்.

**'ஓடரிக் கண் மட நல்லீர் ஆடாமோ ஊசல்**
**உத்தரியப் பாட்டாட ஆடாமோ ஊசல்**
**ஆடகப் பூண் மின்னாட ஆடாமோ ஊசல்**
**அம்பொன் மலர்க் குழல் சரிய ஆடாமோ**
**ஊசல்**
**கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளச் செய்த**
**கோமுற்றப் படை நந்தி குவலய மார்த்**
**தாண்டன்**
**காடவர்க்கு முன் தோன்றல் கைவேலைப்**
**பாடி**
**காஞ்சிபுரமும் பாடி ஆடாமோ ஊசல்'**

"அறம் கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும் திறம் கிடந்த திண்தோள் வலியும்" கொண்டவன் நந்திவர்மன். அவனது வீரச் சிறப்பு பதினைந்து வரிகளில் இணைக் குறள் ஆசிரியப் பா மூலம் எடுத்தோதப்படுகிறது.

(தொடரும்...)

எல்லா ஆசைகளையும் துறந்து எவன் விருப்பம், மமதை இவற்றை விலக்கித் தன்கடன் ஆற்றுகிறானோ அவனே சாந்தி பெறுகிறான். -பகவத்கீதை

# மீண்டும் தொடரும் மிடுக்கு

"எங்க வீட்டுப் பிரச்சினையையே தீர்க்கேலாமல கிடக்கு. பிறகு எப்படி நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கிறது? சின்னவங்கள் சண்டை பிடிக்கிறாங்கள் ஒருக்கால் பாருங்கோவனப்பா..."

சேவ் பண்ணிக்கொண்டிருந்தவர் திரும்பியதில் சேவிங் ரேசர் கன்னத்தில் வெட்டிவிட்டது.

"ஆ... வ்! நிம்மதியாய் சேவ் பண்ணக்கூட விடாதையப்பா" கணவனின் பேச்சை வாங்கிக்கொண்டும் பம்பரமாய்ச் சுழன்றுகொண்டிருந்தாள் சத்தியபாமா.

நேரம் காலை ஏழு மணி.

"அம்மா இந்த ஸ்க்கேட்டை கொஞ்சம் அயன்பண்ணித் தாறீங்களே?" காலையில் குளித்துவிட்டு வந்த மகள் கேட்டாள்.

"ஏன் பிள்ளை கம்பஸ்சிலை படிக்கிறாய். உனக்கு வயது பத்தாதே"

"எனக்கென்ன நான் இப்படியே போவன். பாக்கிறவை உங்களைத்தான் குறை சொல்லுவினம்." என்றாள்.

"இப்படியே சொல்லிச் சொல்லி என்னைக்கொண்டு முழு வேலையையும் செய்விச்சுப் போடுவாய்"

"பொம்பிளைப் பிள்ளை வளர்ந்தும் ஒரு உதவியும் இல்லை. படிக்கிறதுகள் பாவம் எண்டு விட்டால் அதுகள் தங்களின்ரை வேலைகளையே செய்யேலாமல் இருக்குதுகள். கொஞ்சம் வீட்டைக் கூட்டலாம். தேங்காயைத் திருவலாம்...

இந்த வயதிலை ஆட்டுக்கு குழை ஒடிக்கிறது, மாட்டுக்கு ஓலை கிழிக்கிறதிலை இருந்து எத்தனை வேலைகளை எல்லாம் நாங்கள் செய்தம்..ம்... கல்யாணம் கட்டினதிற்குப் பிறகுதான் அம்மாவின்ரை அருமை தெரியும்..." என்று புறுபுறுத்தவாறே பாலைச் சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்துவிட்டு பாணை வெட்டி சாப்பாட்டு மேசையில் வைத்தாள்.

'இந்தப் பாணை விட்டால் கொழும்புச்சனம் பாடு திண்டாட்டம் தான்' பாணைக் கண்டுபிடித்தவனை மனதிற்குள் வாழ்த்தினாள். பிறகு என்ன நினைத்தாளோ தெரியவில்லை. மகள் வைத்துவிட்டுப் போன சட்டையை எடுத்து அயன்பண்ணி வைத்தபோது இங்காலே பால் பொங்கி அடுப்புக்குள்ளும் வழிந்திருந்தது. பாலை இறக்கி தேனீர் ஊற்றி மேசைமீது வைத்துவிட்டு பாண் துண்டுகளை எடுத்து மாஜரின் பூசத் தொடங்கினாள்.

காலைச் சாப்பாடு பாணும் மாஜரினும். இது கொழும்புச் சாப்பாடு. ஊரிலிருந்து கல்யாணம் கட்டிக் கணவனுடன் கொழும்புக்கு வந்தது முதல் இந்த இயந்திர உலகத்தைச் சமாளிப்பதற்குக் கற்றுக்கொண்டாள்.

"பிள்ளை, இதை ஒருக்கால் கழுவித்தா பாப்பம்."

"எனக்கேலாது நேரம் போச்சு"

'அம்மா பாவம் உதவிசெய்ய வேண்டும்' என்றுதான் அவள் நினைப்பாள். ஆனால் செய்யமாட்டாள். 'இங்கை ஒரு பிள்ளையைக் கொண்டு ஒரு துரும்பு எடுப்பிக்கேலாது' என்று சத்தியபாமா முணுமுணுப்பாள். ஆனாலும் பிள்ளைகளைக் கொண்டு ஒரு சிறு துரும்பு எடுப்பிக்கவும் அவள் மனம் இடம்தராது. 'பாவம் படிக்கிறதுளை ஏன் கஷ்டப்படுத்துவான்' என்று நினைப்பாள்

"அம்மா ரீ..." மூத்தவன் முருகேஸ் அப்போதுதான் நித்திரையால் எழும்பி வந்துகொண்டிருந்தான்.

"ஆ...துரை வாங்கோ. இப்பதான் எழும்பினீங்களாக்கும்! இந்தா இந்தப் பாவாடையைக் கொஞ்சம் அயன்பண்ணிக் குடு" என்றாள்.

"என்னம்மா பெட்டயளின்ரை வேலையை என்னட்டை சொல்லுறீங்கள். எங்கையவள். சரி சரி இஞ்சை கொண்டுவாங்கோ..."

முருகேஸ் அவ்வப்போது ஏதாவது உதவிசெய்வான்.

"அம்மா போட்டுவாறன்..."

"பிள்ளை இன்னும் சாப்பிடேல்லையே. சாப்பிட்டுவிட்டுப் போ"

"எனக்கு நேரம் போச்சுது. நான் போட்டு வாறன்" அவள் போய்க்கொண்டே இருந்தாள்.

"பிள்ளை... பிள்ளை... ஒரு துண்டாவது. ம்... இதுகள் நேரகாலத்துக்குச சாப்பிடாதுகள். பிறகு அறுபத்தெட்டு வருத்தங்களைச் சொல்லுங்கள் வெறும் வயித்தோடை போறாளே."

அவளுக்கு வருத்தமாக இருந்தது.

'அம்மா, பென்னைக் காணேல்ல, சேட்டைக் காணேல்ல, சப்பாத்தைக் காணேல்ல, சீப்பைக் காணேல்ல, பௌடரைக் காணேல்ல், இவன் நுள்ளுறான், இவன் கிள்ளுறான்' ஒருவாறு எல்லாம் ஓயந்து எல்லோரையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டு பெருமூச்சொன்றை விட்டாள் சத்தியபாமா.




பெண் என்பவள் எப்போதுமே ஒரு புதிர்தான். அவள் எந்தநேரத்தில் எப்படித் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவாள் என்பதை யாருமே தெரிந்துகொள்ள முடியாது. ஒரு பெண்ணுக்கும் ஆணுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள். எண்ணத்தில், பார்வையில், செயலில். பிறகு எப்படி இவர்களால் ஒன்றாக வாழமுடிகிறது. ஒரு பெண்ணிடம் இருக்கக்கூடிய பக்குவம் பொறுமை வேறு யாரிடம் வரும். நேரம் 7.30 'செங்கமலம் சிரிக்குது சங்கமத்தை நினைக்குது' பாடல் ரேடியோவில் கேட்டது. முற்றத்தில் மூத்தவன் முருகேசன் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தான்.

"தம்பி, முத்தத்தை ஒருக்கால் கூட்டிவிடன். அதுகும் உடல் பயிற்சிதானே...."

"ஓமோம் பிறகு நீங்கள் புட்டவி, தேங்காய் துருவு, உடுப்புத் தோய் எல்லாமே உடற்பயிற்சிதானே என்பீர்கள். நான் மாட்டன்" என்றான்.

ஏதோ இவையெல்லாம் பெண்களுக்குரிய வேலை என்கிற நினைப்பு அவனுக்கு. சோற்றைக் கிளறி விட்டாள் சத்தியபாமா. பிறகு கரைந்தாலும் இவருக்குப் பிடிக்காது. இவருக்குக் கறுத்தச் சோறு வேணும். பிள்ளையளுக்கு வெள்ளைச் சோறுவேணும்.

காலை ஒன்பது மணிக்கு உருளைக்கிழங்குப் பிரட்டல், பீற்றூட் சம்பல், பாகற்காய்கறியுடன் சமையல் வேலைகள் நிறைவடைந்தன. பாகற்காய்கறி புளித்தால் இவருக்குப் பிடிக்காது. சோற்றை ஆறப்போட்டு, ஒரு ப்பாசலாக்கி சொதியை ஒரு போத்தலில் விட்டு இவருடைய அலுவலகப் பைக்குள் வைத்தபோதுதான் மூச்சு வந்தது. கணவன் அலுவலகம் கிளம்பியபோது அவருடன் வாசல் வரையும் வந்து அவரை வழியனுப்பிய பிறகுதான் காலை வேலைகள் முடிவடைந்ததைப் போன்ற ஒரு திருப்தி.

வாழ்க்கை என்பது எப்பொழுதுமே ஒரு வழிப்பாதைதான். கல்யாணம் என்னும் வண்டியிலே கடவுள் மாடுகளைப் பூட்டும்போது எப்பொழுதும் சரிசமனாகத்தான் பூட்டுவான். கட்டை மாட்டையும் நெட்டை மாட்டையும் பூட்டவேமாட்டான். பிறகு எப்படி வண்டில் சரியாகப் போக முடியும். சத்தியபாமாவிடம் துடிப்பும் பதட்டமும் இருந்தால் கணவனிடம் நிதானமும் பொறுமையும் இருக்கும். எதையுமே ஆறுதலாகவும், நிதானமாகவும் செய்யும் அவரைப் பார்க்க அவளுக்கு சிரிப்பாக இருக்கும்.

லீவு நாட்களில் தான் சமைக்கப்போவதாகக் கூறிவிட்டு நாள் முழுவதும் செலவுசெய்து ஒரு மீன் குழம்புவைப்பார். பிள்ளைகளும் ஆ.. ஊ... என்று சாப்பிடுவார்கள். அந்தளவிற்கு காரசாரமாக இருக்கும் அது. "இஞ்சை விடுங்கோ அப்பா . எல்லாம் கொட்டிச் சிந்தி, ஆம்பிளையளை குசினிப் பக்கமே விடக்கூடாது" என்பாள் சத்தியபாமா.

"இஞ்சரப்பா, சும்மா பறந்து கொண்டு திரியாமல் உந்தக் கதிரையில கொஞ்சநேரம் இரும் பார்ப்பம். உந்த ரீவியைப் கொஞ்ச நேரம் பார்" என்பார் கணவர்.

"கீரை கீரை" படலைக்குள் சத்தம் கேட்டது.

"வேண்டாம் போப்பா."

கூட்டிப் பாதியில் கிடந்த முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி அள்ளி மூட்டையாகக் கட்டி வைத்துவிட்டு, வீட்டுக்குள் சிதறிக்கிடந்த புத்தகங்கள் பைகள் உடுப்புக்கள் எல்லாவற்றையும் எடுத்து அந்தந்த இடத்தில் வைத்து ஒழுங்குபடுத்தி, கதிரைகளில் சிதறிக்கிடந்த தினசரிப் பத்திரிகைகளை எடுத்து மடித்து மேசை மீது வைத்துவிட்டு ஒரு பழைய துணியை எடுத்து ரி.வி, ரேடியோ, தையல் மெசின், கதவு, ஜன்னல் எல்லாவற்றினதும் தூசிகளைத் தட்டி வீட்டை ஒருவாறு சுத்தம் செய்த பின்னர் தொட்டிக்குள் இருந்த பழைய தண்ணீரை வெளியேற்றிவிட்டு புதிய தண்ணீரை நிரப்பி அப்படியே பூச்சாடிகளிற்கும் தண்ணீரை அள்ளி ஊற்றிவிட்டு விறுவிறு என்று நாலுவாளியை அள்ளிக் குளித்தாள். குளித்து முடிந்து வரும்போது நேரம் காலை பதினொருமணி.

பெயருக்கு இரண்டு பாண் துண்டுகளை வாய்க்குள் திணித்துக் கொண்டாள். காலையில் குடிப்பதற்கு ஊற்றிய தேனீர் ஆறிப்போயக்கிடந்தது. அரிசி, பருப்பு முடிந்துபோய்விட்டது. அப்படியே கொஞ்சம் மரக்கறி வாங்கினால் இரண்டு நாளைக்கு சமாளிக்கலாம் என நினைத்தவள் சேலையை மாற்றிக்கொண்டு பணத்தையும் கூடையையும்.கையில் எடுத்துக்கொண்டாள் சத்தியபாமா.

கடைத்தெருவில் தனக்குத் தெரிந்த சிங்களத்தை உபயோகித்து ஒருசில மரக்கறிகளை வாங்கினாள். அப்படியே கடையில் அரிசி, பருப்புக்களையும் வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தபோது மதியம் 1.00மணி. நல்ல வெயில். தலையிடித்தது சிறிதுநேரம் கதிரையில் இருந்தாள். ரி.வியைப் பார்ப்போம் என்று ரி.வியை முடுக்கிய போது அதில்,

'பெண்களின் சுதந்திரத்தை ஆண்களே அனுமதியுங்கள். பெண்கள் நினைத்தபடி ஒரு சேலை எடுக்கமுடிகிறதா? ஒரு நகை செய்யமுடிகிறதா? விரும்பிய இடத்திற்குப்போக முடிகிறதா...?' காஞ்சிபுரம சருகைச்சேலை, கழுத்து முட்டிய நகை, கண்ணாடி, கொண்டையோடு ஒரு பெண் முழங்கிக்கொண்டிருந்தாள்.

மாதர் சங்கமோ என்னமோ? எரிச்சலாக இருந்தது. ரீவியை நிப்பாட்டினாள். பெண்களே தான் பெண்களுக்கு எதிரி. நேற்றும் இப்படித்தான் ஒருபெண் பெண்கள் வேலைக்குப் போவதை பெருமை அடித்துக்கொண்டிருந்தாள் ஏதோ வாய்க்கை கொழுவிக்கொண்டு ரோட்டிலை இறங்கி அலுவலகத்திற்குப் போனால் அதுதான் உயர்ந்தவேலை, கௌரவமான வேலை. இல்லாட்டில் அது பப்படா வேலை என்ற நினைப்பு. குடும்பத்தை நிர்வகிக்கிறதொன்றும் சாதாரண வேலை இல்லை. பொறுமை நிதானம் சகிப்புத் தன்மையெல்லாம் நிறையவே வேணும். இதுக்கெல்லாம் கூலிபோட்டால் ஆண்களின் சம்பளம் எந்தமூலைக்கு?'

பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் வரப்போகிறார்கள் என்ற நினைப்பு வந்த உடன் மீண்டும் குசினிப் பக்கம் போனாள் சத்தியபாமா.

மூத்தவன் முருகேசுக்கு முட்டைப்பொரியல் வேணும். மகளுக்கு சோறே வேண்டாம் மூன்று நேரமும் கேக்துண்டும் பிஸ்கட்டும் கொடுத்தாலே போதும். எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் வைத்துவிட்டு பப்படத்தைப் முறித்துப்போட்டு வாழைக்காயை வெட்டி ஒரு பெரியல் தயார் செய்தபோது...

"அம்மா சாப்பாடு" மூத்தவன் வகுப்பால் வந்துவிட்டான். தொடர்ந்து மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள். வந்த உடனேயே ஒருதன் ரீ.வியைப் போட மற்றவன் ரோடியோவைப் போட... 'அதை நிப்பாட்டு உதை நிப்பாட்டு...' ரீ.வியில் இந்திய இலங்கை கிரிக்கட் நடந்துகொண்டிருந்தது. இளையவன் இலங்கையை ஆதரிக்க அடுத்தவன் இந்தியாவை ஆதரிக்க சிறிநாத் வீசிய ஒரு பந்தில் ஜெயசூரிய ஆட்டமிழக்க இரண்டாவது துள்ளிக்குதிக்க வீட்டிலேயே கிரிக்கெட் ஆரம்பித்தது. மகள் ஓடிவந்து றிமோட்டை எடுத்து தொலைக்காட்சித் தொடருக்கு மாற்ற... இப்போது கலகம் அதிகரித்தது.

"டேய் டேய் சண்டைப் பிடிக்காதையுங்கோ..."

'நெடுகலும் கத்திக்கொண்டிருக்க பிரசர்தான் வரப்போகுது.' கணவன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. நடக்கிறது நடக்கட்டும் என பேசாமலிருந்தாள்:

சத்தியபாமாவைப் பொறுத்தவரை வேலைப்பளுவால் வரும் ரென்சன்தான் அனேகமான நேரங்களில் கோபமாக வெடிக்கிறது. பெண் என்பவள் உணர்ச்சி வசப்படுகிறவள்தான். ஆனாலும் பல சந்தர்ப்பங்களில் பொறுமையும் சகிப்புத்தன்மையும் நிறையவே காணப்படும். அதிலும் ஒரு அம்மா ஸ்தானம் என்பது எவ்வளவு பெரிய ஒரு பொறுப்பு? ஒரு அலுவலகத்தை நிர்வகிப்பதிலும் பார்க்க அம்மாவாய் இயங்குவது மிகவும் சிரமமானதும் பெருமையானதுமான ஒரு பணியாகும்.

சத்தியபாமாவுக்கு திடீர் திடீர் என்று கோபம்வரும். வார்த்தைகள் சூடாகபபறக்கும். ஆனால் சிறிது நேரத்தில் எல்லாம் மறந்துபோய் யார் நானா பேசினேன்? என்ற நிலைக்கு வந்திடுவாள்.

**இணுவில் உத்திரன்**

பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்து பாத்திரம் கழுவி தானும் சாப்பிட்டபோது நேரம் 3.00மணி. அதன்பின்னர் பிள்ளைகளின் வெள்ளை உடுப்பில் இருந்து கணவனின் கைக்குட்டை வரை பொறுக்கி எடுத்துக்கொண்டு போய் துவைத்து முடிக்க 4மணி ஆகியிருந்தது. இடுப்பு வலித்தது.

பிள்ளைகள் விளையாடப் போய்விட்டார்கள். மகள் ரியூசனுக்குப் போய்விட்டாள். வீட்டைக்கூட்டி தண்ணீரைச் சுடவைத்தபோது, "அம்மா ரீ..." மூத்தவன் வந்துவிட்டான். முகம் கழுவி பொட்டு வைத்துக்கொண்டாள் சத்தியபாமா.

"அம்மா ரீ..." மகள் கேற்றுக்குள் வரும்போதே தந்தியடித்தாள். அவசரமாக சுவாமி அறைக்குப்போய் விளக்கேற்றி சந்தனக்குச்சி ஒன்றையும் கொழுத்திக்குத்தினாள். தண்ணீர் கொதித்திருந்தது. கணவனும் வேலையால் வந்திருந்தான். இனி இரவு வரைக்கும் மாறிமாறி தேநீர் ஊற்றவேண்டியதுதான். மாலையில் வீட்டுக்குச் சில உறவினர்கள் வந்தாகள் அவர்களோடு கதைத்து ரீகொடுத்து உபசரித்து அனுப்பிவைத்தபோது மாலை 6.00மணி.

இரவு என்ன சாப்பாடு செய்யலாம்? 'தோசை, இடியப்பம், புட்டு! புட்டு இடியப்பம் தோசை இதைவிட்டால் அம்மாவுக்கு வேறை சாப்பாடே செய்யத்தெரியாது.' மகள் அடிக்கடி சொல்லுவாள்.

(18ஆம் பக்கம் பார்க்க...)

### கடினமான கற்றல்தான்!

கல்வியில் கரை காண
வேண்டுமெனின்
வெள்ளமென்ன... ஒரு
சமுத்திரத்தையே தாண்டிக்
கரைசேர வேண்டியிருக்கும்!
முயற்சி திருவினையாக்கும்
முயன்று படிக்க!

ஜெ.சுபாஷினி.
செம்மணி வீதி.

### மாட்டிக்கொண்டீர்கள் மெள்ளக் கரையேறுவீர்!

பள்ளிச் சிறுவர்களே!
வெள்ளத்துள் அகப்பட்டதால்
மௌனத்தின் தேடலில் மாட்டிக்கொண்டீர்கள்
வெள்ளத்தை விட்டே துள்ளிக்குதித்து
மெள்ளக் கரையேறிப் பள்ளிப் பைகளையும்
பாடநூல்களையும் பக்குவமாக வைத்துப்
பெற்றோர் மனம் மகிழ பெருமையுடன் நடந்திடுவீர்!

நீர்வை.மயூரகிரி.

### காட்டாற்று பெருவெள்ளம்

அவலவாழ்வுப் படலம்
விட்டதொட்ட குறையாய்
தொடரும் தொடர்கதையாச்சு!
புயல் மழையால் புவனமே கலங்க
பெருவெள்ளம் பாய்ந்தது!
வாழ்ந்த மனை வளர்த்த பிராணிகள்
தேடிய சொத்துக்கள்
பாசமுள்ள உறவுகள் - ஏங்கி
உயிர்துடிக்கும் துயரச் சுமைபோல
கதிகலங்கி நிற்கின்றன
தலையைத் தாண்டி
தலைப்பாகையையும் எடுக்கும்
திக்குமுக்காடச் செய்து
உயிரையும் குடிக்கும்!

இரா.குமரகுரு, பண்டத்தரிப்பு

### உயிரைக் காத்திடுங்கள்!

ம..ணவ மாணவிகளே!
கும்பகோணத்தில் - அன்று
அக்கினி உங்களை
ஆக்கிரமிப்புச் செய்தது!
இந்தோனேசியாவில்
பஸ் விபத்து உங்களை
பலியெடுத்துப் போனது!
இன்று உங்களை
வெள்ளம் மூழ்கடிக்க
முயற்சிக்கிறது போலும்....
வெள்ளம் பெருகுமுன்னே
சீக்கிரமோடிச் சென்று
உயிரைக் காத்திடுங்கள்.


பாலமுனை வாஹிட்.

# மௌனத்தின் தேடல்கள் - 24

### அங்கும் இங்கும்

எம் திருநாட்டில்
தாகம் தீர்க்கக்கூட
நீரின்றி வரட்சியில்
மாணவர்கள்
அங்கே நீர் வெள்ளமாகியதால்
தடுமாறுகிறார்கள்
மாணவப் பிஞ்சுகள்.

இன்பராஜ்,
மீசாலை.



### கல்விக்கு ஏது கடிவாளம்?

மாடமாளிகைகளும்
கூடகோபுரங்களாய்த் திகழ்ந்திட்ட
பாடசாலைகள் இன்று ~ பகைவன்
ஷெல்லடிகளின் சிதறல்களால்
சிதைபட்டுப் போனது மண்ணோடு
பள்ளியறைதனில் புள்ளிமயிலென
துள்ளித் திரிந்த மழலைகள்
இருந்து படிக்க இடமின்றி
அலைவது எதற்காக...?
உடைந்த கல்மேட்டிலும் எம்
கல்வி தொடர்ந்திடும் என
உணர்ந்திடவா....?

பா.செல்வராணி, சங்கானை.

### மாறாத வடுக்கள்...!

கற்ற கல்வியைக் கைவிட்டு
கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு
கனத்த மனச் சுமைகளோடு
இரவோடிரவாக ஊரோடு
ஒத்தோடிய அன்றைய நாட்களும்...
வானத்தில் வட்டமிட்டு
எம் கல்விக்கூடங்களை அழித்த
வல்லூறுகளின் அக்கிரமங்களும்...
என்றுமே எம் வாழ்வில்
மாறாத வடுக்களாகும்.

எஸ்.வீ.ரூபன்,
மருதங்கேணி.

### நெருப்பாற்றிலும் நீந்தத் தயார்!

கல்வியிலே கரைகாணவேணும்
என்பதற்காய் புத்தகப்பையுடன்
வெள்ளத்துள் நீந்தும்
சிறார்களே!
தமிழர்களின் பெருஞ்சொத்து
கல்விதான்
அதனைப் பெற்றிட
இந்தக் காட்டாற்று வெள்ளமென்ன
நெருப்பாற்றிலும்
நீந்தத் துணிந்திடுங்கள்!

S.துவாரகா,
திருநெல்வேலி.

### இலட்சியத்தை நோக்கி...

காலத்தின் கோலத்தால்
அகதியானோம்
இயற்கையின் சீற்றத்தால்
இந்த வெள்ளத்துள் நீந்துகிறோம்
ஆனாலும்......
எம் இலட்சியத்தை
அடையத் தவறமாட்டோம்!
அதனால்தான்.....
எம் தோள்கள்
புத்தகப்பைகளைச் சுமக்கின்றன.

வாணி,
வேலணை.

### பயணம்

மனிதனுக்குத்தான்
பொறுக்க முடிவதில்லை
மனிதம் அறிவு பெறுவதை!
இயற்கைக்குமா
பொறுக்க முடியவில்லை....?
தூங்காது துடிப்புடனே
நீண்ட எதிர்காலப் பயணத்திற்காய்
தண்ணீருள் பயணிக்கிறார்கள்.

R.கஜனி, நல்லூர்.

### துணிந்து நில்லுங்கள்!

வெள்ளத்தில் விளையாடும்
வெள்ளை உள்ளங்களே!
விதிவசத்தாலும்
போரின் தாக்கத்தினாலும்
கல்விக்கூடம் அழிந்து
மரநிழலில் கல்வி கற்கும் நிலை
ஏற்பட்டாலும்...
எத்தனை இடையூறு நேரிடினும்
கண்போன்ற கல்வியைக் கற்று
கடமை வீரர்களாக
நாளைய தலைவர்களாக
தலைநிமிர்ந்து வாழுங்கள்!
எதிர்காலம் உங்கள் கையில்
என்பதை மறந்துவிடாதீர்கள்!
துணிந்து நில்லுங்கள்!
தோல்வி கிடையாது!

கந்த.ஞானமுத்து, கைதடி.

### கற்றபின் கலக்கம்

வெள்ளத்தில் கல்லெறிந்து
விளையாட வேண்டாம் - என்று
கற்றுவிட்டு வந்த உண்மையை - உணர்த்த
கதிகலங்க வைத்தாளோ
இயற்கை அன்னையவள்!


சோபிகா.

### வாழ்க்கைக்கும் வேண்டும் எதிர்நீச்சல்!

இடுப்பளவு வெள்ளம்
இன்னுமுயரலாம் என்ற ஏக்கம்!
இயற்கையனர்த்தமும்
ஈழத்தமிழரை வதைத்தால்
இடப்பெயர்வுகள் தொடர்கதைதான்!
வெள்ளத்தில் எதிரேறுவது போல
வாழ்க்கைக்கும் வேண்டும்
எதிர்நீச்சல்!

மாருதி,
ஆவரங்கால்.

### மௌனத்தின் தேடல்கள் - 26



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை *மிகச் சிறிய* கவிதைகளாக்கித் *தபால் அட்டையில்* சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

*கிடைக்கவேண்டிய இறுதித்திகதி* - 04.09.2004

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 26

சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

### வெடிபொருள் கவனம்!

பள்ளிப் பிஞ்சுகளே!
வெள்ளத்தை வெறித்து
அங்கே வருவது
என்னவென்று பார்க்கிறீர்களா?
அது உங்களை
ஊனமாக்கும் வெடிபொருள்
பார்சலாக இருக்கலாம் கவனம்!

வா.கஜிதா, மருதங்கேணி.

### இயற்கையே நீயுமா?


இனவாதிகள் கூச்சலிட
இன்னல்கள் மலிந்த எம் மண்ணில்
வாழ இடமற்று
அகதிகளாய் அலைந்து
மரத்தின் கீழ் வாழ்வதை
இயற்கையே நீயுமா விரும்பவில்லை?

திருமதி. செ. பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை.

### வெற்றிகொள்ள...

வெள்ளத்துள் விரைந்து செல்லும்
பள்ளிச் சிறார்களே!
இன்றே எதிர்நீச்சலிடக்
கற்றுக்கொள்ளுங்கள்!
ஏனெனில்...
நாளை வாழ்க்கைப் பாதையில்
இதுபோல் தடைகள் வரும் ஏராளம்!
அவற்றைக் கடந்து வெற்றிகொள்ள
இவை அனுபவப் பாடம்தான்!

S.வதனா, கொக்குவில்.



# வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்

## திரை விமர்சனம்

கமல் எப்போதும் தன் மனநிறைவுக்காக ஒரு சீரியஸ் படம், பண நிறைவுக்காக ஒரு கமர்ஷியல் படம் என மாறி மாறிக் கலக்குவார். அதேவகையில் 'விருமாண்டி'க்குப பின் 'வசூல்ராஜா M.B.B.S'. இது முற்றிலும் ஒரு புதிய கூட்டணி. கமல் முதல்முறையாக சரண், பரத்வாஜ, சிநேகாவுடன் இணைகிறார். நெடுநாளைக்குப் பின் கிரேஸி மோகன் மற்றும் பிரபுவுடன் கைகோர்க்கிறார்.

வராத கடன்களை வசூலித்துத் தரும் ரௌடியாக நடித்திருக்கிறார் கமல். அவரது அடியாள் பிரபு. பட்டணத்தில் மகன் டாக்டராக இருக்கிறான் என நினைத்துக்கொண்டிருக்கீறார் கமலின் தந்தை நாகேஷ். மகனைப் பார்க்க சென்னைக்கு மனைவியுடன் வருகிறார். நாகேஷ் வருவதை அறிந்து ரௌடிகள் கூடாரத்தை ஆஸ்பத்திரியாக மாற்றுகிறார் கமல். மகன் டாக்டர் என்பதால் டாக்டராக இருக்கும் சிநேகாவையே அவருக்குத் திருமணம் செய்துவைக்க முடிவுசெய்கிறார் நாகேஷ். கமல் டாக்டரல்ல ரௌடி என்பதை நாகேஷிடம் நிரூபிக்கிறார் சிநேகாவின் தந்தை பிரகாஷ்ராஜ். மனமுடைந்துபோகும் நாகேஷ் ஏமாற்றத்துடன் அழுதுகொண்டே ஊர் திரும்புகிறார்.



இதனால் தான் நிஜமாகவே டாக்டராக வேண்டும் என முடிவுசெய்கிறார் கமல். கிரேஸி மோகனின் உதவியுடன் தில்லு முல்லு செய்து, தேர்வில் தேர்ச்சி பெற்றார் கமல். எம்.பி.பி.எஸ் படிக்க கல்லூரிக்கு வருகிறார். பிரகாஷ்ராஜ்தான் அந்தக் கல்லூரி முதல்வர். கமல் டாக்டர் ஆனாரா? அல்லது தில்லு முல்லு செய்ததால் அகப்பட்டாரா? என்பதற்கு விடை தருகிறது படம். படத்தின் பலம் கமல்தான். ஆனால் இந்த கரக்டருக்கு கமல் உடலைக் குறைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஜெயசூர்யா இறக்கும்போது கொஞ்சம் அதிகமாகவே உணர்ச்சிவசப்படுகிறார் கமல்.

படம் முழுவதும் புன்னகைத்துக்கொண்டே இருக்கிறார் சிநேகா. கிளைமாக்ஸில் மட்டும் நடித்திருக்கிறார். பிரபு ஓ.கே ரகம். ஓரிரு காட்சிகளுக்கு வந்துபோகிறார் மாளவிகா.

வில்லத்தனமும், நகைச்சுவையும் கலந்த சரியான வேடம் பிரகாஷ்ராஜுக்கு. நன்றாகச் செய்திருக்கிறார். ஆனால் 'முன்னாபாயி'ல் புமன் இரானியிடம் இருந்த ஏதோ ஒன்று ராஜிடம் மிஸ்ஸிங். ஹிந்தியில் கேர்மாவால் பாதிக்கப்பட்டவராக நடித்த எதினை இதிலும் அதேபோல் நடிக்கவைத்திருப்பது கரெக்ட் சொய்ஸ்.

படத்தில் கிரேஸி மோகனின் பங்கு பாராட்டத்தக்கது. கிரேஸியின் காமெடி லொஜிக் முதல் பாதி வரை ஓர்க்கவுட் ஆகிறது. அடுத்த பாதியில் படத்தில் தொய்வு ஏற்படுகிறது. இயக்குநர் சரண் கவனித்திருக்கலாம்.

பரத்வாஜின் இசையில் வரும் பாடல்கள் ஏற்கெனவே கேட்ட மெட்டுகள்தான். கொஞ்சம் மாற்றியிருக்கிறார். 'காடு திறந்தே கிடக்கின்றது' பாடலில் சாதனா சர்கமின் குரலில் இனிமை அதிகம். ரீமேக் படம் என்பதால் திரைக்கதையிலும் சரணின் பெயரைப் போடாததைப் பாராட்டலாம்.

'வசூல்ராஜா' வசூலை அள்ளுவாராக...!

# சிந்து மறுத்த காரணம்

இனிமையானவர், துடிப்பானவர் என்றெல்லாம் சிந்து துலானிக்குப் பெயர் இருக்கிறது. முன்னணி ஹீரோயினாக வேண்டும் என்கிற இலட்சியம் உள்ளுக்குள். ஆனாலும் அதற்காக எதையும் செய்வேன் என்கிற பொலிஸி எல்லாம் அவரிடம் கிடையாது. சமீபத்தில் விரல் வித்தை நடிகருக்கு ஜோடியாக ஒரு வாய்ப்பு வந்தது. ஏனோ சிந்து மறுத்துவிட்டாராம். காரணத்தை அவரிடம்தான் கேட்கவேண்டும்.



# ரவிராகுல் - ஜோதி நடிக்கும் 'கிட்டு'

கதாநாயகனை ரௌடியாகவும், பொறுக்கியாகவும் சித்தரித்துக்காட்டுவது லேட்டஸ்ட் ட்ரெண்ட். லேட்டஸ்ட் ரௌடிக் கதாநாயகன் ரவிராகுல்.

அன்பாலயா பிரபாகரன் தயாரித்த கஸ்தூரி ராஜா இயக்கிய 'ஆத்தா உன் கோயிலிலே' படத்தில் அறிமுகமாகி - பின்னர் 'மிட்டா மிராசு' உட்பட பத்துப் படங்களில் நடித்தவர். கதாநாயகி பெயர் ஜோதி. கன்னடத்திலிருந்து மற்றொரு கிளி.

மற்றும் நாசர், பொன்னம்பலம், கோவை சரளா நடிக்கிறார்கள். கதை, திரைக்கதை வசனமெழுதி டைரக்ட் செய்பவர் ஜி. அமரன். இயக்குநர் பவித்ரனிடம் உதவியாளராகப் பணியாற்றியவராம்.

பத்தாண்டுகளுக்கு முன்பு சேலம் மாவட்டத்தில் ரௌடி ஒருவனின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மையமாகக் கொண்டதாம் 'கிட்டு'.

ஸ்டில்லில் கையில் துப்பாக்கியுடன் காட்சியளிக்கும் ரவிராகுலை பார்த்தால் ரௌடி மட்டுமல்ல - ரொமான்ஸிலும் கில்லாடி என்று தெரிகிறது.

அவருடைய சொக்காயைப் பிடித்துள்ள ஜோதி சொகுசாக அமர்ந்துள்ள தோரணையைப் பார்க்கும்போது அவரும் ஒரு ரௌடிதான் என்று தாராளமாகச் சொல்லலாமே! ஜோதியைப் பார்க்கும்போது அவரும் தாராளமானவர்தான் என்பது புரிகிறதல்லவா!



கேட்டால், இளம் கதாநாயகர்கள் அனைவ... பிடிக்காதா என்றால் அவர் டைரக்டர் என்...

'மேரி ஆல்பர்ட்' என்ற டப்... நெப்போலியன், நேரடி தமிழ்ப் படத்... நாயகனாக வைத்துத் தயாரிக்கும்... முறையாக இ...

# காத்தி...

ஐ.ஜே.கிரியேசன்ஸ்... 'காத்திருப்பபேன்'. இதில்... முகமாகிறார். கதாநாயகியா... கரான அருள் இந்தப் பட... ஜி. அருள் தயாரிக்கும் 'க... கதை, வசனம் எழுதி இ...

# ந...

தி...செ... நிறுவனம், 'நிறம்' என்... சியத்தைக் கொண்ட... மாறுபட்டு இருக்கிற... த்தை அடைந்தார்க... படத்தில்... ஜெயராம் நாய... மணி.சி நடிக்... தி... அதிபர் ஜே...

'நான்... தயாரி... நடிக்கி... நட்சத்... யர்களா... முக்கே... சினிமா...

## சினிமாத் சிதறல்

# தொட்டி ஜெயா

'காக்க காக்க' படத்தைத் தயாரித்த கலைப்புலி எஸ். தாணு, அடுத்து வி கிரியேசன்ஸ் சார்பில் ஒரு பிரமாண்டமான படத்தைத் தயாரிக்கிறார். இந்தப் படத்துக்கு 'தொட்டி ஜெயா' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது.


இதில் சிலம்பரசன் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக கோபிகா நடிக்கிறார். சிலம்பரசன் இதுவரை நடித்திராத முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் தோன்றுகிறார். இதற்காக அவர் தாடி வளர்த்து வருகிறார். மற்றும் முன்னணி நடிகர், நடிகைகளும் பங்குபெறுகிறார்கள். காதல், வீரம், பாச உணர்வு மிகுந்த கதை இது. கதைச் சம்பவங்கள் முழுவதும் ஓடும் ரெயிலில் நடைபெறுகின்றன.

கதை சென்னையில் தொடங்கி காஷ்மீர், கன்னியாகுமரி போய், மறுபடியும் சென்னையில் நிறைவுபெறும். 'முகவரி' படத்தை இயக்கிய துரை இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். இசையமைக்கிறார் யுவன் சங்கர் ராஜா.

தயாரிப்பாளர் காஜாமைதன் 'குஸ்தி' படத்தில் டாக்டராக வந்து காமெடி செய்கிறார். இயக்குநர்கள் நகைச்சுவை நடிகர்களாகப் பவனி வரும்போது ஒரு தயாரிப்பாளர் முதன்முறையாக நகைச்சுவை நடிகர் ஆகிறார்.

'மகாநடிகன்' திரைப்படத்தில் ஆட்டோகிராப் மல்லிகாவுக்கு கலெக்டராக இருந்து முதல்வராகும் கரக்டராம்.






# ஆடி அடைஞ்சாச...

அந்தக் கால் அழகி ந... ஒருவழியாக மும்பையில் செட்டிலாகிவிட்டார்... தப் படம் தயாரித்தவகையில் நடிகைக்கு... ரூபாய் (பெரியது) வரை கடனிருக்கிறது. பட... ப்புகள் ஏதும் அமையாதநிலையில் கடன்... த்த பிரமுகர் ஒருவர் நடத்திவரும் ஒலிநாடா... வனத்தோடு கான்ட்ராக்ட் போட்டுள்ளார்... தொகை தீரும்வரையில் அந்த நிறவனம் தய... கும் ஆல்பங்களில் மட்டும் நடிகை ஆடிப்... வாராம். ஆடி அடைஞ்சாச் சரி.

'ஆயுதம்' படத்திற்காக பிரசாந்தும், சிநே...வும் லண்டன், சுவிஸ், பாரீஸ் என்று பற... கொண்டே இருக்கிறார்களாம்.

## ள் ரெடி நீ ரெடியா

எஸ்.கே.பிலிம்ஸ் பட நிறுவனத்தினர்
நீ ரெடியா' என்ற பெயரில் ஒரு படம்
றார்கள்.
இதில் பிரபுதேவா கதாநாயகனாக
. கோவை சரளா மற்றும் முன்னணி
ங்களும் பங்குபெறுகிறார்கள். இரட்டை
ரவி - ராஜா வசனம் எழுதுகிறார்கள்.
க் காதல் கதை இது.

ஆட்டோகிராப் மல்லிகாவிடம் தமிழ்
உங்களுக்குப் பிடித்த நாயகன் யார் என்று
பிடிக்கும் என்கிறார். அப்போ சேரனைப்
ருமாதிரியாகச் சிரிக்கிறாராம்.

படத்தைத் தயாரித்த நடிகர்
தயரிக்க உள்ளார். சூர்யாவை
ந்தப் படத்தில் சிநேகா முதல்
ணகிறார்.

## ருப்பேன்

னும் பட நிறுவனம் தயாரிக்கும் படம்
ழகம் ரிசிகுமார் கதாநாயகனாக அறி
சுஜிதா நடிக்கிறார். மெல்லிசைப் பாட
ல் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.
திருப்பேன்' படத்தின் கதை, திரைக்
தகிறார் எல்.டி.கார்த்திக்.


## றம்

ன தியேட்டர்ஸ் என்னும் புதிய பட
டத்தைத் தயாரிக்கிறது. ஒரே இலட்
ன்று இளைஞர்கள் எண்ணங்களால்
ள். இப்படிப்பட்டவர்கள் இலட்சிய
இல்லையா? என்பது படத்தின் கரு.
முக நாயகன் ராஜூவுடன் காயத்திரி
க நடிக்க, மற்றொரு நாயகனாக
றார்.
னை தியேட்டர்ஸ் சார்பில் தொழில்
தயாரிக்கிறார்.


இப்படிக்கு என் காதல்
சாலை ரவி-தனுஜா

80 அடி உயரத்திலிருந்து

## தலை கீழாகத் தொங்கிய விஜய்




'திருமலை', 'கில்லி' ஆகிய படங்களின் வெற்றியைத் தொடர்ந்து விஜய் நடித்துள்ள புதிய படம் 'மதுர'. மாதேஷ் டைரக்ட் செய்துள்ள படம் இது.

இதில் விஜய்க்கு ஜோடியாக சோனியா அகர்வால், ரக்ஷிதா ஆகிய இருவரும் நடித்திருக்கிறார்கள். மற்றும் தேஜாஸ்ரீ, சீதா, வடிவேல், ராஜ்கபூர், இளவரசு ஆகியோரும் நடித்துள்ளனர்.

இந்தப் படத்துக்காக 2 அதிபயங்கர சண்டைக் காட்சிகள் படமாக்கப்பட்டன. 80அடி உயரமுள்ள 20 இராட்சத கிரேன்கள் சுற்றிலும் நிறுத்தி வைக்கப்பட்டு அத்தனை கிரேன்களையும் முரட்டு இரும்புக் கயிற்றால் கட்டி, அதன்மீது விஜய் தலைகீழாகத் தொங்கிக்கொண்டே வில்லன்களுடன் மோதுவது போல் அந்தச் சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது. இதேபோல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றிலும், மதுரையின் முக்கிய வீதிகளிலும் 4ஆயிரம் துணைநடிகர்களைக் கொண்டு 6 கமராக்கள் உதவியுடன் மக்கள் வெள்ளத்திற்கு நடுவே விஜய் ரவுடிகளைப் புரட்டி எடுக்கும் காட்சி பரபரப்பாகப் படமாக்கப்பட்டது.

மூ மேஜிக் நிறுவனம் சார்பில் ஆர் மாதேஷ் கதை- திரைக்கதை-' தயாரிப்பு- டைரக்ஷன் பொறுப்பேற்றுள்ள இந்தப் படத்துக்கு வித்யாசாகர் இசையமைத்து இருக்கிறார். எஸ். சரவணன் ஒளிப்பதிவு செய்துள்ளார். சண்டைப்பயிற்சி - கனல் கண்ணன். தயாரிப்பு நிர்வாகம்- சம்பத். பரதன் வசனம் எழுதியிருக்கிறார். படம் விரைவில் திரைக்கு வரஇருக்கிறது.


நிறைஞ்ச மனசு
விஜயகாந்த்-சூசன்

## இரண்டு ஹீரோக்கள்

இரண்டு ஹீரோக்களைக் கொண்ட சபஜெக்ட் படங்கள் என்பது ஹிந்தியில் சகஜம். ஆனால தமிழில் அதற்கான சாத்தியங்கள் ரொம்ப ரொம்பக் குறைவு. இதற்குக் காரணம் ஈகோதான்.

இதுபோன்ற பிரச்சினைகளை புறந்தள்ளிவிட்டு தற்போது தமிழில் இரண்டு ஹீரோக்களை வைத்துப் படம், பண்ண முடிவுசெய்துள்ளார் ஏ.எம். ரத்னம்.

அதோடு மட்டுமல்ல படத்தில் நடிக்க இரண்டு இளம் ஹீரோக்களையும் ஒப்பந்தம் செய்துளளார்.

அந்த இருவர் யார் என்பது அனைவரின் கேளவியாக இருக்குமே?


இந்தப் படத்தில் நடிக்க சம்மதித்துள்ள இருவர் பிரசாந், ஸ்ரீகாந்த்.

## திருப்பாச்சி

'திருப்பாச்சி' படத்தில் விஜயின் பெயர் சிவகிரி. விவசாயி மகனாக நடிக்கிறார். விஜய்க்கு நாயகி த்ரிஷா. ஆட்டோக்கிராப். மல்லிகாவும் நடிக்கிறார். ஆட்டோகிராப் பெஞ்சமின் நகைச்சுவை நாயனாக வலம்வருகிறார். திருப்பாச்சியின் 6 பாடல்களையும் இயக்குநர் பேரரசு எழுதியுள்ளார். தினா இசையமைத்துள்ளார். பசுபதியும், கோட்டா சீனிவாசராவும் வில்லன்கள். பொங்கலன்று திரைக்கு வருகிறது.


'போஸ்'
ஸ்ரீகாந்த், சிநேகா

## 'சித்தன்' விக்ரம் பற்றி



'பிதாமகன்' படத்துக்காக சிறந்த நடிகருக்கான தேசியவிருதை குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் கரங்களால் பெறப்போகிறார் விக்ரம்.

'பிதாமகன்' மூலம் தேசிய அளவிலான புகழ் கிடைத்திருப்பதை அவர் எப்படி உணர்கிறார்? இந்தப் புகழுக்காக அவர் சந்தித்த

## 'சீயான்' விக்ரம்

சோதனைகள் எத்தனை? இப்போதைய வெற்றியால் அவர் திருப்தி அடைந்திருக்கிறாரா?

இந்தக் கேள்விகளுக்கு விடைதருவதுடன் தன்னைப் பற்றி முழுமையாகக் கூறுகிறார் விக்ரம்.


'எட்டாவது படிக்கும்போதே நடிக்கவேண்டும் என்ற வெறி இருந்தது. சரியாகப் படிக்கமாட்டேன்.

பள்ளி மேடை நாடகங்களில் நடிப்பேன். பின் லயோலா தியேட்டர் சொஸைட்டியில் சேர்ந்து மேடை நாடகங்கள் செய்தேன். நாடகங்கள் மூலமாக விளம்பரங்களில் நடிக்க ஆரம்பித்தேன். சோடா, டீ விளம்பரங்களில் எல்லாம் நீங்கள் என்னைப் பார்த்திருப்பீர்கள்.

1989இல் சினிமா வாய்ப்புக் கிடைத்தது. 'என் காதல் கண்மணி' என்ற படம். ஆனால் ஸ்ரீதரின் இயக்கத்தில் நடித்த 'தந்துவிட்டேன் என்னை' படம்தான் முதலில் வெளியானது.

அதன்பின் தெலுங்கு, மலையாளப் படங்களில் வாயப்புக் கிடைத்தது. தமிழில் மட்டும் சாதிக்கவேண்டும் என்பதற்காக வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தேன். அப்போதுதான் 'சேது' வாய்ப்புக் கிடைத்தது.

இரண்டு ஆண்டுகள் அந்தப் படத்தை நம்பியே இருந்தேன். வேறு எந்தப் படத்திலும் நடிக்கவில்லை. அந்தப் படம் முடிந்துவிட்டது. ஆனால் பெட்டிக்குள்ளே கிடந்தது. யாரும் வாங்க முன்வரவில்லை. அப்போதுதான் 'சிறகுகள்' என்ற ரெலிபிலிம் செய்தேன். சண் டீவியில் ஒளிபரப்பானது.



அதன்பின் ஏகப்பட்ட சீரியல்களுக்கு வாய்ப்பு வந்தது. எதையும் ஒத்துக்கொள்ளவில்லை. காரணம் நான் சம்பாதித்தே தீர வேண்டும் என்ற சுமை இல்லை. பொருளாதார அளவில் எனது குடும்பம் நல்ல நிலையில் இருந்தது. எனவே சினிமாவில்தான் ஜெயிக்கவேண்டும் என நினைத்திருந்தேன்.

பிரச்சினைகளுக்கிடையே 'சேது' வெளியானது. எனக்கு பிரேக் கிடைத்தது. அதுவரை எனது திறமை வெளியே தெரியாமல் இருந்ததை நினைத்து நான் வருத்தப்பட்டதுண்டு. ஒரு விபத்திலும் நான் சிக்கினேன். இப்போது தேசியவிருது கிடைத்திருக்கிறது.

அதேசமயம் எனது படங்கள் ரீமேக் செய்யப்படும்போது கொஞ்சம் வருத்தப்படுவேன். டப்பிங் செய்தால் நமது நடிப்பு மற்ற மாநிலங்களுக்கும் தெரியும் இல்லியா.

தேசியவிருது வாங்கியாச்சு. அடுத்த இலக்கு என்ன?

இப்படியே நடித்துக்கொண்டிருக்க வேண்டும். கண்டிப்பாக ஒருநாள் இயக்குநராவேன். ஆனால் இப்போது இல்லை. காலம் வரும்போது வேறொருவரை வைத்து நான் படம் இயக்குவேன்.

விருது கிடைத்ததை எப்படிக் கொண்டாடப் போகிறீர்கள்?

வீட்டிலும் எல்லோரும் வாழ்த்தினார்கள். அமெரிக்காவிலிருந்து நண்பனும் போன் செய்தான். சக நடிக, நடிகைகளும் வாழ்த்தினார்கள். மிகவும் சந்தோஷமடைந்தேன். அவ்வளவுதான். அதை மறந்துவிட்டேன். தொடர்ந்து என் பணியில் கவனம் செலுத்தி வருகிறேன்.

'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' பட நாயகி அபர்ணா, 'பயோடேட்டா', 'அன்பிற்கினிய' என்ற 2 படங்களில் நடிக்கிறார்.

# கவிதைக் கலசம்

## வருவது சுதந்திரம்!

வந்து நின்ற சமாதானம்
இடையே பறந்து விட்டதனால்
கலங்கி நீ நிற்கின்றாய்!
ஆனாலும்...
கட்டியம் கூறுகின்றது
மாவீரர் கல்லறைகள்!
போவது சமாதானம்தான்
வருவது...
சுதந்திரமல்லவா...!

ரகுபாரதி, கம்பர்மலை.

## மீண்டும் ஊர்போக

*வாயிருந்தும் ஊமையாய்
உணர்விருந்தும் வெறும் கட்டையாய்
ஊர் இருந்தும் அகதியாய்
உறவிருந்தும் அனாதையாய்
நாலு சுவருக்குள் நாட்களை
எண்ணிக்கொண்டு நகருது வாழ்க்கை!
கழிந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும்
இறந்துகொண்டிருக்கிறது எம் எதிர்காலம்!
இலை உதிர்வதுபோல்
உதிர்ந்துகொண்டிருக்கிறது வாலிபம்
போர் மேகங்களின் கருக்கட்டல் -எம்
ஊர்களில் பிரசவித்ததால் - நாம்
அகதியானோம் நிம்மதியிழந்தோம்!
இரத்த வெள்ளம் அடித்துப்போகிறது
எஞ்சிய உறவுகளையும்....
இந்தச் சமாதான சமிக்ஞையிலும்
பசிகிடந்த கழுகுகள் எமைத்
தின்னத் துடிக்கின்றன!
நாம் அகதியாகி அல்லலுறும்வேளை
அரவணைத்த நீண்ட கரங்களை நினைத்து
நன்றிப் பெருக்கோடு மீண்டும் எம்
ஊர்போகக் காத்திருக்கிறோம்.*

*M.சந்திரகலா, யோகபுரம்.,*

## ஏமாளி

மழை வருமென நினைத்து
மேகத்தை அண்ணாந்தேன்
அந்தோ! சூரியன் - என்னை
நெருப்பாய்ச் சுட்டது!

தென்றல் வருமென நினைத்து
ஜன்னல்களைத் திறந்தேன்
அந்தோ! புயல் - என்னை
அடித்துப் போட்டது!

காதல் சொல்வாளென நினைத்து
அவளை நோக்கினேன்
அந்தோ! அவள் மௌனம் -என்னைக்
கொன்று தின்றது...!

வித்யாசங்கர்,
மாதகல்.

## முயற்சி செய்வோம்!



நண்பா!
கவலை துற
நம்பிக்கையோடு
நிமிர்ந்து நட!
புரட்சியின்றி
புதுமையில்லை!
நிலத்தோடு போர்
நிகழாவிட்டால்
விதைகளுக்கும்
விலாசமில்லை!
வாழ்வின் கைகளில்
என்ன இருக்கிறது
வசதியாய் நாம்
வாங்கிக்கொள்ள....?
போராடித்தான்
எதையும்
பெற்றாக வேண்டும்
முயற்சி செய்வோம்!
மனங்களில்
நம்பிக்கை விதைகளை
நடுகை செய்வோம்!
முளைகள் தாம் நம்
வெற்றியின் முகவரி!

S.வவா, விசுவமடு.

## நாளைய தீர்ப்புக்காய்....

பழிவாங்கப்பட்ட
பட்டதார்ரிகள்
கூட்டத்தைப் பார்!
மொழித் துவசம்
மொட்டையடிக்கப்பட்டு
தலைசீவும்
பாட்டைப் பார்!
தொப்பியும் கொப்பியும்
கோட்டும் பட்டமும்
வேலை தந்ததா...?
தேர்தல் பண்டிகையில்
தலைகாட்டும் ஆமைகள்,
சிறைப்பட்டுப் போவதால்
குறையோடு வாழும்
படித்த கூட்டம்!
பட்டதாரி என்றால்
பரதேசி எனும் நிலை
இந்தியாவிலிருந்து
ஈழத்திற்கும் தொற்றிவிட்டது!
துரதிஷ்டவசமான
ஆர்ப்பாட்டங்களும்
முற்றிவிட்டது!
முடிவுகள் பிழைக்காமல்
விடிவுகள் கிடைக்கட்டும்!
உலைப் பானைகள் பல
அடகுவைத்து
நிலைபெற்ற கல்விக்கு
தொலை சொல்லி
வைக்காதீர் ஆப்பு
மூப்படிப்படையில்
தீர்ப்புத் தொடரட்டும்!

தமிழ் உதயம்,
கொழும்புத்துறை.

## சிறைக் கைதி

நிரபராதிகள்
தண்டிக்கப்படும் நியாயங்கள்
நம் தேசத்தில் மட்டும்தான்
வாலிபத்தை விழுங்கிவிடுவது
சிறைக்கம்பிகள்
நிச்சயமற்ற இரவுகள்
முரட்டுக் கரங்களின் இறுக்கங்கள்
மூச்சை நிறுத்திவிடலாம்
இமைகள் திறக்காமலே விடியல்
உதயமாகலாம்



உறவுகளின் மரணங்கள்
உணரப்படாத பொழுதுகள்...
கம்பிகளிற்குப் பின்னால்
விடுதலையை விழிகள் தேடும்
கைதி எனும் முகமூடிகழற்றி
வெளியேறும் பொழுதுகளில்
முகவரியின் தேடல் தொடரும்...
காக்கிச் சட்டைகளின் பரிச்சயங்களில்
உற்ற முகங்கள் மறந்துபோகலாம்!
வதைப்புக்களின் வக்கிரங்களில்
அங்கங்கள் மட்டுமன்றி புத்தியும்கூட
ஊனமாகலாம்
ஆத்மாவின் ஓலங்கள் வெளியேற வழியின்றி
சிறைக்குள்ளேயே அடங்கிவிடும்
வாலிபத்தின் வாசலில் உள்நுழைந்தவன்
முதுமையின் எல்லையில் வெளியேறக் கூடும்
அன்றி வாழ்வின் எல்லை உள்ளேயே
முடிந்து விடவும் கூடும் - இந்த
நீண்ட இடைவெளியில் மனைவியின்
வயிற்றில் விட்டு வந்த பெண் கரு
பூப்பெய்தி இருக்கலாம்! - அவன்
குழந்தையே குழந்தை பெற்றிருக்கலாம்!
தாய் தந்தை மனைவி மக்கள்
என்புகள் கூட மக்கி மறைந்து போயிருக்கலாம்!
உறவுகள் ஊர் விட்டு ஊர் மாறி
முகவரி தொலைந்து போயிருக்கலாம்!
இறுதியில் உணவிடப்படாத போராட்டங்கள்
அரசியல்வாதிகளுக்கு அனுப்பிவைத்த
மகஜர்கள் - எதுவும் விடுதலையைத் தரவில்லை
சுதந்திரமாய் வந்தணைக்கும் மரணமேனும்
சிறையுடைத்து மீட்க வரட்டும்!

பா.லோகநாயகி, பருத்தித்துறை.

## நிழலாடும் நினைவுகள்

*தெளிந்த வானத்தில்
நிலா மகள் பூத்திருந்து
குளிர்ந்த ஒளி பூமியிலே
கும்மாளமாய் பரப்பி நிற்க
முற்றத்தில் ஓலைப்பாய் விரித்து
உறவோடு உண்டு மகிழ்ந்த
நினைவுகள் மீண்டும் மீட்சி
பெறுகின்றன
உபகதை ஆச்சி சொல்ல
உற்றுக்கேட்டு நாம் மகிழ்ந்த
உண்மை நிகழ்வுகளின்
கலையாத நினைவுகள்
உயர்ந்த தென்னையின்
மெல்லிய இரைச்சலும்
இதயத்தை வருடும்
இதமான வாடைத் தென்றலும்
பசுமைக்கு பன்னீர் தெளித்தன
ஓடியற்கூழ் உறவு கூடி
ஊதிக்குடித்த பசுமையான
காலங்கள் அவை.
இனிமையான ஒளி இரவு தந்த
இதமான வாழ்க்கையின் பதிவுகள்
மீண்டும் எப்போது உயிர்பெறும்...?
தலைமுறை ஒன்று
தணலோடு போகின்றது
தவிக்கிறது மனம் தாங்காது
வேதனையை....*

*ச.அசிஸ்குமார்,
ஊர்காவற்றுறை.*

## தொடர்கதை....?

**அகவை**



முப்பத்தொன்பதையும் தாண்டி
முன்னேறிச் செல்லுமிவ் வேளைக்குள்
பத்துத் தடவைக்கு மேல்
பெண் பார்த்தாயிற்று
பலருக்குப் பிடிக்கவில்லை
சிலருக்குச் சீதனப் பிரச்சினை
அழகு அதிகமில்லையென்று
அங்கலாய்ப்போரின் நடுவினுள்
மேலும் கிடந்து அல்லாடுகிறதென் வாழ்வு.

அன்பரசி, மயிலிட்டி.

## நல்ல நண்பன்

நல்ல மனைவியைத் தேர்ந்தெடுப்பது போலவே நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும் எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும். உன் எதிரியை நீ சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும். ஆனால் நண்பர்களில் நல்ல நண்பனை அனுபவத்தின் மூலமே இனங்காண முடியும்.

ஒருவரை நண்பனாக்கிக் கொள்ளமுன் அவனைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன்பின்தான் அவனுடன் இரகசியங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும். நன்றாக ஆராய்ந்து தெரிந்த பின் நண்பனாக்கிவிட்டால் சந்தேகப்படக்கூடாது. சரி, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு?

யாரோடு நீ பழக ஆரம்பிக்கிறாயோ, அவனோடு இனிமையாகப் பழகு. கொஞ்சக் காலத்திற்கு அதை நீ நட்பாகக் கருதக்கூடாது. வெறும் பழக்கமாகத்தான் இருக்க வேண்டும். உனக்கு கஷ்டம் வந்தபோது அவன் கைகொடுத்தால், உன்னைப்பற்றி நல்ல விதமாக நீ இல்லாத இடத்தில் அவன் பேசுவதைக் கேள்விப்பட்டால், பிறர் உன்னைப் பற்றித் தவறாகப் பேசும்போது அவன் தடுத்துப் பேசியதாக அறிந்தால் அவனை நீ நம்பத் தொடங்கலாம். தொடர்ந்து இதுபோன்ற பல செய்திகளைக் கேள்விப்பட்ட பிறகுதான் அவனை நண்பனாக நீ வரித்துக்கொள்ள வேண்டும். பல இடங்களில் ஒரே மாதிரி ஒருவன் நடிக்க முடியாது. ஆகவே, உன்மீது அவன் வைக்கும் அன்பும் உண்மையாகத்தான் இருக்கமுடியும்.

நட்பு என்பது வெறும் முகஸ்துதி அல்ல. ஆபத்தில் உதவுவது ஒன்றே நட்பு. நீ அழும்போது உண்மையிலேயே அவனுக்கும் அழுகை வருகிறது என்றால் அது நட்பு.

*(கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதத்திலிருந்து...)*

மொழிபெயர்ப்புக் கவிதை

## நச்சுமரம்

-வில்லியம் பிளேக்

கோபம் கொண்டேன் தோழன் மீதில்;
கோபம் சொன்னேன்; குளிர்ந்து தீர்ந்தது;
கோபம் கொண்டேன் தீய பகைவனில்;
கூறினேன் அல்லேன்; வளர்ந்தது கோபம்.

அச்சத்துடனே அதற்கு நீர் வார்த்தேன்;
அல்லும் பகலும் கண்ணீர் ஊற்றினேன்;
எத்தும் சூதும் இயைந்த முறுவலாம்
எறிக்கும் வெயிலை அதற்குப் பாய்ச்சினேன்.

அல்லும் பகலும் வளர்ந்து வளர்ந்தே
அழகிய அப்பிட் பழத்தைத் தந்தென்
இல்லில் இருந்ததை எதிரி கண்டான்;
என்பழம் என்பதும் அறிந்து கொண்டான்.

இருட்டுச் சூழ்ந்ததும் தோட்டத்துள்ளே
எவரும் காணா வகையில் நுழைந்தான்;
மரத்தின் கீழே காலையிற் கிடந்த
மாற்றான் உடலை மகிழ்வுடன் கண்டேன்.

ஒருவரம் ~ முருகையன்.

## வாசகர் ♥ நாதம்

எல்லோரது பாராட்டையும் பெற்றுகொண்டிருக்கும் சங்குநாதமே!

உன் வரவால் மனநிறைவு கண்டவர்கள் பல்லாயிரம் பேர். அதில் நானும் ஒருவர். உன்னை ஏற்கனவே மனம் குளிரப் பார்ராட்டியிருக்கிறேன். நீ விடும் தவறினால் மீண்டும் என்னை எழுதவைக்கிறாய். ஏன்? 'ஆலடி மாநாடு' தடைப்பட்டுவிட்டது.

கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிதல்லவா? ஆலடி மாநாட்டில் கூடியிருப்பவர்களின் சம்பாஷனை மூலம் எட்டுத் திக்கும் நடக்கும் சம்பவங்களை வீட்டிலிருந்தபடியே அறிந்து கொள்ள முடிகிறது. ஆலடி மாநாடு தொடரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

இதைவிட இடம்பெயர்வை கவிதைக் கலசத்தில் நினைவூட்டும் வாசகர்களுக்கு நன்றிகள் பல. 'மௌனத்தின் தேடலை' தொகுத்து வருட இறுதியில் நூல் வடிவில் வெளியிட்டால் போற்றுதற்குரிய விடயத்திலும் பார்க்க பேணிப் பாதுகாக்கக்கூடிய ஒரு நூலாகிவிடும். மௌனத்தின் தேடலில் ஒவ்வொருவரின் கண்ணோட்டமும் உண்மையில் வியப்பில் ஆழ்த்துகிறது. வாழ்க சங்குநாதம்!

கந்தசாமி.சந்திரா.இணுவில்.

**வலம்புரியின் வாரமலராய் வலம்வரும் சங்குநாதமே!
உன் மகத்தான சேவை நன்றே தொடரட்டும்.
சங்குநாதமே! உன்னுள் இடம்பெறும் அனைத்தும்
ஏதோவொரு விதத்தில் தரமானவை.
சிறுவர் அரங்கம் பகுதியில் இடம்பெறும் சகல
விடயங்களும் தரமானவை. அதில் இடம்பெற்ற 'தப்புக்
கணக்கு' என்ற சிறுகதை மிகவும் தரமானது.
விஞ்ஞானப் புதிர் தேட்லை வளர்க்கிறது.
கவிதைப்பகுதி, மௌனத்தின் தேடல் யாவும் சிறப்பானவை.
வாழ்க சங்குநாதம்! வளர்க உன்பணி!**

**T.S.சயந்தன், வட்டுக்கோட்டை.**

அதிகாலைப் பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. ரமணன் தூக்கம் வராமல் புர

# மீண்டும் அம்மா

ண்டு புரண்டு படுத்தான். சற்றுமுன்தான் அவனது நித்திரை கலைந்துபோனது. மறுபடியும் கண்கள் அயர மறுத்தன. கட்டிலில் கிடந்தவாறு கைகளை உயர்த்தி சோம்பல் முறித்துவிட்டு பக்கத்தில் வைத்திருந்த மணிக்கூட்டைப் பார்த்தான். அது நான்கு மணிக்குப் பத்து நிமிடங்கள் இருக்கின்றன எனக் காட்டியது.

'ஓ... ஆறுமணிக்கு எலாம் அடிக்கத் தொடங்கும். அதற்கிடையில் இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் படுக்கலாம்' என நினைத்துக் கொண்டவன் இரட்டைப் போர்வையை காலிலிருந்து தலைவரை இழுத்துவிட்டு கண்களை இறுகமூடி தூக்கத்தை வரவழைக்க முயன்று கொண்டிருந்தான்.

எதிர்பாராத அந்த வேளையில் ரெலிபோன் மணி திடுக்கிட வைத்தது. போர்வையை விலத்திவிட்டு எழுந்து ரெலிபோனை எடுத்தான் ரமணன்.


''நெல்லியடியிலிருந்து கதைக்கிறம். இந்த நம்பருக்கு உடனே கோல் எடுங்கோ!'' என்று மறுமுனை நம்பரைச் சொன்னது.

இலக்கங்களை எழுதும் போதே அவனது மனம் படபடக்கத் தொடங்கிவிட்டது. யாருக்கு என்ன நடந்ததோ? ஏது நடந்தாலும் இம்மாதச் சம்பளத்திற்கும் வேட்டு வந்தாயிற்று என எண்ணிக்கொண்டவன் றிசீவரைத் தூக்கிக்கொண்டு அவர்கள் சொன்ன இலக்க பட்டன்களை அழுத்தினான்.

''சுவிஸிலிருந்து ரமணன் கதைக்கிறன். இந்த நம்பருக்கு இப்போ கோல் எடுக்கச் சொன்னனீங்கள்..'' என்று நினைக்கிறன். அது தான் உம்மோட கதைக்கலாமென்று...'' அவர் இழுத்தார்.

''ஐயா, அம்மாவின்ர உயிர்தான் முக்கியம். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை நான் அனுப்பி வைக்கிறன். அம்மாவைக் குணமாக்கப் பாருங்கோ...'' கெஞ்சினான்.

''நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் இருக்கிறன்...'' என்றவரிடம்



விசாரித்தான்.

''கொஞ்சம் பொறுங்கோ!'' என்ற குரலைத் தொடர்ந்து, ''தம்பி, நான் கந்தசாமி பேசுறன்...''

''எந்தக் கந்தசாமி...''

''அதுதான் உன்ரை வீட்டுக்கு மூண்டு வீடு தள்ளியிருக்கிற சரஸ்வதியின்ரை புருஷன்...''

அவரை ஞாபகப்படுத்திக்கொண்ட ரமணன், ''நீங்களா? என்ன விஷயம்...?'' என்று கேட்டான்.

''உன்ரை அம்மாவுக்குக் கொஞ்சம் சுகமில்லை. ஆஸ்பத்திரியிலை சேர்த்திருக்கிறம்''

''அம்மாவுக்கு என்ன நடந்தது?'' பதறினான் ரமணன்.

''தம்பி பதட்டப்படாமல் கேளும். வயிற்றுக்குள் ஏதோ வருத்தமாம். ஒரு ஒப்பரேஷன் செய்தால் சரிவரும் என்று சொல்லுறாங்கள். கொஞ்சம் காசு செலவாகும்



எக்கவுண்ட் நம்பர், அடையாள அட்டை இலக்கம் இவைகளைக் கேட்டு எழுதிக்கொண்டான் ரமணன்.

'ஒன்றே ஒன்று என்று என்னைப் பொத்திப் பொத்தி வளர்த்தெடுத்த தெய்வமல்லவா அம்மா? அந்த அம்மாவுக்கா இந்தநிலை? கடவுளே! அவவுக்கு ஏதும் நடந்திடக் கூடாது' மனமுருகிப் பிரார்த்தனை பண்ணினான்.

அவனிடம் அன்றைக்குக் கொஞ்சமும் பணம் இருக்கவில்லை. சிநேகிதன் ஒருவனிடம் கடன்வாங்கிய ரமணன் உடனே பணத்தை அனுப்பி வைத்தான். அவனுக்கு எப்பவுமே சமய அனுஷ்டாணங்களில் நம்பிக்கை அதிகம். இரண்டுநாள் விடுமுறையில் ஆலயம் ஒன்றிற்குச் சென்று நேர்த்தி வைத்துவிட்டுக் காத்திருந்தான்.

இரண்டு நாள் கழித்து திரும்பவும் ரெலிபோன் வந்தது. ''தம்பி, நான் கந்தசாமிதான் கதைக்கிறன்...''

''சொல்லுங்கோ ஐயா, அம்மாவுக்கு இப்போ எப்படியிருக்கு...'' ஆர்வம் பொங்க விசாரித்தான்.

''தம்பி, நீர் மனதைக் கல்லாக்கிக் கொள்ளும். அம்மா உன்னை வீட்டுப் போயிற்றா...''

'அ...ம்மா...''கதறினான். ரெலிபோனில் துடித்தான். அவரும் ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்.

தனிமையில் இருந்த ரமணன் தனது உள்ளக்கிடக்கைகளையெல்லாம் ரெலிபோனிலேயே சொல்லி அழுது தீர்த்தான். ஒருநிலையில் ஓய்ந்தவன் சட்டென நினைவுக்கு வந்தவனாக,

''ஐயா, ஈமக்கிரியைகள் எல்லாம் எப்படிப் பண்ணப் போறீங்க...?''

''அதுதான் எனக்கும் தெரியேல்லை தம்பி...''

''என் அம்மாவின் ஈமக் கிரியைகளை ஒரு குறையுமில்லாமல் செய்யுங்கோ. அதற்கான செலவுகளை நான் அனுப்பி வைக்கிறன்'' எனக் கூறிய ரமணன் ஒரு கணிசமான தொகைப் பணத்தை தாயின் இறுதிச்சடங்குகளுக்காக அனுப்பினான்.

அவனுக்குச் சொந்தங்களென்று சுவிஸில் யாருமே கிடையாது. சிநேகிதர்களுடன் சேர்ந்தே தாயின் துக்க நாட்களை அனுஷ்டித்தான். தாயும் மறைந்து மாதமொன்று ஓடிவிட்டிருந்தது. அந்தத் துயர நினைவுகளிலிருந்து மெதுவாக விடுபட்டு வந்தான்.

அன்று அவனுக்கு மனநிலை திருப்தியாக இருக்கவில்லை. வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தான். அப்பொழுது கொழும்பிலிருந்து கோல் என்றார்கள். நடுக்கத்துடன் தொடர்பு கொண்டான்.

''தம்பி, என்ரை ராசா எப்படியப்பு இருக்கிறாய்?'' ரமணன் ஆச்சரியத்தில் உறைந்து போனான்.

''நான் உன்ர அம்மா ராசா. ஏன் பேசாமல் இருக்கிறாய் கோபமா?'' அவனின் அம்மாதான் கதைத்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா... நீ எப்படி..?!''

''எப்படியெண்டால்? இவ்வளவு காலமும் சுகமில்லாமல் இருந்தனான் இப்பதான் கொழும்புக்கு வரமுடிஞ்சுது''

''அந்தக் கந்தசாமி குடும்பம் எப்படியிருக்குது?''

''ஏன் மகன்? அவையள் போன மாசந்தான் பெட்டைக்கு திருமணம் செய்து வைச்சு சந்தோஷமாய் இருக்கினம்''

அப்படியென்றால் அம்மாவின் இறப்பு பணம் பறிக்கும் நாடகமா? என்ன கீழ்த்தரமான மனிதர்கள்? எது எப்படியோ என் அம்மா உயிருடன் இருக்கிறாவே அது போதும் எனக்கு என மகிழ்ந்தவன் தாயுடன் தொடர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தான்.

**வ.சிவாஜி**
கரணவாய்

---

இவ்வார சிறுகதைகள்

அந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் ஊர்ச்சனங்களுக்கு நல்லதொரு அவல் கிடைத்து விட்டது.

# கசவாரம்

''மெய்யே... உண்மையாய்த்தானே... ஆரேன் போய் அவளிட்டை அஞ்சுபத்துக் கேட்டா ஈயமாட்டாள். அவளின்ர மோளே ஓடிப்போனவள்? பேந்தென்ன சீதனக்காசு அவளுக்கு மிச்சம்தானே...''


அவளது மகள் விரும்பியவனுடன் ஓடிப்போய் ஒரு வாரத்துக்கு மேலாகி விட்டது.

ஒருநாள்,

அவளின் உறவினர்கள் அனைவரும் அவள்முன் ஒன்று கூடி சில அறிவுரைகளை எடுத்துரைத்தார்கள்.

''இஞ்சை பாரடி... இப்படி நீ விட்டிட்டு இருக்கிறது நல்லாயில்லை. போய் அதுகளைக் கூட்டிக்கொண்டு வந்து எழுத்தை எழுதி சோத்தையும் குடுப்பிச்சுப் போட்டு விடு...''

''இதென்ன புதிசா ஒரு கூத்து? அதுக்கு எவ்வளவு காசு செலவாகும் தெரியுமே? இப்ப அதொண்டும் வேண்டாம். பிறகு பார்ப்பம்...''



அவளின் பதில் உறவினர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

''எடியேய்! நீ இப்படித் தேடி வைச்சு என்னத்தைக் கண்டனி? பேசிச் செய்யிறதெண்டால் எவ்வளவு செலவு. அதிலை இப்ப காவாசியெண்டாலும் செலவழியன்...''

உறவினர்களின் வற்புறுத்தல் காரணமாக அவள் வேண்டா வெறுப்புடன் அரைகுறை மனதோடு சம்மதித்தாள்.

'கலியாணம்தான் கட்டிக் கிட்டு ஓடிப்போலாமா...? ஓடிப் போய்க் கலியாணந்தான் கட்டிக்கலாமா...?'

வீட்டு விறாந்தையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த வானொலியிலிருந்து பாடல் ஒலிக்க, அருகே அவளது மகளும் மருமகனும் கதிரையொன்றில் அமர்ந்திருந்தார்கள்.

மதியம் உணவு பரிமாறும் நிகழ்வு ஆரம்பமானது. வந்திருந்த உறவினர்கள் வரிசையாக அமர்ந்திருக்க அவர்கள் முன் வாழையிலைகள் போடப்பட்டு பந்தி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மூன்றாவது பந்தியில் ஆட்களை அமர வைத்துவிட்டு வாழையிலைகளை வைத்துக்கொண்டு வந்த அவளின் உறவினர்களில் ஒருத்தி வாழையிலைகள் போதாமையால் நேரே அவளிடம் சென்றாள்.

''இஞ்சைபார், பந்தியிலை போடுறத்துக்கு வாழையிலை காணாது. எல்லாம் முடிஞ்சுது. உடன உன்ர மனிசனைக் கொண்டு வாழைமரங்கள் நிற்கிற வீடுகளுக்குப் போய் கொஞ்சக் காசைக் குடுத்தெண்டாலும் ஒரு இருபத்தைஞ்சு முப்பது இலைகளை வெட்டிக்கொண்டரச் சொல்லு....''

''என்னது பேந்தும் காசுக்கு வாழையிலை வெட்டுறதோ...?'' என்று அதிர்ந்தவள் தன்முன் நின்றவளின் காதில் மெதுவாகக் கூறினாள்.

''பந்தியிலை சாப்பிட்டிட்டு எறிஞ்ச கழிவு இலையள் வீட்டுக் கோடிக்கை போட்டுக் கிடக்குது. நீ போய் ஒருத்தருக்கும் தெரியாமல் அதிலை நல்ல இலையளப் பார்த்துக் கழுவி எடுத்துக்கொண்டு வந்து திரும்பவும் பந்தியிலை வை....''

அவளது பதிலைக் கேட்டு கூட நின்றவள் விக்கித்துப் போனாள்.

''எளிய கசவாரம் பிடிச்சவள்... நப்பி.. கஞ்சப்பிசினாரி... ஈச்சாப்பி... இவளும் ஒரு மனுசியோ'' என தனக்குள் திட்டியபடியே உணவு கூட அருந்தாமல் அந்த இடத்தை விட்டு அகன்றாள் அவளின் உறவுக்காரப் பெண்.

**ஆஞ்சநேயன்**
புதுக்குடியிருப்பு

* * *




## எங்கள் மண்

மண் மண் மண் ~ இது
நாங்கள் பிறந்த மண்!
கண் கண் கண் ~ இது
நாங்கள் காக்கும் கண்!

மண் மண் மண் ~ இது
நாங்கள் தவழ்ந்த மண்!
பொன் பொன் பொன் ~ இது
நாங்கள் விரும்பும் பொன்!

மண் மண் மண் ~ இது
நாங்கள் அழைந்த மண்!
பண் பண் பண் ~ இது
நாங்கள் பாடும் பண்!

மண் மண் மண் ~ இது
நாங்கள் வளரும் மண்!
விண் விண் விண் ~ இது
நாங்கள் வாழும் விண்!

அம்மா பிறந்த மண் ~ இது
அப்பா பிறந்த மண்!
இன்னும் இன்னும் எங்கள்
பின்னோர் வாழப்போகும் மண்!

வ. இராசையா

## ஆயுட் காலங்கள்

| பெயர் | வருடங்கள் |
|---|---|
| ★ வரிக்குதிரை | 22 |
| ★ அணில் | 09 |
| ★ செம்மறி ஆடு | 16 |
| ★ சுண்டெலி | 02 |
| ★ சிம்பன்ஸி | 40-50 |
| ★ பெருங்கரடி | 20 |
| ★ நீர்யானை | 40 |
| ★ கொக்கு | 54 |
| ★ தீக்கோழி | 50 |
| ★ ஆந்தை | 24 |
| ★ மாடப்புறா | 35 |
| ★ வானம்பாடி | 24 |
| ★ சிட்டுக்குருவி | 20 |
| ★ சுறாமீன் | 02 |
| ★ விலாங்கு மீன் | 11 1/2 |
| ★ கடற்சிங்கம் | 06 |

## புதிர்

குறித்த ஒரு இலக்கத்தை அதன் அரைவாசி இலக்கத்தால் பெருக்க வருவதன் கூட்டுத்தொகை அந்த அரைவாசி இலக்கத்திற்கு சமனாகும். அப்படியாயின், அந்தக் குறித்த ஆகக்குறைந்த முழு எண் என்ன?

## பண்டிதர் கற்ற பாடம்

அது ஒரு நதி. அதன் ஒரு கரையில் மெத்தப் படித்த பண்டிதர் வாழ்ந்து வந்தார். கடவுள் பக்தி மிக்கவர். அவரிடம் அந்தச் சுற்றுவட்டாரத்தில் உள்ள படித்தவர்கள் பலர் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வார்கள். நதியின் மறு பக்கத்தில் சீதா எனும் பெண் வசித்துவந்தாள். அவள் ஒரு பால்காரி. பண்டிதருக்கு படகின் மூலம் வந்து தினமும் பாலைக் கொடுத்துவிட்டுச் செல்வாள்.

அன்று படகுக்காரன் சற்றுத் தாம்தமாக வந்தான். எனவே சீதா தாமதமாகப் பாலைக் கொண்டுசென்று பண்டிதரிடம் கொடுத்தாள். பண்டிதர் அவளைக் கோபித்துக் கொண்டார்.

''என்னிடம் எல்லோருமே பயந்து நடக்கிறார்கள். நீ என்னடாவென்றால் எனக்குப் பயப்படவே மாட்டேனென்கிறாயே. இனி சூரிய உதயத்திற்கு முன்னால் நீ பாலைக் கொண்டு வந்து தரணும். என்ன?''

சீதா பயந்துபோய் ''சரி'' என்றாள்.

அடுத்த இரண்டு நாட்களும் படகுக்காரன் தாமதமாய் வந்தான்.

''இந்த உலகத்திலே எவ்வளவோ பேர் கடவுளுடைய நாமமான ஹரியின் பெயரைச் சொல்லி வாழ்க்கை என்கிற கடலை சாதாரணமாகக் கடந்துகொண்டிருக்கிறார்கள். நீ என்னடாவென்றால் ஒரு சின்ன நதியைக் கடந்துவர படகை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாய்''



''சரி சாமி, நாளையிலிருந்து சூரிய உதயத்திற்கு முன்னால் பாலைக் கொண்டு வந்து தந்துவிடுகிறேன்.''

''சரிசரி போ''

அடுத்தநாள் காலை சூரிய உதயத்திற்கு முன்னதாகவே சீதா பாலைக் கொண்டுவந்து பண்டிதரிடம் கொடுத்தாள்.

வெளியே வந்து பாலை வாங்கிக் கொண்ட பண்டிதர் அங்கு படகு ஏதும் இல்லாததைப் பார்த்து துணுக்குற்றார்.

''நீ எப்படி வந்தாய்?''

''ஹரியோட பெயரைச் சொல்லிக் கொண்டு நதிமேலே நடந்தே வந்துவிட்டேன்'' என்றாள்.

''என்ன விளையாடுகிறாயா? நதிமேலே நடந்துவந்தியா?''

''ஆமாங்க உண்மையாத்தான் சொல்கிறேன்''

''எங்கே நடந்துகாட்டு பார்க்கலாம்?''

சீதா, 'ஹரி ஹரி' என்று சொல்லிக்கொண்டே நதியின் மீது நடக்கத் தொடங்கினாள்.

அதைப்பார்த்த பண்டிதர் தானும் அதுபோல நடக்க விரும்பினார். அவர் தனது பட்டுவேட்டியை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டார்.

'பட்டுவேட்டி நனையாமற் பார்த்துக்கொள்ளணும்' என மனதுக்குள் வேட்டியைப் பற்றி நினைத்துக்கொண்டே ஹரி ஹரி என்று சொல்லியபடி நதி நீரின் மேல் ஒரு காலை வைத்தார். மற்றொரு காலைத் தூக்கிவைத்தபோது நதியினுள் விழுந்துவிட்டார்.

''ஐயா பண்டிதரே! நீங்கள் ஹரியை மனசார நினைக்காமல் வேட்டியைப் பற்றியே நினைத்தீர்கள். அதனாலதான் நதிக்குள்ளே விழுந்துவிட்டீர்கள்''

சீதா சொன்னதைக் கேட்ட பண்டிதர் வெட்கித் தலைகுனிந்தார்.

**சிறுவர்களே**
**கதையைப் படித்தீர்களா!**

இறைவன் மீது உண்மையான பயபக்தியுடன் நாம் செயற்பட வேண்டும். ஆனால் நாம் கடவுளின் சீடர்கள் எமக்குள்தான் இறைவன் இருக்கிறான் என்று கர்வம் கொள்ளாது மிகுந்த நம்பிக்கையுடன் யார் எதைச் செய்தாலும் கடவுள் நமக்கு அருள் புரிவார்.

ஆகவே நம்பிக்கைதான் வாழ்க்கை.

## விடுகதைகள்


1. ஆகாயத்தில் காற்றுக்கு ஆடும் அரிவாள். அது என்ன?
2. அந்தி வரும் நேரம் அவளும் வரும் நேரம். அவள் யார்?
3. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது, அது என்ன?
4. ஆளில்லாத வீட்டில் அதிகம் கண்ணில் படும். அது என்ன?
5. தூய்மையில் கறுப்பு, அழுக்கானால் வெள்ளை. அது என்ன?
6. பற்கள் பல இருந்தாலும் கடிக்காத காருண்யம் உள்ளவன். அவன் யார்?
7. வெள்ளை மாளிகைக்கு உள்ளே செல்ல வழியில்லை. அது என்ன?
8. நாலு காலுண்டு, ஆனால் நடக்கத் தெரியாது. அது என்ன?

R. ராதிகா,
வல்வெட்டித்துறை.

## இலங்கைக்கு வழங்கிய வேறு பெயர்களும் வழங்கியவர்களும்

☆ மும்முடிச் சோழ மண்டலம் - சோழர்
☆ சீலோன் - ஆங்கிலேயர்
☆ இரத்தின துவீபம் - இந்தியர்
☆ தம்பண்னி - இந்தியர்
☆ தப்ரபேன் - கிரேக்கர்
☆ செரண்டிப் - அரேபியர்
☆ சிலோன் - ஒல்லாந்தர்
☆ சிஹலதீப் - ஆரியர்
☆ செயிலான் - போர்த்துக்கேயர்
☆ சீலன் - சீனர்
☆ செய்லாலோ - போர்த்துக்கேயர்.

## இவை உங்களின் ஓவியங்கள்



ஜோஜிதா
கிங்ஸ்டன் ச.பாலர் பாடசாலை




இ. உதயபவன்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



அ. சஞ்ஜீவ்
யாழ்/திரிபேக் கல்லூரி

**சிறுவர்களே!**

இந்தத் தேனீக்கள் நடுவிலுள்ள கூட்டுக்குப் போக ஆசைப்படுகின்றன. ஆனால் எல்லாத் தேனீயாலும் கூட்டுக்குப் போகமுடியாது. எந்தத் தேனீயால் கூட்டை அடையமுடியுமெனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



**விடைகள்**

விடுகதைகள்
1. புளியங்காய் 2. நிலா 3. தண்ணீர்
4. தூசு 5. கரும்பலகை 6. சீப்பு
7. முட்டை 8. கதிரை
புதிர் - 10




## வீட்டின் சுத்தம்

ஒரு வீட்டின் சுத்தத்தை வரவேற்பறையைப் பார்த்துவிட்டு எடை போடுவது தவறு. வீட்டின் உள்ளறைகளான சமையலறை மற்றும் கழிவறையின் சுத்தத்தை வைத்து அந்த வீட்டினருடைய சுத்தத்தினை துல்லியமாக எடைபோட வேண்டும் என்று கூறுவார்கள். வீட்டின் அமைப்பு, பாதுகாப்பு, சௌகரியம், அலங்காரம் ஆகிய மற்றவையெல்லாம் பிறகுதான்.



படுத்தி, புதுக்கவர் விரித்து வையுங்கள். ஞாபகமாக தினம் தோறும் சேரும் குப்பைகளை அன்றே தூக்கியெறியுங்கள். சேமித்து வைக்க வேறு எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கும்போது குப்பையை ஏன் சேமிப்பான்.

* குளியலறையில் துண்டுபோட கம்பியிருக்குமே அதைப்போல சமையலறையிலும் ஒன்று பொருத்துங்கள். அடுப்புக்கு, மேடை துடைக்க, கை துடைத்துக்கொள்ள என தனித்தனித் துணிகளை உபயோகியுங்கள். அவற்றை அவ்வப்போது அலசி இந்தக் கம்பியின் மீது உலர்த்துங்கள்.

* முடிந்தவரை தேய்த்த பாத்திரங்களை துணி கொண்டு துடைத்து அடுக்குங்கள். அல்லது அவை

## சமையலறையில் தொடக்கம்

* இருவேள்ளையும் சமயலறையை (சிங் உட்பட) நன்றாகத் துடையுங்கள். தினம் தரையையும், வாரம் ஒருமுறை சமயலறை ஜன்னல்களையும் தவறாமல் சுத்தம் செய்யுங்கள்.

* சமைக்கிற நேரம் போக மற்ற நேரங்களில் சிங்கை ஈரமில்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். கூடுமானவரை பாத்திரங்களை சிங்கில் போட்டு ஊறவைக்க வேண்டாம். முடிந்தவரை பாத்திரங்களை உடனுக்குடன் கழுவி விடுவது நல்லது.

* குப்பைக் கூடையின் விளிம்பு வரை (குப்பை போட ஆரம்பிக்குமுன்பே) ஒரு பிளாஸ்டிக் பையை பரப்பி வையுங்கள். குப்பை சேரசேரச் அதை அப்புறப்

உலர்ந்தவுடன் அடுக்கவும். இரும்புச்சட்டி, தோசைக்கல் ஆகியவற்றை அவசியம் துடைத்துவைக்கவும்.

* எக்காரணம் கொண்டும் விரித்த தலையுடன் சமைக்க வேண்டாம்.

* சோம்பல் படாமல் மாதம் ஒருமுறை சமயலறை விளக்குகளை கழற்றித் துடையுங்கள்.

* ஈக்களின் தொல்லையிலிருந்து சமையலறையைப் பாதுகாக்க கற்பூரத்தையும் உப்பையும் சேர்த்து தண்ணீர் விட்டுக் கசக்கி ஆங்காங்கே தெளியுங்கள்.

* அடுப்புள்ள பகுதிக்கு மேல் அலுமாரியில் பாத்திரங்களை கவிழ்த்து வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் பருப்புவைககள் கொண்ட பிளாஸ்ரிக் சாமான்களை வைக்காதீர்கள். பிசுக்கு அதிகமாகும்.

## சமைத்துச் சுவைப்போம்

### மெது ரொட்டி



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோதுமை மா | - 500g |
| ரவை | - 100g |
| அரிசி மா | - 100g |
| உப்பு | - அளவுக்கு |
| நல்லெண்ணை | - அளவுக்கு |
| தண்ணீர் | - 2கப் |

செய்முறை:-

கோதுமைமா, ரவை, அரிசிமா மூன்றையும் ஒன்றாகக் கலந்து வைக்கவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அத்துடன் உப்பு, ஒரு டீஸ்பூன் நல்லெண்ணெய் விட்டு சூடாக்கவும். நன்றாகக் கொதித்ததும் இறக்கி மாக் கலவையினுள் ஊற்றிக் குழைத்து கட்டிபடாமல் விரைவாகக் கிளறி விடவும். பின் 10 நிமிடங்கள் மூடி வேகவைக்கவும். பின்னர் கை பொறுக்கும் சூடு வந்ததும் சப்பாத்திமாப் போலப் பிசையவும். தேவைப்பட்டால் தண்ணீர் தெளித்துக் குழைக்கவும். குழைத்த மாவை உருண்டைகளாக எடுத்து அரிசிமாவில் புரட்டி மெல்லிய சப்பாத்திகளாகத் தட்டி தோசைக் கல்லில் லேசாக நல்லெண்ணெய் விட்டுச் சுட்டபின் எடுத்துப் பரிமாறலாம்.

# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்

அந்தக்காலத்தில் இருந்து 90 ஆண்டு காலப் பகுதி வரை பெண்ணியம் பற்றிய ஆய்வுநூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன.

ஆண்கள் வேலை செய்பவர்களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதும், படுக்கையைப் பகிர்வதும்தான் என்ற ரீதியில் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது.

ஆனால் இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது. கணிசமான அளவு முன்னேற்றம கண்டுள்ளது. இன்று பெண்கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்கின்றனர். களத்தில் ஆண்களுக்குச் சரிக்குச் சமனாக நின்று எதிரியை எதிர்த்துச் சமராடுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும் வைத்திய நிபுணர்களாகவும், கட்டிடப்பொறியியலாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் வயலில் ஆண்களுடன் சேர்ந்து வேலையைப் பங்குபோட்டுச் செய்கின்றனர்.

உடலமைப்பு ரீதியாகவும் உடற்றொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண் பெண் இருபாலாரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில் ஆண்கள் பெண்களைவிட கூடியவர்களாகவே உள்ளனர்.

மேலும், பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகின்ற உடற்றொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் வருதல், மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை 2ஆம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இக் காரணங்கள் அனைத்தும பெண்களின் பலவீனம் அல்ல. அவை பலம் என்று வாதிடும் காலம் வந்துவிட்டது. இதற்குப் பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன.

ஹெலன் பிஸர் (Hellen Fisher) என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க மனித வர்கவியல் நிபுணர் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பெண் 21ஆம் நூற்றாண்டின் தலைவியாக வருவாளென்று எதிர்வுகூறுகின்றார். மேலும் அவர் தனது ஆய்வு நூலில் உளவியல் ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பலமடங்கு பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் தலைமைப் பதவியை வகிக்கத் தகுதி பெற்றவர்கள் என்றும் கூறுகின்றார். பெண்களின் தலை சிறிதாக இருப்பதனால் மூளையும் ஒப்பீட்டளவில் ஆண்களின் மூளையைவிட சிறிதாக



உள்ளது. ஆனால் மூளையினுள் காணப்படுகின்ற நியூரோன்கள் எனப்படும் நரம்புக்கலங்களின் எண்ணிக்கை பெண்களில் கூடுதலாகவுள்ளது. மேலும் ஆண்களின் குருதியில் ஈமோகுளோபினின் அளவு கூடுதலாகவும் பெண்களின் குருதியில் இமினோகுளோபினின் அளவு கூடுதலாகவும் உள்ளது. இதனைப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் தங்களின் பணியை எதுவித ஓசையுமின்றிச் செய்து முடிப்பதினை வைத்தே கண்டுகொள்ளலாம்.

இவ்வாறு ஆய்வுகளும் பரீட்சாத்த செயற்பாடுகளும் பெண்களின் பலத்தினை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ்வேளையில் பெண்களும் பல பரிணாம வளர்ச்சிகளை தம் செயற்பாடுகளூடாகக் காட்டி வருகின்றனர்.

எனினும் இன்றும்கூட எம்மத்தியில் பெண்களை பலவீனமானவர்களாகவும் இரண்டாம்தர நிலையிலிலுள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டுமாயின் முதலில் பெண்கள் தம் பலத்தினை அறிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்து பெண்களைப் பலவீனமாக எடை போடுகின்றனர் என்று அறிந்து அவை ஏன் பலவீனமான விடயங்களாக கருதப்பட்டு வந்தன என்பதையும் நோக்கவேண்டும். மேலும் இவ்விடயங்கள் யாவும் இன்று பலமானவையாக செயற்படுகின்றன என்ற விஞ்ஞான ரீதியான ஆய்வு உண்மையை அறிந்திருக்க வேண்டும்.

முதலாவதாக மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்றும் ஆணுக்குக் அடிமையானவள் என்றும் சித்தரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஸ்னு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக் கூறப்படும் தெய்வங்கள், மதத் தலைவர்கள், மதபோதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதனமையான தெய்வத்தையும் ஆண்களாகவே படைக்கமுடிந்தது. இதனால் பெண்களின் மனதிலும் நினைவிலும் கருத்தியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நாம் தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைத்திருக்கின்றன. உதாரணமாக பஞ்ச பாண்டவர்கள் திரௌபதியை தம் மனைவியாக கொண்டிருந்தனர். ஆனால் அவளுக்கு அவர்களில் ஒருவரை மட்டும் கணவனாக ஏற்றுக்கொள்ளும் உரிமை கிடையாது.

(தொடரும்)

## பயனுள்ள குறிப்புகள்

* தோசைமா அதிகம் புளித்துவட்டால் கொஞ்சம் தேங்காய்ப்பாலைக் கலந்தால் புளிப்பே தெரியாது.

* கீரையை வேகவைக்கும் போது தண்ணீரில் கொஞ்சம் உப்புக் கலந்து அதன்பின் வேகவைத்தால் கீரையின் நிறமும் மணமும் மாறாது.

* உழுந்து வடை செய்யும் போது அரிசிமாவை கையில் தொட்டுப் பின் வடையைத் தட்டினால் வடை மொறுமொறு வென வரும்.

* கருந்துளசியை நிறையப் பறித்து சுத்தம் செய்து தலையணையின் மேல் பரப்பி, ஒரு வெள்ளைத் துணியால் மூடி அதன்மீது தலையை வைத்துத் தூங்கவும். பேன்களுக்கு துளசி வாசனை அடியோடு பிடிக்காது. அதனால் பேன்கள் சீக்கிரத்தில் கேசத்தை விட்டு இறங்கிவிடும்.

* முகப் பருக்கள் குணமாக சந்தணம், மிளகு, சாதிக்காய் மூன்றையும் அரைத்துப் பருக்கள் மீது போட வேண்டும.

* சர்க்கரை சிலசமயம் நீர்த்துப் போகலாம். பிளாஸ்டிங் பேப்பரை துண்டு துண்டாக வெட்டி சர்க்ரையில் போட்டு காற்றோட்டமான இடத்தில் வைத்தால் சர்க்கரை பழைய படி நன்றாக மாறிவிடும்.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| சந் | இராசி | | சுக் |
| | நிலை | | செவ் சூரி புதன் |
| | | கேது | குரு |

# இவ்வார இராசி பலன்கள்

## (30.08.2004 முதல் 05.09.2004 வரை)

### மேடம் (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இவ்வாரம் தொழில்மேன்மை, இலாபம் அதிகரிக்கும். செய்யும் கருமகாரியங்கள் ஜெயமளிக்கும். களத்திரசுகம், இல்லறநலம் உண்டாகும். உத்தியோகத்தர் செல்வாக்கும், அதிகாரமும் பெறுவர். அதிகாரிகளின் அனுசரணைகள் கிட்டும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் முன்னேற்றமடைவர். பெண்கள் சௌபாக்கியயோகமடைவர். மாணவர்களுக்கு படிப்பில் ஏற்றமுண்டு. ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் உறவு வலுவடையும்.

### இடபம் (கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் இடையிடையே தேகசுகம் பாதிப்பால் உஷ்ணரோகத்திற்கு இடமுண்டு. தேகாபிமானம் இல்லாவிடில் வைத்தியச் செலவேற்படும். உத்தியோகத்தர்க்குக் கணிசமான வேலைப்பழு உண்டு. சிலருக்குத் திருமண சம்பந்தப் பேச்சுக்களில் சுமூகநிலை தோன்றும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், விவசாயிகள் புதிய பயிர்ச்செய்கைகளையும் தொடங்கலாம். மாணவர்கள் ஆசிரியரின் பாராட்டைப் பெறுவர். விளையாட்டு, கல்வித் துறைகளில் சிறந்து விளங்குவர்.

### மிதுனம் (மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்பத்தில் சுகக்குறைவுகள் அவ்வப்போது தோன்றி மறையும். பொருள்வரவு, வெளிநாட்டுப் பணவரவு சுமாராகவே இருக்கும். பிதாவழி உதவியுண்டு. புண்ணிய கர்மங்களில் ஈடுபாடு கிட்டும். அந்நியர், சத்துருத்தொல்லைகள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு, ஒத்துழைப்புகள் கிடைக்கும். வேலைப்பொறுப்புகள் கூடும். விவசாயிகளுக்கு அரசமானியங்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், விடாமுயற்சியும் தேவை.

### கடகம் (புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

இவ்வாரம் குடும்ப அங்கத்தவரிடையே நல்லுறவு வலுப்பெறும். புத்திரர்களால் நற்பெயர் கிட்டும். சுபகாரியங்கள் இடம்பெறும். தனம், பணவருவாய் திருப்திகரமாக அமையும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபத்தைக் கொடுக்கும். விவசாயிகள் சந்தைப்படுத்தலில் கணிசமான இலாபத்தை அடைவர். உத்தியோகத்தர்க்கு உயரதிகாரிகளின் செல்வாக்குக் கிடைக்கும். மாணவர் கல்வியில் உத்வேகமடைவர். ஆசிரியர் - பெற்றோர் - மாணவர் உறவு சுமாராகவே இருக்கும்.

### சிங்கம் (மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்பத்தில் நல்லுறவு திகழும். தனம், பொருள்வரவு நன்றாகவிருக்கும். மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். கணவன் - மனைவி அந்நியோன்யம் கிட்டும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் தொடரும். புதிய முதலீடுகளை அல்லது கூட்டுவியாபாரத்தைத் தொடங்கலாம். விவசாயிகள் புதிய பயிர்ச்செய்கைகளை ஆரம்பிக்கலாம். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். மாணவர் பரீட்சைக்குரிய படிப்பைத் தொடரலாம். நண்பர் சகவாசத்தை மட்டுப்படுத்தல் வேண்டும்.

### கன்னி (உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தில் வாக்குவிரோதம், சச்சரவுகள், கருத்துவேறுபாடுகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்படும். தேகாரோக்கியம் பாதிப்படையும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபத்தை கொடுக்காது. விவசாயிகளுக்குப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக ஒத்துழைப்புகளைப் பெறமுடியாது. உத்தியோகத்தர்க்கு வேலைப்பழுவும், மேலதிகநேர வேலையும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், விடாமுயற்சியும் தேவை.

### துலாம் (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் இல்வாழ்வில் நிம்மதிக் குறைவுண்டு. உஷ்ணரோகம் அல்லது வயிற்று நோய் ஏற்படவிருப்பதால் தேகாபிமானம் அவசியம். குடும்பத்தில் பணப்புழக்கம் சுமாராகவிருக்கும். வெளிநாட்டுப் பணவரவு தடங்கலாகும். உத்தியோகத்தில் வேலைப் பொறுப்புக்களால் உயரதிகாரிகளின் கெடுபிடிகள் தொடரும். வியாபாரம் மந்தநிலையில் இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை. மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் உறவு வலுக்கும்.

### விருச்சிகம் (விசாகம் 4, அனுசம், கேட்டை)

இவ்வாரம் குடும்பத்தில் சந்தோஷ நிகழ்ச்சிகள் ஏற்படும். புத்திரர்களால் மனமகிழ்ச்சி தோன்றும். பெண்களின் எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவுபெறும். வர்த்தகர்களுக்கு புதிய முதலீடுகள் இலாபத்தை ஈட்டிக்கொடுக்கும். விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தாலும், நிதிவசதிகளாலும் மனநிறைவைக் கொடுக்கும். மாணவர் படிப்பில் மேலோங்க நண்பர்களின் சகவாசத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆசிரியர் - மாணவர் உறவு சீராகும்.

**த.சத்தியதாஸன்[சத்யா]**

### தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)

இவ்வாரம தனலாபம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்திபெறும். மாதாசுகம, கல்வி விருத்தியுண்டு. குடும்ப அங்கத்தவரிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு முதலியன தென்படும். இல்லத்தில் சுபகருமக் கொண்டாட்டங்கள நடைபெறலாம். வியாபாரம விறுவிறுப்படையும். புதிய முதலீடுகள், ஒப்பந்தங்கள் நன்மை தரும். விவசாயிகள் அரசமானியங்களின் உதவியுடன் பயிர்ப்பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம். மாணவர் பரீட்சைக்குரிய பாடங்களை மீட்டமுடியும்.

### மகரம் (உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்ப அமைதி குன்றும். புத்திரர்களால் கவலைகள், செலவுகள் ஏற்படும். தேகநலம் பாதிப்படையும். சிலருக்கு உஷ்ணரோகத்திற்கு இடமுண்டாகும். பெண்களுக்கு எதிலும் நிதானம் தேவை. பெண்களுக்கு வாக்குவிரோத சம்பவங்களால் சச்சரவுகள் தோன்றும். வியாபாரம் மந்தநிலையில் இருக்கும். வங்கி நிதி நிலைமைகள் குறைவுறும். விவசாயிகளுக்கு அரசமானியங்கள் உரியநேரத்தில் வந்துசேராது. மாணவர்க்கு கல்வியில் மறதி, விரக்திநிலை முதலியன தோன்றும்.

### கும்பம் (அவிட்டம், 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் களத்திரசுகம், இல்லறநலம், வாகன, மனைவிருத்தி உண்டாகும். குடும்பத்தில் கஷ்டநஷ்டங்கள், பிரச்சினைகள் ஆதவனைக் கண்ட பனிபோல விலகும். தேகம் புதுவீரியம் பெறும். பெரியோர், நண்பர், உறவினர் ஆதரவு கிட்டும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படும். வர்த்தகர்களுக்கு பழைய நிலுவைகள் வந்துசேரும். விவசாயிகளுக்கு புதிய பயிர்ச்செய்கை கைகொடுக்கும். உத்தியோகத்தர், மாணவர் ஏற்றம் காண்பர்.

### மீனம் (பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

இவவாரம் குடும்பத்தில் அமைதி, நிம்மதி குறையும். வாக்குவிரோதங்கள், பிணக்குகள் தோன்றும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். வருமானம் குறையும். பெண்களுக்கு நாவடக்கம் நன்மை தரும். தெய்வவழிபாடு முக்கியம். வியாபாரிகள் முதலீடுகளை கூடியவரை தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களிடையே பிணக்குகள் ஏற்பட வாய்ப்புண்டாகும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் வேலைச்சுமையுண்டு. உத்தியோகத்தர் அதிகாரிகளின் வேலை அழுத்தங்களுக்கு உட்படுவர். மாணவர் படிப்பில் ஏற்றம் காண்பர்.

# எண்கவால்

## உடல் எண் 4 உயிர் எண் 4

4,13,22,31 போன்ற திகதிகளில் பிறந்து இவர்களது திகதி, மாதம் வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் பூரண ராகு ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர். இவர்களுக்குப் பணம் சம்பாதிப்பதைவிட அனுபவ சம்பாத்தியமே அதிகம். பார்ப்பதற்கு உயரமாகவும், இரட்டை நாடியும் கொண்ட இவர்களுக்கு நரம்புசக்தி அதிகம். பெயர் நன்றாக அமைந்துவிட்டால் எல்லா வளங்களும் பெற்று வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் பல்வேறு சோதனைகளால் வடிகட்டப்படுவர்.

உலக விசயங்கள் அனைத்தும் இளமையிலேயே அறிந்திருப்பதால், தன்னுடைய கருத்துக்களை எழுதுவதன் மூலமும் பேசுவதன் மூலமும் துடுக்காக வெளியிடுவர். ஆனால் இவர்களுடைய சிந்தனை மிகத் தெளிவாகவும் பலருக்குப் பயன்படும்படியும் இருக்கும்.

தனக்காக உழைப்பதை விடப் பிறருக்காகவே உழைத்து, மற்றவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவர். தனக்கென்று எந்தக் காரியத்திலும் சிரத்தை எடுத்துக் கொள்ளாததால் இவர் ஒரு முழுநேர பொதுஜன உபகாரி என்றால் மிகையாகாது.

## ஏற்றமிகு வாழ்வு

சிலர் உத்தியோகத்தில் இருந்தாலும் பலருக்கு உதவ முன்வருவர். கடினமான உழைபபாளிகளான இவர்கள் கையில் பணம் உள்ளவரை திட்டம் இல்லாது இருப்பர். ஆனால் பணம் இல்லையென்றால் புதிய திட்டம் உருவாகும்.

இவர்களுக்கு நல்ல நண்பர்கள் இருப்பதால் எந்தச் சூழ்நிலையிலும் நண்பர்கள் இவர்களைக் கைவிடமாட்டார்கள். தான் கண்ட காட்சிகளை மற்றவரிடம் வருணித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். எப்பொழுதும் ஊர் சுற்றியவண்ணமே இருப்பர். இயற்கைக் காட்சிகளையும் மலைப்பிரதேசங்களையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர்.

தான் எழுதுவதாலும், பேசுவதாலும் பலருக்கு உதவுவதாலும், கலையாலும் பெரும் புகழை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்வர். தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்தவர்கள், வீடு, நிலம், வாகனம் போன்ற வசதிகளுடன் சீரும் சிறப்புமாக இருக்கின்றனர். மிகுந்த தைரியசாலியான இவர்கள் உணர்ச்சிவசப்படுபவர்களே. பிறர் கூறுகின்ற கஷ்டங்களுக்கு உடனே தன்னால் முடிந்த நன்மையைச் செய்து தீர்வு காணவேண்டும் என்று முன்வருவர். இவர்களிடம் பலர் ஆலோசனை கேட்டு முன்னேற்றம் அடைவர். இவர்கள் பேச ஆரம்பித்துவிட்டால் முடிவே கிடையாது. கேட்பவர்கள் பிரமிக்கும்படி நல்ல கருத்துக்களை தன்னையறியாமலே கூறுவர். பணம் தேடுவது சிரமமாக இருந்தாலும் நண்பர்களை அதிகம் சம்பாதித்துவிடுவர். வயது ஆக ஆக நல்ல எழுத்

**Dr.ஆர்.ஐ.துரைமுருகா**

தாளராகவும், கவிஞராகவும், பேச்சாளராகவும், இயக்குநராகவும் நாட்டின் முக்கிய பொறுப்பாளராகவும் வாழ்கின்றனர்.

ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் எல்லாத் திறமையிருந்தும் நன்மை பெறாது வாழ்க்கையை வீணாக்குவர். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் வாழ்க்கையின் உச்சநிலையை அடைந்து உலகையே தன்வயமாக்கி விடுவர். சாஸ்திரம், ஜோதிடம், வேதாந்தம், வைத்தியம் போன்றவற்றில் நாட்டம் கொண்ட இவர்கள் மனம் முடிவில் கடவுளைத் தியானிப்பதில் நிலைபெறும்.

**தொழில்:** இவர்களுக்குப் பேச்சாலும், எழுத்தாலும், பேரம் பேசுவதாலும் பணம் ஈட்டும் பாக்கியம் உண்டு. அதோடு கல், இரும்பு, வாகனம், மருந்து போன்ற தொழிலாலும் இலாபத்தைப் பெறுவர்.

**நோய்:** மூட்டு சம்பந்தமான வியாதிகளும், வயிற்றுக் கோளாறும், உஷ்ண சம்பந்தமான வியாதிகளும் வந்து நீங்கும். சலக் கோளாறும் சிலருக்கு வருவதுண்டு.

**பெயர் அமைக்கும் முறை:** பூரண ராகு ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரிய, சுக்கிர ஆதிக்கமான 10,19,37,46,73,15,24,33,42, 51,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை


யோகமான எண் - 1,6
யோகமான திகதிகள் -1,10,19,28;6,15,24
யோகமான மோதிரக்கல் - கோமேதகம், வெளிர் நீலக்கல் (ஆறு நூல் உள்ள கல் மிகச் சிறப்பு)
யோகமான நிறம் - மஞ்சள், வெளிர்நீலம், சந்தனக்கலர்.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு, கோப்பிக்கலர்.
ஆகாத திகதிகள் -8,17,26
குறிப்பு: - ஆனால் 8,17,26 எதிர்பாராத நன்மையளிக்கும்.

(தொடரும்)

# தென்னாபிரிக்க அணிக்கெதிராக முதலாவது டெஸ்ட் தொடர் வெற்றி

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கையணி 1-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

இதற்கு முன்ன் தென்னாபிரிக்க அணியுடன் இலங்கையணி 5 டெஸ்ட் தொடர்களில் மோதியுள்ள போதிலும் தொடரில் வெறறிபெறு



வது என்பது இதுவே முதல் தடவையாகும்.

இவ்வெற்றியின் மூலம் டெஸ்ட் அந்தஸ்துள்ள சகல அணிகளுக்கெதிராகவும் இல

| முதல் டெஸ்ட் தொடர் வெற்றி | | | |
|---|---|---|---|
| ஆண்டு | போட்டி நடந்த நாடு | போட்டி | விகிதம் |
| 1985 | இலங்கை | 3 | 1-0 |
| 1992 | இலங்கை | 2 | 1-0 |
| 1993 | இலங்கை | 1 | 1-0 |
| 1995 | பாகிஸ்தான் | 3 | 2-1 |
| 1996 | இலங்கை | 2 | 2-0 |
| 1999 | இலங்கை | 3 | 1-0 |
| 2001 | இலங்கை | 1 | 1-0 |
| 2001 | இலங்கை | 3 | 3-0 |
| 2004 | இலங்கை | 2 | 1-0 |

ங்கையணி தொடர் வெற்றிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கும் முன்பு உத்வேகத்துடன் காணப்பட்ட இலங்கையணி வீரர்கள் தம்மிடம் இருந்த குறைபாடுகளை ஓரளவு நிவர்த்தி செய்திருந்தனர்.

முன்னைய போட்டிகளில் இலங்கையணியின் பந்து வீச்சாளர்கள் மிகுந்த திறமை காட்டும்போது துடுப்பாட்ட வீரர்கள் திறமையாகத் துடுப்பெடுத்தாடுவதில்லை. சில வேளைகளில் ஒருசில துடுப்பாட்ட வீரர்கள் மாத்திரமே ஒழுங்காக விளையாடி ஓரளவு கூடுதலான ஓட்டங்களைப் பெற ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் இலகுவாக ஆட்டமிழந்து விடுவர்.

சிலவேளைகளில் சுழற் பந்துவீச்சில் முரளிதரன் திறமையாகச் செயற்பட்டாலும் அணியின் வேகப் பந்து வீச்சாளர்கள் திறமையாக விளையாடாத காரணத்தினால் எதிரணிகள் அதிக ஓட்டங்களைக் குவித்த சந்தர்ப்பங்களும் உண்டு.

துடுப்பாட்டம், பந்து வீச்சு என்பவை ஓரளவு திறமையாக நடைபெற்றாலும் மோசமான களத்தடுப்பினால் எமது அணி வெற்றி இலக்கை அடையமுடியாமல் திண்டாடியதை நாம் அனுபவத்தினூடு கண்டிருக்கிறோம்.

ஆனால் இம்முறை இவை அனைத்தும் மாறி அணியில் இருந்த அனைவரும் சிறப்பாக தத்தமது பங்கை உணர்ந்து சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார, சனத் ஜெயசூரியா, மாவன் அத்தப்பத்து, திலகரட்ன டில்ஷான் ஆகிய வீரர்கள் மிகச் சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். குறிப்பாக மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார ஆகிய இருவரினதும் இரட்டைச்சதங்கள், இலங்கை அணியின் எதிர்காலத்தூண்கள் இவர்கள் என்பதை எடுத்துக்காட்டியது.

இப்போட்டித் தொடரைப் பொறுத்தவரை முதல் டெஸ்ட் போட்டியில் மஹேல ஜெயவர்த்தனவும் (237) இரண்டாவது டெஸ்ட் போட்டியில் குமார் சங்ககாரவும் (232) இலங்கையணியின் துடுப்பாட்டப் பொறுப்பைத் தோள்மீது சுமந்து சிறப்பாகச் செயற்பட்டனர்.


பந்துவீச்சினைப் பொறுத்தவரை முதல் டெஸ்ட் போட்டியில் முரளிதரன் 5 விக்கெற்களை வீழ்த்தியபோதும் இப் போட்டித் தொடரில் மிகச் சிறப்பாகப் பந்துவீசியவர் சமிந்த வாஸே! இப்போதுள்ள நிலையில் சமிந்த வாஸ் வஸீம் அக்கரம் வீட்டுச் சென்ற இடத்தை நிரப்புவதாக கிரிக்கெற் ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதில் சிறப்பம்சம் என்னவெனில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு என உருவாக்கப்பட்டிருந்த ஆடுகளத்தில் சமிந்தவாஸ் தனது பத்து வருட அனுபவத்தை உபயோகித்துத் தேவையான நேரத்தில் விக்கெற்கள் விழ வழிகோலினார். இதேவேளை பந்துவீச்சில் சனத் ஜெயசூரியாவை மறந்துவிடமுடியாது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 5 விக்கெற்களை வீழ்த்தி பந்துவீச்சில் தானும் சளைத்தவரல்ல என்பதைத் தெளிவுபடுத்தினார்.

| முதல் டெஸ்ட் வெற்றி | | |
|---|---|---|
| எதிரணி | ஆண்டு | இடம் |
| இந்தியா | 1985 | கொழும்பு |
| பாகிஸ்தான் | 1986 | கொழும்பு |
| நியூஸிலாந்து | 1992 | கொழும்பு |
| இங்கிலாந்து | 1993 | கொழும்பு |
| ஸிம்பாவே | 1996 | கொழும்பு |
| ஆஸ்திரேலியா | 1999 | கண்டி |
| தென்னாபிரிக்கா | 2000 | காலி |
| பங்களாதேஷ் | 2001 | கொழும்பு |
| மேற்கிந்தியத் தீவுகள் | 2001 | காலி |

முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த போதிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டியும் மழை காரணமாக வெற்றி தோல்வியினறி முடிவடைந்துவிடுமோ என்ற சந்தேகம் எழுந்த போதும் இலங்கை அணி வீரர்களின் முயற்சியால் இவ வெற்றி கிட்டியுள்ளது.





தற்போதுள்ள நிலவரப்படி இலங்கையணி டெஸ்ட் மற்றும்ஒருநாள் போட்டிகளில் வெற்றிமேல் பல வெற்றிகள் பெற்று மீண்டும் சர்வதேச தரப்படுத்தலில் தனது இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

எப்படியிருப்பினும் இலங்கை அணி வீரர்களின் ஒற்றுமையும், வெற்றிபெற வேண்டும் என்ற உணர்வுமே இந்த டெஸ்ட் தொடரில் இலங்கையணி வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தது எனலாம்.

சர்வானந்தா

# ஒலிம்பிக் 2004...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த பெண்களுக்கான 100M ஓட்டப்போட்டி கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனை யார்? என்பதை நிர்ணயிக்கும் இந்தப் போட்டியல் 25 வயதான பெலாரஸ் வீராங்கனை யுலியா வேகமாக ஓடி தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவர் 10.93 விநாடிகளில் குறித்த தூரத்தைக் கடந்து உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனை என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்.

இதன்மூலம் அவர் அந்தப் போட்டியில் நிலவி வந்த அமெரிக்காவின் ஆதிக்கத்தைத் தகர்த்துள்ளார். 1980ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் இருந்து அமெரிக்க வீராங்கனைகளே 100M ஓட்டத்தில வெற்றிவாகை சூடி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'பேட் மேன்' & 'சூப்பர் மேன்'

சிறுவயதில் 'பேட்மேன்' ஒலிம்பிக்கில் 'சூப்பர் மேன்' என்று ஜஸ்டின் காட்லினை வர்ணித்துக் கொண்டிருக்கிறது மெய்வல்லுனர் உலகம்.

உலகமே எதிர்பார்த்த ஏதென்ஸின் 100M ஓட்டத்தில் தங்கம் வென்ற இவர் 'மின்னல் வேக வீரர்' என்ற பெருமையைப் பெறுகிறார் 22 வயது இளம் அமெரிக்க வீரரான ஜஸ்டின்.

இதன்மூலம் மிக இளம் வயதில்(22) ஒலிம்பிக்கில் 100M ஓட்டப்போட்டியில் முதல் இடம்பிடித்த வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

# மீண்டும் தொடரும் மிடுக்கு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொஞ்சம் வித்தியாசமாக இருக்கட்டுமே என்று இராசவள்ளிக் கிழங்கு சிலவற்றை எடுத்து தோலைச் சீவத்தொடங்கினாள். அடிக்கடி ஊரில் இருந்து இப்படி ஏதாவதொன்றை சத்தியபாமாவின் தாயார் அனுப்பிவிடுவார்.

ஏ-9 பாதை திறந்து இப்போது போக்குவரத்துக்கள் சீரான பிறகு யாழ்ப்பாணத் தோட்டங்களில் விளையும் பொருட்கள் எல்லாம் கொழும்புக்குத் தாராளமாக வந்துகொண்டிருக்கின்றன.

தோல்சீவிய இராசவள்ளிக் கிழங்கை அடுப்பில் வைத்துவிட்டு தேங்காய் துருவி பால் பிளிந்து அதனையும் சேர்த்த பின்பு சின்னவனின் படிப்பை சற்றுப் பார்க்கலாம் என்று படிப்பு மேசைக்கு சென்றபோது அவன் அங்கே நித்திரை தூங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து, எல்லோருக்கும் சாப்பாடு கொடுத்து நித்திரைக்கு அனுப்பிய போது நேரம் இரவு 9.45.

கணவன் பி.பி.சி. வானொலிச் சேவைக்கு ரேடியோவை திருகிவிட்டு சாப்பாட்டு மேசைமுன் வந்து உட்கார்ந்தார். இருவருமாகச் சாப்பிட்டார்கள்.

சாப்பாடு முடிந்ததும் பாத்திரங்களை கழுவி மினுக்கி அடுக்கினாள் சத்தியபாமா. அதன் பிறகு வெளியே உள்ள கொடியில் காய்ந்த உடுப்புகளை எடுத்து, நாய்க்குச் சாப்பாடு போட்டு கூட்டுக்குள்ளால் திறந்துவிட்டு கேற்றைப் பூட்டி மின்விளக்குகளை அணைத்து விட்டு நித்திரைக்கு வந்த போது இரவு பதினொருமணி. அதாவது ஒருநாள் வேலை நிறைவு பெற்றிருந்தது.

மீண்டும் நினைத்துக் கொண்டாள் சத்தியபாமா நாளை காலை 5.00 மணிக்கு எழும்பவேண்டும்.

ஒரு பெண் நல்ல மனைவியாக, அம்மாவாக, குடும்பத் தலைவியாக பரிணமிப்பதென்பது எவ்வளவு பெருமையானதொரு விடயம். இவளைச் சிறைப்படுத்தியது யார்? இவள் விடுதலை வேண்டும் என்று யாரிடம் கேட்பது? இவளுடைய தன்னலமற்ற சேவைக்கு யாரால் ஈடுகொடுக்கமுடியும். பெண் ஆட்சிகரமான ஒரு ஜென்மம்தான். நிச்சயமாக வெள்ளிக்கிரகத்தில் இருந்துதான் வந்திருப்பாள்!

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்!

*(யாவும் கற்பனை)*

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல - 25

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



ஒலிம்பிக் திருவிழாவில் இலங்கை அணி சார்பாக கலந்துகொண்ட குழுவின் தலைவி இவர். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 25**
**'சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 25**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புவரின் முழுப்பெயர் :-..............................

அனுப்புவரின் முகவரி :-..............................
..............................
..............................

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 23**
**சரியான விடை**





### விமல் வீரவன்ச

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல. 23 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | நா.தர்மராசா<br>இராசவீதி,<br>கோப்பாய். |
| இரண்டாம் பரிசு | :- | த.தமயந்தி<br>வரணி மத்தி,<br>வரணி. |
| மூன்றாம் பரிசு | :- | பு.டியாழினி<br>வியாபாரிமூலை,<br>பருத்தித்துறை. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

வி.செல்வநாயகம், புத்தூர். வ.சிவாஜி, கரணவாய். S.நிகேதினி, கொக்குவில். R.ராஜசந்திரன், நாவாந்துறை. லோ.அபிராமி, வல்வெட்டித்துறை. T.S.S.கீதா+ பூரணி, வட்டுக்கோட்டை. ந.சிந்துஜன், மீசாலை. V.இளங்கோ, கோப்பாய். திருமதி.S.பாக்கியநாதன், சங்கானை. க.வத்ஷலா, சித்தன்கேணி. L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. த.யோகராசா, சாவகச்சேரி. தி.மயூரகிரி, நீர்வேலி. திருமதி. சோமசுந்தரம், யாழ்ப்பாணம். சி.விவேகானந்தன், வியாபாரிமூலை. K.யாழினி, கொக்குவில். இ.கவிநிலா, கிளிநொச்சி. T.தாரகன், பண்டத்தரிப்பு. மா.ராகவன், மல்லாகம். இ.சுவர்னா, மூளாய். மு.ஜெயந்தி சித்தன்கேணி. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. யோ.யோகராசா, சங்கானை. சு.ரஞ்சினி, முல்லைத்தீவு. ம.பற்பராஜா, கொக்குவில். பா.யோகமலர், வரணி. ச.பிரபாகர், மல்லாவி. சு.தர்ஷிகா, யாழ்ப்பாணம். மு.ஜானுயன், இணுவில். து.நக்கீரன், மல்லாகம். மா.பாவேந்தன், ஸ்கந்தபுரம். சி.எழிலினி, மானிப்பாய். J.காவேரி, சித்தன்கேணி.




தே.தேவதர்ஷா
வயது:- 20
கோப்பாய் இ்ராசவீதி,
லைடன் பாம் அருகாமை,
கோப்பாய்.
T.V, பத்திரிகை, கவிதை.


சி.சுதர்சன்
வயது:- 17
C/O தர்ஷன் வீடியோ,
7ம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.
T.V, பத்திரிகை.

ச.டனேஸ்
வயது:- 19
இல-419, திருநகர்,
மல்லாவி.
பத்திரிகை, வானொலி.

விது
வயது:- 16
71, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
இயற்கையை ரசித்தல்,
அரட்டை.

சி.மாலினி
வயது:- 21
606/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
பேனா நட்பு, பத்திரிகை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 25



அனுப்ப வேண்டிய முகவரி-

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 25**
**'சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ..............................

### இடமிருந்து வலம்

(1) செவ்வாய்க்கிரகத்தை இப்படியுமழைப்பர். (5) அளவைகளிலொன்று. (6) ஆடையை இப்படியுமழைப்பர். (7) கால் - இப்படியுமழைப்பர். (8) இக்காலத்தில் குளிர் அதிகம். (9) ஒருவகைப் பறவை. (11) பூமியைக் குறிக்கும் ஓர் சொல். (12) மழை - வெயிலிலிருந்து எமைக் காக்க உதவுவது.

### மேலிருந்து கீழ்

(1)அதிசயம் - இதனை இப்படியும் கூறுவர். (2) இரு உள்ளங்களிடையே ஏற்படும் அன்பு. (3) கரி -இப்படியுமழைப்பர். (4) மருத்துவக் குணமுடைய செடி. (7) இதை எலிகள், குருவிகள் உணவாகக் கொள்ளும். (9) ஒரு இலக்கம். (10) நாம் இவற்றை உண்பது உடல் நலத்திற்கு நல்லது.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 23இன் விடைகள்

### இடமிருந்து வலம்

(1) பிரபஞ்சம் (5) தியாகம் (6) களிறு (8) பரதவர் (9) கொலை.

### மேலிருந்து கீழ்

(1) பிரதிமை (2) படிகம் (3) சதி (4) ஒற்றுமை (6) கர்வம் (7) அபலை.

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | வி.அசோக்<br>இணுவில் கிழக்கு,<br>இணுவில். |
| இரண்டாம் பரிசு | :- | கை.தாரணி<br>குடாரப்பு,<br>நாகர்கோவில். |
| மூன்றாம் பரிசு | :- | திருமதி. ச.கணேசமூர்த்தி<br>பருத்தித்துறை பிரதேச சபை. |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

வி.தர்மராஜா, பருத்தித்துறை. கே.அரசேஸ்வரன், நல்லூர். செ.இராஜதேவி, கோப்பாய். பா.செல்வராணி, சங்கானை. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. சி.சயந்தன், வட்டுக்கோட்டை. ந.சஞ்சயன், நாகர்கோவில். க.வத்ஷலா, சித்தன்கேணி. சி.விவேகானந்தன், வியாபாரிமூலை. சு.விதுஷன், வண்ணார்பண்ணை. H.சுகிதா, யாழ்ப்பாணம். ர.றிசிக்கா, நாவற்குழி. இ.கவிதாரணி, வவுனியா. சு.அனித், திருநெல்வேலி. S.பிரபாகர், மல்லாவி. வ.நிசாந்தன், நயினாதீவு. சு.ராகினி, காரைநகர். ரா.கபிஷன், வல்வெட்டி. ம.தர்ஷலா, மூளாய். த.பிரதீபன், மீசாலை. தி.விஜிதரன், யாழ்ப்பாணம். செ.கமலினி, புங்குடுதீவு. சி.ஜனார்த்தனன், சுன்னாகம். பா.மாதவி, பண்டத்தரிப்பு.

# ஒலிம்பிக் ஷோ




மராத்தோன் போட்டி நிகழ்வு ஆரம்பமாகும் இடமே இது. மராததோன் என்ற இந்த இடத்திலிருந்து ஏதென்ஸ் நகரின் மையப் பகுதிக்கு ஓடிவரும் 26மைல் தூர ஓட்டப்பந்தயமே இன்றுவரை மராத்தோன் என்றழைக்கப்படுகிறது. 2,200 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறு கிராம மாக இருந்த மராத்தோன் இன்று கிரேக் கத்தின் நாகரிக விளையாட்டு வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.


இவர்கள் 4X100 மீற்றர் பிரீ ஸ்டைல் தொடர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற ஆஸ்திரேலிய பெண்கள் அணியினர். இடமிருந்து வலம் ஆலிஸ் மில்ஸ், லிஸ்பத் லெண்டன், பெட்ரியா தாமஸ், ஜோடி ஹென்றி.




ஒலிம்பிக் நிகழ்வில் ஈக்வைஸ்ட்ரியன் என்ற ழைக்கப்படும் குதிரையேற்றப் போட்டிகள் நடை பெறவுள்ள மைதானமே இது. இம் மைதான த்தில் 15,000பேர் வரை அமர்ந்து பார்க்கக் கூடிய வசதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஏதென்ஸில் நடைபெறும் ஒலிம்பின் நிகழ்வில் மகளிருக்கான ஜிம்னாஸ்டிக் பீம் பிரிவுப் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தும் கனாவின் மெலேனி பான்வில்லே.



உலகெங்கிலும் இருந்து 390 வீரர்களும், வீராங் கனைகளும் பங்கேற்ற துப்பாக்கிச் சுடுதல் போட்டி நடைபெற்ற அரங்கே இது. இதில் 4,000 ரசிகர்கள் அமர்ந்து பார்க்கும் வசதியுள்ளது.



400 மீற்றர் பிரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற ஆஸ்திரேலியாவின் இயான் தோர்ப், வெள்ளி வென்ற ஆஸ்திரேலியாவின் கிராண்ட் ஹேகட் மற்றும் வெண்கலம் வென்ற அமெரிக்காவின் க்லீட் கெல்லர்.





நீங்கள் இங்கே பார்ப்பது பிறந்து 2 வாரங்களேயான சிங் கக் குட்டியை. தென் ஆபிரிக்காவின் ஜோஹன்னஸ்பேர்க் கில் உள்ள சிங்கங் களின் பூங்காவில், ஒரு சிங்கம்4 குட்டி களை ஈன்றுள்ளது. வெள்ளை வெளே ரென காட்சிதரும்இக் குட்டிகள் பார்வை யாளர்களைப் பெரி தும் கவர்கின்றன.



படத்தில் நீங்கள் பார்ப்பது உண்மையான திமிங்கலத் தையே. பிரேசில் நாட்டின் ஜெனெய்ரோ நகர கடற்கரையோ ரம் கரையொதுங்கிய இத்திமிங்கலத்தை மீண்டும் கடலுக் குள் அனுப்ப முயற்சிகள் நடைபெறும் காட்சி. இத்திமிங்க லம் 10தொன் எடையும், 10மீற்றர் நீளமும் கொண்டது.

இப் பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தாரால் இல.15, வென்னாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது